THE SUDAROLI

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

விலை : ரூபா 25 பக்கங்கள் 28 வார மலர்

மே 06 - மே 12 , 2012

May 06 - May 12, 2012




## தலைக் கனம் இல்லாத 'தல'



# மே முதல் நாளும் 19 ஆம் நாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆண்டுகளைக் கடந்து...



சுடரொளியின் சகோதரப் பத்திரிகையான உதயன் பத்திரிகை நிறுவனத்துள் அத்துமீறி நுழைந்த காடையர்கள் மிலேச்சுத்தனமாக மேற்கொண்ட தாக்குதலில் இரு பணியாளர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயப்படுத்தப்பட்டனர். அத்துடன் கணனிப் பகுதியில் இருந்த அனைத்து கணனிகளும் துப்பாகி ரவைகளால் சல்லடை போடப்பட்டன. இந்த கறைபடிந்த சம்பவம் இடம்பெற்று 6 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.



## பறந்து சென்று இலக்கைத் தாக்கும் புதிய எந்திர துப்பாக்கி

டேப்லட் மூலம் கட்டுப்படுத்தும் புதிய பறக்கும் எந்திர துப்பாக்கி ஒன்றைத் தயாரித்து, அதன் செயல் விளக்க வீடியோ யூடியூப்பில் விடப்பட்டிருக் கிறது.

ஹெலிக்காப்டர் போன்று பறக்கும் ஒரு குவேட்ரேட்டர் எந்திரத்தை உருவாக்கி, அதில் இந்த எந்திர துப்பாக்கி பொருத்தப்பட்டுள் ளது. இந்த துப்பாக்கியின் விசேஷம் மணிக்கு அதிகபட்சமாக 50 கிமீ வேகத்தில் இந்த குவேட்ரேட்டர் பாய்ந்து செல்லும்.

அதோடு இந்த பறக்கும் எந்திர துப்பாக்கி யில் கமராவும் பொருத்தப்பட்டுள்ளதால் இலக்கை சரியாக குறிவைத்து ஏவ முடியும். இதனால் மனிதர்களையும், பறவைகளையும் கூட வித்தி யாசப்படுத்தி அறிந்து கொள்ளும் வகையில் இதன் கமரா உதவும்.

இந்த எந்திரத் துப்பாக்கியின் முக்கிய அம் சமே, இதை டேப்லட் மூலம் இயக்க முடியும் என்பதுதான். இதனால் இருக்கும் இடத்தில் இருந்தே இந்த பறக்கும் எந்திர துப்பாக்கியை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியும்.

## விண்வெளியில் பூமியைப் போன்ற கிரகங்கள் கண்டுபிடிப்பு

*விண்வெளியில் நட்சத்திரங்களைப் போன்று ஏராளமான கிரகங்கள் காணப்படுகின்றன. அந்த கிரகங்கள் பூமியை போன்ற அமைப் பும், தோற்றமும் கொண்டதாக இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விண்வெளி விஞ்ஞானி ஆதித்யா சோப்ரா தலைமையிலான குழுவி னர் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டனர்.*

*அந்த ஆய்வில், பூமியை போன்றுள்ள கிரகங்கள் மனிதர்கள் வாழ தகுதியுள்ளவை யாக இருக்கின்றன. அங்கு திரவ நிலையில் தண் ணீர் மற்றும் சீரான தட்பவெப்ப நிலை போன் றவை இருப்பது தெரியவந்துள்ளது.*



## தண்ணீருக்குள் துல்லியமாக படம் எடுக்கும் புதிய சொனி கமரா

சொனி ஒரு புதிய கமராவை அறிமுகம் செய்திருக்கிறது. இந்த புதிய கமராவிற்கு எடிஆர்-ஜிடபுள்யு77வி என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கமராவின் சிறப்பு என்னவென்றால் இந்த கமரா தூசு மற்றும் தண்ணீர் ஆகியவற்றை சமாளிக்கும் சக்தி கொண்டதாகும். தற்போது இந்த கமரா ஜப்பானில் களமிறங்கி இருக்கிறது. விரைவில் ஐரோப்பாவிலும் இந்த கமரா களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த கமரா எந்த அளவிற்கு சக்தி வாய்ந்தது என்றால் இது தண்ணீரில் 16 அடி ஆழத்தில் 1 மணி நேரம் இருந்தாலும் இந்த கமரா எந்தவித பாதிப்பும் அடையாது. அதுபோல் தூசும் இந்தக் கமராவைத் தாக்க முடியாது. மேலும் இது ஒரு கைக்கு அடக்கமான கமரா ஆகும். இதை வெளியில் எடுத்துச் செல்வதும் மிக எளிதாக இருக்கும். அதுபோல் இதை இயக்குவதும் மிக எளிதாக இருக்கும்.

இந்தக் கமரா பல சூப்பரான தொழில் நுட்பங்களுடன் வருகிறது. குறிப்பாக இந்த கமரா 1920 X 1080 பிக்சல் ரெசூலேசன் கொண்ட 3 இன்ச் அளவில் ஒரு அட்டகாசமான தொடு வசதி கொண்ட டிஸ்ப்ளேயைக் கொண்டிருக்கிறது. ஒரு 10எக்ஸ் ஆப்டிக்கல் சூமும் ஒரு 120எக்ஸ் டிஜிட்டல் சூமும் இந்த கமராவில் உள்ளன. அதோடு எக்ஸ்மர் ஆர் சிஎம்ஒஎஸ் சென்சாரும் இந்த கேமராவில் உண்டு.

இணைப்பு வசதிகளுக்காக இந்த கமரா யுஎஸ்பி மற்றும் எச்டிஎம்ஐ வசதிகளைக் கொண்டுள்ளது. இந்த கமராவில் 1080பி வீடியோ பதிவு செய்யும் வசதியையும் அனுபவிக்கலாம். 16ஜி சேமிப்பைக் கொண்டிருக்கும் இந்த கமராவின் சேமிப்பை எஸ்டி கார்ட் மூலம் விரிவு செய்யமுடியும்.

இந்த கமராவில் ஜிபிஎஸ் வசதி உள்ளதால் இதன் மூலம் ஜியோடேக்கிங் சூட்டை எடுக்க முடியும். தண்ணீருக்கு அடியில் இந்த கமரா மூலம் படம் எடுத்தாலும் வண்ணம் மாறாமல் மிகத் துல்லியமாக படம் எடுக்க முடியும். அதுபோல் வீடியோவும் எடுக்க முடியும்.

இந்த நவீன சொனி கேமரா ஊதா, கறுப்பு மற்றும் வெள்ளி ஆகிய நிறங்களில் வருகிறது.

UTHAYAN

Guest House - II

No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.

T.P: 021 – 2222330,
021 – 5677603, 071 - 5 36 36 36

Spend your Holidays with homely hospitality in Jaffna. Located ½ KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே முதல் நாளும் பத்தொன்பதாம் நாளும்

சந்திரசேகர ஆசாத்

1880ம் ஆண்டு மே முதல் நாளில் 8 மணி நேர வேலை உட்பட அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள் நடத்திய பேரணி மீது கூலிப்படையினரும், முதலாளிகளால் ஏவப்பட்ட குண்டர்களும் இணைந்து தாக்கிய போது நான்கு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். வீழ்ந்து பட்ட தோழர்களின் குருதியில் தங்கள் கொடிகளைத் தோய்த்து செங்கொடிகளாக்கி பேரணியைத் தொழிலாளர்கள் தொடர்ந்தனர். வீரம் செறிந்த அப்போராட்டம் உலகத் தலைநகரங்களெங்கும் பரவி படிப்படியாக எட்டுமணிநேர வேலை உட்பட பல கோரிக்கைகளை வென்றெடுக்கும் நிலைமையை உருவாக்கியது...1881ல் பொதுவுடமைக் கட்சிகளின் 2 வது அகிலம் மே தினத்தை உலகத் தொழிலாளர் தினமாகப் பிரகடனம் செய்தது. அன்றிலிருந்து ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை ஒலிக்கும் ஒரு உந்து சக்தியாக மேதினம் விளங்கி வருகிறது. இலங்கையில் அரசாங்கக் கட்சிகள் உட்படப் பல கட்சிகளும் மே நாளைக் கொண்டாடியுள்ளன.

இலங்கை அரசாங்கம் அதே மே மாதத்தில் வரும் வரும் பத்தொன்பதாம் நாளை இராணுவ வீரர்கள் தினமாகப் பிரகடனம் செய்து ஒரு மாதகாலத்திற்குக் கொண்டாட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இது இராணுவ வீரர்கள் தினம் எனக் கூறப்பட்ட போதிலும் அடிப்படையில் முனைப்புப் பெற்று மேலோங்கிய நிலையிலிருந்த தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப்போராட்டத்தைத் தோற்கடித்த பெருமிதத்தை பிரகடனம் செய்யும் நாளாகவே கொண்டாடப்படுகிறது. அதாவது போரின் இறுதி நாட்களில் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களைக் கொடூரமான முறையில் கொன்று, ஏராளமானோரை ஊனப்படுத்தி, சொத்துகளை அழித்து ஒடுக்குமுறையை நிலைநிறுத்திய சாதனையைச் செய்து முடித்ததன் நினைவு நாளாகவே இது பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் இலங்கைப் படையினர் மேற்கொண்ட போர்க்குற்றங்களையும், மனிதகுல விநோத நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தும் ஒரு ஆயுதமாகவே இலங்கை அரசாங்கத்தால் இது கையாளப்படுகிறது.

மே முதலாம் நாளில் சகலவிதமான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான மேதினத்தைக் கொண்டாடிய அரசு, பத்தொன்பதாவது நாளிலே முழு உலகாலும் கண்டனம் செய்யப்படும் கொடிய ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தி ஒரு மாத கால விழாவைப் பிரமாண்டமான முறையில் நாடுமுழுவதும் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சர்வதேச நாளைக் கொண்டாடிய ஆட்சியாளர்கள், ஒடுக்குமுறையை நியாயப்படுத்தி விழா எடுக்கும் போது ஒரு பெரும் முரண் வெளிப்படுவதாக ஒரு தோற்றம் ஏற்படக் கூடும். வார்த்தை காலங்களையும், வெற்றுக் கோஷங்களையும் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு நடைமுறைகளை உற்று நோக்குவோமானால் இதில் ஆச்சரியப்பட எதுவுமே இருக்கப் போவதில்லை.

ஏனெனில், மே தின நிகழ்வுகள் கூட உழைக்கும் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதையும், தமிழ் மக்கள் மீதும், முஸ்லிம், மலையக மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் கீழ்த்தரமான பௌத்த சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளையும் நியாயப்படுத்தும் கவசமாக மேதினம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மே தினம் தொடர்பாக அரசாங்கத்தால் கோஷங்களும் தொனிப் பொருட்களும் முன் வைக்கப்பட்டாலும், நடைமுறையில் மேதினத்திற்கு மூன்று நாட்கள் முன்பாக சாதாரண மக்களின் உணவுப் பொருளான பாணின் விலை மூன்று ரூபாவால் அதிகரிக்கப்பட்டு ஏழை மக்களின் வயிற்றில் பலத்த அடி போடப்பட்டது. அதுவே உண்மையான அரசாங்கத்தின் நடைமுறையிலான மே தினப் பிரகடனமாகும்.

இம்முறை அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேதினம் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளையோ, ஒடுக்குமுறைகளுக்கு எதிரான நிலைப்பாட்டையோ பிரகடனப்படுத்தவில்லை. அதாவது மே தினத்தின் அடிப்படை நோக்கம் முற்றாகவே நிராகரிக்கப்பட்டு விட்டது.

மாறாக இது ஒன்றுபட்ட தேசம் என்ற அடிப்படையை முன்வைத்து அபிவிருத்தி, சமாதானம், நல்லிணக்கம் என்ற தொணிப் பொருளிலேயே இடம்பெற்றது. ஆனால் இத்தொனிப் பொருட்களுக்கு நேர்விரோதமான முறையிலேயே அரசும் அரச ஆதரவாளர்களும் செயற்பட்டு மே தினத்தை வரவேற்றுள்ளனர்.

தம்புள்ளவில் ரண்கிரி விகாரையின் பீடாதிபதி தலைமையில் சென்ற ஐநூறுக்கு மேற்பட்ட பௌத்த பிக்குகள் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த முஸ்லிம் பள்ளிவாசலை இடித்தனர். இச் சம்பவம் இடம்பெற்ற போது பொலிசார் கைகட்டிப் பார்த்திருந்தனர். அது மட்டுமின்றி அங்குள்ள காளி கோவிலை அகற்றும்படியும் அப்படி அகற்றப்படாவிட்டால் அதுவும் இடிக்கப்படும் எனவும் மிரட்டியுள்ளனர். மேலும், இது தொடர்பாகப் பிரதமர் அலுவலகம் அப்பள்ளிவாசலை வேறு இடத்தில் அமைக்க ஏற்பாடு செய்துள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் தந்தை செல்வாவின் சிலை திருமலையிலும் விவேகானந்தர் சிலை மட்டக்களப்பிலும் உடைக்கப்பட்டன. பின்பு சில நாட்கள் முன்பாக மட்டக்களப்பில் மகாத்மாகாந்தி, விபுலானந்தர், புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, பேட்டண் பவல் ஆகிய தமிழ் மக்களால் மிகவும் மரியாதைக்குரியவர்களாக போற்றப்படுபவர்களின் சிலைகள் உடைக்கப்பட்டன, குறிகட்டுவானில் ஒரு தமிழ் இளைஞன் நயினாதீவு நாகவிகாரைப் பிக்குவால் நையப்புடைக்கப்பட்டான். பௌத்த மக்கள் எவருமே வாழாத பகுதிகளெங்கும் புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. பாடல் பெற்ற வரலாற்றுத் தலமான திருக்கேதீஸ்வரத்தில் ஒரு வெண்கலத்தாலான பௌத்த சிலை நிறுவப்பட்டுள்ளது.

இவ்வகையில் தான் நடைமுறையில் தமிழ் மக்களுடனான நல்லிணக்கம், சமாதானம் என்பன பேணப்படுகின்றன.

அதாவது தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் மதவழிபாட்டு உரிமைகள் மறுக்கப்படுவதுடன் கீழ்மைப்படுத்தப்படுகின்றன. சாதாரண மனிதர்களாக நடமாடும் உரிமை உதாசீனம் செய்யப்பட்டு சிங்களவர்களுக்குக் கீழானவர்களாக மதிக்கப்படும் நிலை உருவாக்கப்படுகிறது.

இந்நிலையில் நல்லிணக்கம், சமாதானம் என்பன மே தினம் மூலம் வலியுறுத்தப்படுகிறதென்றால் அதன் அர்த்தம் சிங்கள இனம் அடக்கும் இனமாகவும், ஏனைய இனங்கள் அடக்கப்படும் இனங்களாகவும் தொடர்ந்து அடிமைகளாக வாழ வேண்டும் என்பதற்கே அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இது சர்வதேச மேதின நோக்கங்களுக்கு நேர் விரோதமானதல்லவா?

இப்படியான பௌத்த சிங்கள மேலாதிக்கம் நிலை நிறுத்தப்படும் நிகழ்ச்சிநிரல் அரச அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் ஒன்றுபட்ட தேசம் என்ற அடிப்படையில் அரச மேதினம் நடத்தப்படுகிறது. தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் ஒரே தரத்தில் வைத்துக் கணிக்கப்படுவார்களாயின் ஒன்றுபட்ட தேசம் என்பது நியாயமான ஒரு கோஷமாக இருக்க முடியும். ஒரு இனம் அடக்கும் இனமாகவும் ஏனைய இனங்கள் அடக்கப்படும் இனங்களாகவும் இருக்கும் போது ஒன்றுபட்ட தேசம் என்பது ஏனைய இனங்களின், மதங்களின் தனித்துவத்தை அழிக்க முனையும் அப்பட்டமான உரிமை மீறலாகும்.

எனவே, உலகம் முழுவதும் மே தினம் அடக்கி ஒடுக்கப்படும் அபிலாசைகளை வெளியிடும் குரலாக இருக்கும் போது இலங்கை அரசோ, மே தினத்தை அடக்கி ஒடுக்கும் மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களை நிறைவேற்றும் ஒரு ஆயுதமாகப் பாவித்து அதைக் கீழ்மைப்படுத்தி விட்டது.

அதே போன்று மே 19 இராணுவ வீரர்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மரணமடைந்த படையினருக்கு அஞ்சலி செலுத்தும் தினமாகவும் படையினரின் சேவைகளைக் கௌரவிக்கும் தினமாகவும் இது கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறது. மனித நேய அடிப்படையில் மட்டுமின்றி இராணுவ வழிமுறைகளில் கூட எதிரிப்படையானாலும் இறந்த பின்பு அவர்களுக்குத் தனியான கௌரவம் வழங்கப்படுவதுண்டு, இது உலகம் முழுவதும் பின்பற்றப்பட்டு வரும் இராணுவ சம்பிரதாயமாகும்.

ஆனால், வடக்குக் கிழக்கில் ஏறக்குறைய 30,000 விடுதலைப் புலிகளின் கல்லறைகள் இலங்கைப் படையினரால் சிதைக்கப்பட்டன. இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளின் கல்லறைகள் அமைக்கப்பட்ட இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. படைவீரர்கள் என்றாலென்ன, போராளிகள் என்றாலென்ன. போரில் அவர்கள் தங்களுக்காக இறப்பதில்லை. அரசுக்காகவோ அல்லது தான் சார்ந்த மக்கள் இனத்திற்காகவே உயிரை அர்ப்பணிக்கின்றனர். ஒருவனின் உயிர் போய் விட்டால் அவனின் சகல சுக துக்கங்களும் அதனுடன் போய் விடுகின்றன. எனவே தான் உலகம் முழுவதும மரணமடைந்த போர் வீரர்களும் போராளிகளும் மகத்தானவர்களாகப் போற்றப்படுகின்றனர். ஆனால், இலங்கை இராணுவமோ போராளிகளின் கல்லறைகளை அடையாளம் தெரியாமல் அழித்ததன் மூலம் சர்வதேச இராணுவ சம்பிரதாயங்களைத் துச்சமாக மதித்திருக்கின்றனர். அதாவது ஒரு ஒழுக்கமான கட்டுக்கோப்பற்ற இராணுவம் என்பதையும், சர்வதேச இராணுவ விழுமியங்களை விட்டுத் தாமாகவே வெளியேறியவர்கள் என்பதையும் நிரூபித்துள்ளனர்.

அவர்களுக்கென மே 19 பிரகடனப்படுத்தப்பட்டது மட்டுமின்றி ஒரு மாத காலம் அவர்களைக் கௌரவிக்கும் காலமாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதாவது இலங்கை இராணுவம் சர்வதேச நியமங்களை மீறிச் செயற்பட்டமையைக் கௌரவிப்பதன் மூலம் அப்படியான முறைகேடுகளுக்கு இலங்கை அரசு ஊக்கம் கொடுத்துவருகிறது. இன்று இலங்கை படையினரின் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் சர்வதேச அளவில் அம்பலப்பட்டுப் போயுள்ளது. இளம் பெண்களை நிர்வாணப்படுத்தி, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திப் பின் கொன்று நிர்வாணமாக வீசும் அநாகரீகம் சனல் 4 மூலம் உலகம் முழுவதுமே தெரிவிக்கப்பட்டது. நிர்வாணமாக்கிக் கொல்லப்பட்ட ஒரு பெண்ணின் மர்ம உறுப்பில் சப்பாத்துக்காலால் ஓங்கி உதைக்குமளவுக்கு இலங்கை இராணுவம் கேவலமான முறையில் நடந்து கொண்டமையை சனல் 4 மூலம் பார்க்கக் கூடியதாக இருந்தது. இறந்தவர் எதிரியாயினும் இராணுவ மரியாதையுடன் புதைக்கும் சர்வதேச இராணுவ சம்பிரதாயம் கூட காலில் போட்டு மிதிக்கப்பட்டது.

கெயிட்டிற்குச் சமாதானப் படையாகச் சென்ற இலங்கைப் படையினர் பாலியல் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா சபையால் திருப்பி அனுப்பப்பட்டமையை மறந்துவிட முடியுமா?

அப்படியான படையினரைக் கௌரவிப்பதற்கு ஒரு மாதம் ஒதுக்கப்படுகின்றது என்றால் அல்லது அப்படிக் குற்றங்களைத் தங்கள் இராணுவம் செய்வதில்லை எனத் திருப்பித் திருப்பிச் சொல்லி வந்தால் அரசாங்கம் படையினரின் செய்கைகளை ஏற்கின்றது என்று தான் அர்த்தம்.

எப்படியிருந்த போதிலும் மே ஒன்றில் இலங்கை அரசு நடத்திய மே தினமும், மே 19 தொடக்கம் இலங்கை அரசு நடத்தவுள்ள படை வீரர் மாதமும் இலங்கை அரசு சர்வதேச நியமங்களை ஏற்கத் தயாரில்லை என்பதைப் பிரகடனம் செய்யும் வகையிலேயே அமைந்துள்ளன. அதன் பலன் இலங்கை தன்னைத் தானே தனிமைப் படுத்தும் நிலைக்கே இட்டுச் செல்லும்.

**உலகம் முழுவதும் மே தினம் அடக்கி ஒடுக்கப்படும் அபிலாசைகளை வெளியிடும் குரலாக இருக்கும் போது இலங்கை அரசோ, மே தினத்தை அடக்கி ஒடுக்கும் மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களை நிறைவேற்றும் ஒரு ஆயுதமாகப் பாவித்து அதைக் கீழ்மைப்படுத்தி விட்டது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலையா நினைவுகள்

# மாணவர்களைச் சமமாக நோக்குவோம்

■ நெடுந்தீவு மகேஷ்



"நமக்கு வேறு வழியில்லை அடிபணிந்தே வாழச் சபிக்கப்பட்ட இனம். கேள்வி கேட்பதற்கு நமக்கு உரிமையும் கிடையாது. சரியாகக் கேட்கவும் தெரியாது. காரணம் நம்மிடம் கல்வி கிடையாது. உனக்கு யாரையாவது நிற்க வைத்துக் கேள்வி கேட்க வேண்டும் என்று தோன்றினால் முதலில் படி. உன் உடல்வலுவைக் கொண்டு நீ யாரை வீழ்த்தினாலும் அவர்கள் திரும்ப எழுந்து விடுவார்கள். புத்தியால் அடிக்கக் கற்றுக் கொண்டால் மட்டுமே நிரந்தரமாக நீ ஜெயிக்க முடியும். இது ஒரு கிராமப்புறத்தான் அன்று சொல்லிய வார்த்தை. அவன் தனது அனுபவம் தந்த பாடத்தில் மூலம் கற்றுக் கொண்டவை தாம் அவை.

பள்ளிக்குப் போகமாட்டேன் என அடம்பிடித்த தோமஸின் காதுகளில் வீழ்ந்த அவை உடனடியாகவே அவனது கருத்துக்குக் கொண்டு செல்லப்படவில்லை. அவனுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் உயர்ந்த மதிப்புடையோர் பக்கமே தமது பார்வையையும் கவனத்தையும் வைத்துக் கொண்டு கற்பித்தார்கள். அவனுக்குத் தெரியாதவற்றையும் விளங்காதவற்றையும் கேட்டுக் கற்கும் நெருக்கத்தில் அவனை அவர்கள் என்றுமே வைத்துக்கொண்டதில்லை. ஏதாவது தவறு செய்து விட்டால் அவனது தந்தையின் "கூலித் தொழிலைக் கூலி செய்து அதனைப் போய்ச் செய்" என்றோ "ஆடு மாடு மேய்க்கப் போகலாமே" என்றோ அவனை ஏசுவதற்கு அவர்கள் தயங்கியதில்லை. இவ்வாறு செய்வது அவனைப் பொறுத்தவரை அவர்களின் வழக்கமாகியது. சிறுவனான அவனது மனத்தில் அவை பாறாங்கல்லாய் ஏறி இருந்து கொண்டது. ஆசிரியர்களை எதிர்த்து நிற்பது தவறென்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. பள்ளிக்குப் போகாமல் வீட்டிலே நின்றுவிடுவது மாத்திரமல்ல ஆசிரியர் சொன்னது போல் தனது தந்தையின் கூலித் தொழிலையே செய்து கொண்டால் எந்தத் தொல்லையும் இல்லையே என்றும் அவன் எண்ணுகின்ற வகையில் பள்ளியில் நெருக்குதல்கள் அதிகரித்தன. ஆனால் அவனது தந்தையும் தாயும் எதற்கும் அடங்கிப் போகவும் அமைதிகாக்கவும் அவனுக்குக் காட்டிய வழிகள் மிகவும் கடினமானதாகவே அவனுக்குத் தோன்றின.

படிப்பதற்கும் படிப்பிப்பதற்கும் இலகுவான வழிகள் இருந்தாலும் எமது நாட்டில் இலவசக் கல்வியே வழங்கப்பட்டாலும் கற்பிப்பவர்களின் மனித நேயமற்ற உவப்பற்ற பெரும்பான்மை எண்ணங்களும், அவற்றின் வெளிப்பாடுகளால் வினையும், அவமானங்களும், அலட்சியங்களும் தோமஸின் கற்கும் விருப்பங்களைச் சிதைத்தன. ஆனால் தந்தையின் கருத்துக்கு மதிப்பளித்து பள்ளிக்குத் திரும்பினான். அவன் அனைத்து இடையூறுகளையும் தாங்கி ஏற்றுக் கொண்டு கல்வியிலே கருத்தூன்றினான். அவனது பணிவு, அடக்கம், படிப்பு யாவுமே அவனை உயர்ந்த நிலைக்கு மலையின் உச்சியில் வைக்கப்பட்ட விளக்காக்கியது. அவன் எதிர்கொண்ட துன்ப துயரங்களுக்குக் காரணராக இருந்த அந்தப் பெரியவர்கள், ஆசிரியர்கள் தலைகுனியும் வகையில் கற்றான். உயர்ந்தான். பலராலும் மதிக்கப்பட்டான். ஆசிரியர்கள் தமது தவறை உணரும் வகையில் மாணவனான தோமஸின் நடத்தைகள் இருந்தன.

இன்றும் இத்தகைய ஆசிரியர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் இலவசக் கல்வியைச் சம்பளம் பெற்றுக் கொண்டு வழங்குபவர்களில் சிலர் மாணவர்கள் அனைவரையும் சமமாக நோக்குவதும் கல்வியை விருப்புடன் வழங்குவதும் இல்லை எனும் போது பள்ளிக்கூடத்தின் மீதும் அங்குள்ள ஆசிரிய ஆசிரியர்கள் மீதும் அவர்களின் வழிகாட்டல்கள் கற்பித்தல்மீதும் வெறுப்பேற்படுவது இயல்பே. பாடசாலை நிர்வாகம் மாணவர்களின் கல்வியிலும், நடத்தையிலும் நல்வழி சார்ந்த மாற்றம் ஏற்படச் செய்யும் நம்பிக்கையும் விருப்பும் தோன்றும் கற்பித்தலை நிகழ்த்தாத வரையில் தோமஸ் போன்று இடைவிலகும் மாணவர் இருக்கவே செய்வர். ஆனால் அவனது தந்தையைப் போன்று இலட்சிய நோக்கின் வலிமையை உணர்த்துவோர் இல்லாது போயின் பலரின் கல்வி பாதியிலே நின்று விடலாம். ஆசிரியர்களே உங்கள் மாணவர்களை அறிந்து உயர்வு தாழ்வு கருதாது அவர்களின் திறன்களை வளர்க்க உதவுங்கள். மாணவர்களே! உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டும் கல்வியைப் பொறுமையுடனும் உங்களுக்குக் கற்பிக்கும் ஆசான்களின் மீது உயரும் நம்பிக்கையுடனும் கற்றுயருங்கள். பெற்றோர் எந்நிலையிலும் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் முரண்படாது நடுநிலையைப் பேண முயற்சிப்பதும் அவசியமாகும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் யாவரினதும் புரிந்துணர்வுடன் கூடிய ஐக்கியம் எமது கல்விச் சமூகத்தின் விழிப்புணர்ச்சிக்கு வழியமைக்கும் உந்து சக்தியாகட்டும்.

■ மைதிலி தேவராஜா

# வாழ்க்கைப் பயணம்

## சிறுகதைத் தொகுப்பு – முருகேசு ரவீந்திரன்

சிறுகதைத் தொகுப்பு நூல்கள் குறைந்தது மாதம் ஒன்று என்ற தொகையிலேனும் வெளிவருவது இன்று வழமையாகி விட்டாலும், தரமானவைகளை வாசகர்கள் விரும்பி வரவேற்று வாசிக்கும் நிலையும் ஓரளவு அதிகரித்தே காணப்படுகிறது.

முருகேசு ரவீந்திரன் அவர்களின் வாழ்க்கைப் பயணம் எனும் சிறுகதைத் தொகுப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. யாழ் இந்துக் கல்லூரி உயர்தரம் - 1985 மாணவ நண்பர்களின் வெளியீடாக நட்பின் சாட்சியாக அது உருப்பெற்றுள்ளது. தமிழைத் தமிழாய்ப் போதித்த யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் அமரர் கந்தையா குமார சிங்கம் நினைவாகச் சமர்ப்பணம். செய்யப்பட்ட சிறுகதைத் தொகுப்பில் பன்னிரண்டு சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதிலுள்ள, சிறுகதைகள் யாவுமே வாசிப்போரை வசப்படுத்திக் கதை சொல்லும் பாங்கினால் சிறப்புப் பெறுகின்றன.

பாத்திர வடிவமைப்புக்கு அழகூட்டும் உரையாடல்களாலும், நடத்தைக் கோலங்களாலும் கதைக்கு உயிர் கொடுத்திருக்கும் திறமை கதைகளில் வெளிப்படுகின்றன.

சமவாழ்வில் நிகழும் சிறு சிறு சம்பவங்கள் சிறுகதைக்கான கருவாகியுள்ளன. நல்ல தமிழில் எளிமையும் இனிமையும் கலந்து சுவையுருக் குலையாமல் அவை எழுதப்பட்டுள்ளன. ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் அன்றாடம் நிகழும் ஒவ்வொரு சம்பவங்களும் கதாசிரியருக்கு கலைத்துவம் மிக்கதாகிக் கருத்துக்குயர் கருவாகி ஒளிர்வதை இவரது கதைகளில் காணலாம். "வேதனை" "இதம்" ஆகிய சிறுகதைகள் ஈழநாடு பத்திரிகையின் கதைக் களத்திலே வெளிவந்த சிறப்புக்குரியவையாகும்.

தலைவாசலில் போடப்பட்டிருந்த வாங்கில் அவர் கால் மடித்திருந்தார். அருகில் வெற்றிலைத்தட்டு அதிலிருந்து ஒரு வெற்றிலையை எடுத்தவர் காம்பைக் கிள்ளி விட்டுச் சுண்ணாம்பைத் தடவினார். வெற்றிலையை வாய்க்குள் திணித்தவர் பாக்குச் சீவலையும் போட்டுக் கொண்டார் என "வாழ்க்கைப் பயணம்" கதையில் வரும் அப்புச்சி மாமாவின் செய்கையையும்,

"அப்பா "அயன்" பண்ணிய ஆடைகளை அணிந்து அதிக காலம் ஆகிவிட்டது. கசங்கிய உடைகளுடனேயே நடமாடித் திரிகிறார். ஒவ்வொரு நாளும் குளிப்பதில்லை. எப்பவாவது குளிக்க வேண்டும் போல் இருந்தால் குளிப்பார். அதேபோன்று முகச்சவரம் செய்வதிலும் அக்கறை காட்டுவதில்லை. எப்போதும் தன்னை மறந்த நிலையில் இருக்கவே ஆசைப்படுகிறார்" என "மீட்சி" எனும் கதையில் வரும் அப்பாவின் வாழ்வொழுங்கையும் விபரிக்கும் கதாசிரியரின் மொழிச்சிறப்பு அவரது கதை எழுதும் வகைதேர்ந்த வடிவத்துக்கு நயம் சேர்க்கிறது.

வாசிப்பில் ஆர்வத்தைத் தூண்டியும், வாழ்க்கைக் கோலங்களின் அழகை இரசிக்கும் வகையிலும் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கருத்துணரும் நிலைக்கு வாசகனை உயர்த்துகிறது. முழுமையாக முருகேசு ரவீந்திரன் அவர்களின் முதலாவது சிறுகதைத் தொகுதி சிறுகதைப் புலத்தில் சிறப்புறத் துலங்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கைப் பயணம் சிறுகதைத் தொகுப்பின் அட்டையை அலங்கரிக்கும் சித்திரக்கல்வி ஆலோசகர் கோ. கயிலாயநாதனின் வண்ணம் நூலின் அழகை அதிகரிக்கின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முதற்தர அறிவிப்பாளராகப் பணியாற்றும் முருகேசு ரவீந்திரனின் வாழ்க்கைப்பயணம் எழுத்துத்துறையில் அவர் கொண்டிருக்கும் ஈடுபாட்டுக்கான ஒரு படிக்கல்லாகும். தொடரும் எழுத்தாக்கங்களால் இலக்கியப் பரப்பில் அவரது நாமம் விளங்கும் என்பது நிச்சயமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸண்டே லீடர் பத்திரிகையில்
திசராணி குணசேகர எழுதிய
கட்டுரை
தமிழில் : ஜெஸ்மின்

# இலங்கையில் குற்றச்செயலும் தண்டனையும்!

காலியில் உள்ள எலிதுர கிராமத்தில் அண்மையில் ஒரு சிங்களச் சிப்பாயினால் ஏற்படுத்தப்பட்ட வன்முறைச் சம்பவம் அனைவரும் அறிந்ததே. விடுமுறையில் சென்ற அச்சிப்பாய் தன்னை 'சேர்' என்று ஒரு தமிழ் இளைஞர் அழைக்காத காரணத்தால் அவன் மீது தாக்குதல் நடத்தியதுடன் சில சிங்கள இளைஞர்களை வரவழைத்து ஏழு வீடுகள், மிதிவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றிற்கு தீ மூட்டி



**வடக்கில் சிங்களப் படையினர் உத்தரவிடுகின்றனர். அங்கு தமிழர்களுக்கு ஒரு உரிமை மட்டுமே உள்ளது. அவர்களுக்குச் செய்யும்படி கூறுவதைச் செய்யும் உரிமைதான் அது.**

எரித்துள்ளான். அத்துடன் அப்பகுதி தமிழ் மக்களின் வீடுகளில் உள்ள பணமும், நகைகளும் களவாடப்பட்டன.

2012 இல் இத்தகைய ஒழுங்கு மீறிய அடாவடித்தனமான செயல் தெற்கில் நடைபெற முடியுமானால் யுத்தகாலப் பகுதியில் வடக்கில் சாட்சியங்கள் ஏதுமற்ற நிலையில் என்னவெல்லாம் நடந்திருக்கக் கூடுமென்பதை ஓரளவாகிலும் ஊகித்துக் கொள்ளலாம்.

விடுமுறையில் உள்ள ஓர் சிப்பாய் தண்டனைக்குத் தப்பும் வகையில் ஆயுதத்துடன் சட்டத்தைத் தன்கையில் எடுத்துக் கொண்டு இவ்விதமாகச் செயற்பட முடியுமாயின், ஓமந்தைக்கப்பால் உள்ள கிராமங்களில் நிலை கொண்டுள்ள பத்தாயிரத்திற்கும் மேலான இராணுவப் படையினரால் என்னதான் செய்ய முடியாது?

சில இராணுவத்தினர் கடந்த கால யுத்தத்தினால் ஏற்பட்ட உட்குலைவு நிலை, மன அழுத்தம் போன்ற சீர்குலைவுகளினால் குற்றங்கள், கொலைகள் மற்றும் தற்கொலைகளையும் புரிகின்றனர். முன்னர் புரிந்தும் உள்ளனர். இவற்றினை நாங்கள் கடந்த காலங்களில் ஊடகங்கள் மூலமாக அறிந்துமுள்ளோம்.

இளைஞன் மீது இராணுவச் சிப்பாய் தாக்கியமைக்கு அவரை 'சேர்' என மரியாதையாக அழைக்கப்படாமையே காரணமென விவரிக்கப்பட்ட போதிலும், சட்டத்திற்குப் புறம்பான இக்குற்றச் செயலுக்கு - இதனைப் புரிந்தவர்களையும் மற்றும் பாதிப்புக்குள்ளானவர்களையும் சர்வ இனங்காணும் பொழுதில் இவ்விரு பகுதியினருக்குமிடையிலான அதிகார

ஏற்றத் தாழ்வே காரணமாகவிருந்துள்ளது என்பது தெளிவாகப் புலனாகின்றது.

நாங்கள் பெரும்பான்மையினத்தவர் மற்றவர்கள் சிறுபான்மையினத்தவர். எனவே, தமக்கு அவர்கள் அடங்கிப் போக வேண்டுமென்ற அதிகார எண்ணம் மேலோங்கியதாலேயே இச்சோகச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வடக்கில் சிங்களப் படையினர் உத்தரவிடுகின்றனர். அங்கு தமிழர்களுக்கு ஒரு உரிமை மட்டுமே உள்ளது. அவர்களுக்குச் செய்யும்படி கூறுவதைச் செய்யும் உரிமைதான் அது.

இத்தகைய ஒரு விவகாரத்திற்குரிய மனோநிலைக்குப் பழக்கப்பட்டுவிட்ட நிலையாயே சாதாரண இளநிலைப் படை வீரரிடமும் காணப்படுகின்றது. தாம் சொல்வதை எவராயிருப்பினும் செய்ய வேண்டும். மறுக்கக் கூடாது எனும் ஓர் மனோபாவம் வடக்கிலுள்ள இராணுவப் படையினரிடம் பிறந்துவிட்டது. இதுவே இன்று தெற்கிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

தமிழர்களையும் இலங்கை சமூகத்தின் ஓர் அங்கமென உணர்ந்தறிந்து அவர்களுடன் படையினர் ஈடுபடும் விதத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனினும், எலிதுரவில் இச்செயலில் ஈடுபட்ட சிப்பாய் போன்றே ஒவ்வொருவரும் இருப்பர் என்பதல்ல. சிலர் தம்முடன் உடன்பிறந்த நேர்மை மற்றும் இரக்க குணங்களைக் கொண்ட நல்லவராகவும் சிலர் பிறப்பிலிருந்தே காணப்படும் கடும் வெறுப்புணர்ச்சியின் நிமித்தமாகவும் இவ்விதமிருப்பர்.

ஆனால், சகலருக்கும் அவ்விதம் செய்வதற்குத் தகைமை வேண்டும். ஏனெனில் பலருக்கு விருப்பமில்லாத ஒன்றை தாம் விரும்பும் போக்கிற்குச் செய்யும் சூழல் நிலவுவதால், தமிழரைப்

பொறுத்தமட்டில் ஒவ்வொரு படை வீரனும் தனக்குத் தேவைப்படும் பொழுதில் தன்னை ஓர் போர் எஜமானனாகக் கருதியே செயற்படுகிறான்.

உலகின் எப்பாகத்திலும் இத்தகைய சம்பவங்கள் சட்டப்படி ஏற்கப்படாத போதிலும் நடப்பில் உண்மையான இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவ்வாறான வேலைகளில் படையினர் இறங்கி விடுகின்றனர்.

டிலிதுரவிலுள்ள கிராமத்தவர்கள் போன்ற வறிய நிலையிலுள்ள தமிழர்களே பலிக்கடாவாகின்றனர். ஆனால் இறுதியில் வர்க்க ரீதியான நடவடிக்கைகள் இவற்றினைத் தோற்கடித்து கீழடங்கச் செய்துவிடும். சிறீலங்காவின் அதி உச்ச மேலாண்மைக்கு முன்னால் ஓர் செல்வந்த தமிழர் கூடச் சக்தியற்றவராகி விடுகின்றார். ஆயினும், ராஜபக்சவுக்கு ஆதரவாக இருந்து அவர் புகழ்பாடும் அடிவருடிகளான சில தமிழர்களுக்குப் பாதுகாப்பு உள்ளது.

டிலிதுர சம்பவமானது போரின் பின்னர் பெரும்பாலான தமிழர்களின் வாழ்க்கை கௌரவமற்ற நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாங்கள் பார்ப்பதற்கான யன்னலைத் திறந்துவிட்டுள்ளது.

வடக்கிலும் மற்றுமிடங்களிலும் இவ்விதமாக வாழ்ந்து வரும் தமிழர்களின் இக்கட்டான நிலைமையைக் கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் தமது மற்றும் தமது குடும்பங்கள் உறவினர்களின் பாதுகாப்புக்காக ஒவ்வொரு சீருடை தரித்தவர்களுக்கும் குனிந்து கும்பிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாளாந்தம் வாழ்வதற்கு முடிவேயில்லாத இவ்வித கசப்பான யதார்த்த பூர்வமான நிலையே

இருந்து வருவது அவர்களின் வாழ்வில் மிகவும் வெளிப்படையான தொன்றாகவுள்ளது.

சமாதானம் மற்றும் மீள் நல்லிணக்கத்திற்கு முரண்பாடாக வன்முறைகளைக் கைக்கொண்டு சட்டத்தை மீறிய வகையில் நடத்தலும் அத்துடன் குற்றமிழைத்தோர் தண்டனையில் இருந்து தப்புவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

டிலிதுர சம்பவமானது சிறீலங்காவில் தமிழர்கள் குறிப்பிட்ட உரிமைகளைக் கொண்டிராததையும் அத்துடன் சட்டத்தின் மூலம் பாதுகாப்பின்மையையும் நன்கு விளங்க வைக்கின்றது.

அதுமட்டுமன்றி, எந்தவொரு தமிழரின் செயலிற்கும் ஒவ்வொரு தமிழரும் தண்டிக்கப்பட முடியும் என்பதையும் புரிய வைத்துள்ளது. இது ஓர் சமாதானத்துக்கான பாதையல்ல. ஆனால் மீளப் புதுப்பிக்கப்படும் கலவரத்திற்கான ஒன்றாகவே இருக்கும்.

ஓர் வழமையான சட்டபூர்வ ஜனநாயகத்தின்படி கோத்தபாய ராஜபக்ச ஓர் சிரேஷ்ட அரச பணியாளரே தவிர அதற்கு மேலாக வேறெதுவுமில்லை. அவர் ஜனாதிபதியின் சகோதரர் என்பதால், சில சிறப்புரிமைகள் மற்றும் அனுகூலங்களை அனுபவிக்கலாம். ஆனால் ராஜபக்சவின் ஆட்சியில் கோத்தபாய ராஜபக்ச ஓர் 'இளவரசன்' அல்லது பிரதி அரசர் போன்றே உள்ளார். அதன் நிமித்தம் தானோ தெரியவில்லை அண்மையிலும் நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல கோத்தபாய தொடர்பில் கூறும் போது "பாதுகாப்புச் செயலாளர் என்பது ஓர் சிரேஷ்ட அரச அதிகாரியே தவிர அவருக்கு எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் கேள்வி கேட்பதற்கோ அல்லது சவால்விடுவதற்கோ உரிமை இல்லை. அவ்விதம் செய்வது ஓர் நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமைகளை மீறும் செயலாகும். இது குறித்து நான் நாடாளுமன்றில் பிரச்சினை எழுப்புவேன்" எனக் கூறியுள்ளார். (ஆதாரம் - டெயிலி மிரர் - 16.04.2012)

இன்று நம் முன்னேயுள்ள பிரச்சினை ஆட்சி மாற்றமல்ல. ஆனால் மேலும் ஜனநாயகத்தைக் கறையான் அரித்துத் தின்னுவதைத் தடுத்தலேயாகும். அதாவது ராஜபக்ச சகோதரர்களும் அவர்களது இராணுவப் படையினரும் வழக்கத்திற்கு மேலதிகமாக அடக்கு முறைகளை மேற்கொள்ளும் வேளைகளில் எல்லாம் அவற்றினை எதிர்த்தலேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
THE SUDAROLI

06 மே - 12 மே 2012

85, ஜெயந்த வீரசேகர மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன் 0115738005
பக்ஸ் 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்து சரியானதா?

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மஹிந்த அரசாங்கத்தின் நடைமுறைகளைக் கடுமையாக விமர்சித்து வந்தாலும், சில விடயங்களில் மஹிந்த அரசின் நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துப்போகின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது.

தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பங்குபற்ற வேண்டும் என்பதும், வெளிநாடுகளின் தலையீடுகளின்றி உள்நாட்டிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதுமே இந்த ஒத்த தன்மையாகும். அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்படி கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

போர் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் இனப்பிரச்சினைத் தீர்விற்கான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கும் அரசதரப்பிற்குமிடையில் நடைபெற்று வந்துள்ளன. அப்பேச்சுக்களில் உருப்படியாக எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. இதன் காரணமாகவே இப்பேச்சுக்கள் முறிவடைந்தன. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இந்நிலையிலேயே அரசாங்கம் மேடையை மாற்றும் தந்திரோபாயத்தைக் கையிலெடுத்தது. இன்று இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுக்களை நடத்தத் தயாராகவிருப்பதாகவும் தமிழ் தேசியக்கூட்டமைப்பே இதற்குத் தடையாக உள்ளதாகவும், அதாவது தங்கள் பிரதிநிதிகளை தெரிவுக்குழுவிற்கு அனுப்பத் தயாரில்லாமலுள்ளதாகவும் அரசாங்கம் பரப்புரை செய்து வருகின்றது.

இந்நிலையில், தாங்கள் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதற்குத் தயார் எனவும், ஆனால், இதுவரை நடைபெற்ற பேச்சுக்கள் மூலம் அடையப்பெற்ற முடிவுகளை நடைமுறைப்படுத்துவது பற்றியே தெரிவுக்குழுவில் பேச முடியும் எனவும், மீண்டும் அ. ஆ விலிருந்து ஆரம்பிப்பது பொருத்தமானதல்ல எனவும் தெளிவான காரணங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.

இந்நிலையில் ஐக்கியதேசியக்கட்சி ஆராய்ந்து பார்த்ததா? அது குறித்து கருத்துக்களை வெளியிட்டதா என்பது தெரியவில்லை. வெறுமனே அரசாங்கம் கூறுவதைப் போல ஐக்கியதேசியக் கட்சியும் கூறுவது நன்மைதராது. தமிழ் தேசியக்கூட்டமைப்பு தெரிவித்துள்ள யதார்த்தமான நிலைப்பாட்டை உள்வாங்கி அவர்களை தெரிவுக்குழுவில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையே அவர்கள் முன்வைக்க வேண்டும்.

இன்று அரசாங்கத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும், ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகளால் இலங்கையிலுள்ள அனைத்துத்தரப்பு மக்களும் பாதிப்படைந்து வருகின்றனர். இதற்கெதிராக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது முக்கியமானதொரு பணியாகும்.

இதனடிப்படையிலேயே யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து மேற்கொண்ட மே தின நிகழ்வும் நடந்தேறியுள்ளது. தமிழர் தரப்பும் இக்கட்டமைப்பின் அத்தியாவசியத்தை உணர்ந்திருப்பதாகவே தெரிகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் தங்கள் தங்கள் நலன்களுக்காக மட்டும் தமிழ் மக்களின் ஆதரவைப்பெறும் நோக்கில் பெரும்பான்மை கட்சிகள் காய்களை நகர்த்தக்கூடாது.

பலவேறுபட்ட தந்திரோபாயங்களையும், ஏமாற்றங்களையும் எதிர்கொண்ட தமிழ் மக்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் ஏராளமானவை என்பதை பெரும்பான்மை கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# ஊடக சுதந்திரம்...?

அதிகாரத் தரப்பினரை விமர்சிப்பவர்களையும், ஜனநாயக முகத்திரை போர்த்திக் கொண்டு சர்வாதிகாரத்தை வெளிப்படுத்தும் ஆட்சியாளர்களின் கொடூர முகங்களை அம்பலப்படுத்துபவர்களையும் அதிகார பீடத்தின் துப்பாக்கிகளுக்கு நிரையாகவே பிடித்திருக்கிறது. தன்னை விமர்சிப்பவர்களை வேட்டையாடுவதையும் அவர்களின் உதிரத்தை உறுஞ்சுவதையும் அதிகாரத்தின் துப்பாக்கிகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. துப்பாக்கிகளின் மூலமாக கருத்துச்சுதந்திரத்தை குழிதோண்டிப் புதைக்கும் பணியினை உலக அரசுகள் திமிருடன் முன்னெடுத்து வருகின்றது. இதனால் நீண்டு செல்லும் உலக ஊடக பயணத்தில் பலதுயர் செறிந்த தியாகங்கள் நிறைந்திருக்கின்றன. உலக ஊடக வரலாற்றில் பல ஊடகவியலாளர்கள் அதிகாரதரப்பின் கொடூர கரங்களால் பலியெடுக்கப்பட்டனர். இவர்களின் படுகொலைக்கான சூத்திரதாரிகள் யாரென ஆராயும் போது சுட்டுவிரல்கள் பெரும்பாலும் அதிகாரத் தரப்பை நோக்கியே நீள்கிறது.

இத்தகையதொரு கொடூர அடக்குமுறை மிரண்டித்தனத்தில் இலங்கை அதிகார பீடம் தனக்கென தனியிடத்தைத் தக்க வைத்துள்ளது. உலக ஜனநாயக விதிமுறைகளில் கருத்துச் சுதந்திரம் ஆட்சியை விமர்சிக்கும் சுதந்திரம் தெளிவாக பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் அதிகாரத்தரப்பு அது பற்றி சிரத்தை கொள்வதே இல்லை. 'பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்' என்பதே யதார்த்தமாகி உள்ளது. அந்தவகையில் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் மறுதலிக்கப்படும் நாடுகளில் இலங்கையும் முன்னணி வகிக்கிறது. இலங்கையின் கடந்த கால ஆட்சித்தரப்பில் அரங்கேறிய ஊடக அடக்குமுறைகள் இதனை நிரூபிக்கின்றன.

இலங்கையின் ஊடகவியலாளர்கள் மீதான படுகொலை அத்தியாயம் 1990ம் ஆண்டு ஊடகவியலாளர் றிச்சர்ட் டி.சொய்சாவின் படுகொலையிலிருந்து ஆரம்பமாகியது. இதன் பின் இத்தகைய கொடூரப் படுகொலைகள் இலங்கைத் தீவில் சாதாரண நிகழ்வுகளாகின. ஊடகவியலாளர்கள் பட்டப்பகலிலும் ஊரடங்குச்சட்டம் போடப்பட்டு இரவுகளிலும், தலைநகரில் அதியுயர் பாதுகாப்பு மிகுந்த வீதிகள், இராணுவ பிரசன்னமுள்ள பகுதிகளில் 'இனந்தெரியாதவர்கள்' என அடையாளப்படுத்தப்பட்டவர்களால் பலர் கொன்று வீசப்பட்டனர்.

அந்தவகையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுகளை மீட்டுப்பார்க்கும் போது தமிழ் ஊடகத் துறை நெருப்புக்குள்ளேயே வாழ்ந்து தினம் தினம் மரணத்தின் கொடூர நகங்களுடன் போராடியிருக்கிறது என்ற உண்மை அம்பலமாகின்றது. அவ்வகையில் பல ஊடகவியலாளர்களின் நினைவுகள் தாங்கிய பதிவுகள் மனத்திரையில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

'தராக்கி' என்ற பெயரில் எழுதிய ஊடகர் தர்மரத்தினம் சிவராம் அதிகாரத்தின் திமிர்த்தனத்தையும் அநீதிகளையும் தட்டிக் கேட்ட குற்றத்திற்காக கொழும்பில் வைத்து கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். ஊடகவியலாளர் சிவராம் கொழும்பு பம்பலப்பிட்டி காவல் நிலையத்திற்கு அண்மையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு அதியுயர் பாதுகாப்பு மிகுந்த நாடாளுமன்றத்திற்கு அருகில் துப்பாக்கி வேட்டுக்களால் சல்லடை போடப்பட்டு கொன்று வீசப்பட்டார். அடுத்து 'நெல்லை நடேசன்' என்ற பெயரில் பல்வேறு கட்டுரைகளை வெளியிட்ட ஊடகர் நடேசன் உண்மையை எழுதியதற்காக அதிகாரத்தரப்பினரால் நடுவீதியில் வைத்து துப்பாக்கியினால் பலியெடுக்கப்பட்டார். இவரின் படுகொலை தொடர்பான விசாரணைகள் எந்த அளவில் அக்கறையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பது கேள்விக்குறியுடனே நீள்கிறது. குருதியை உறையவைக்கும் ஊடகத்துறையினரின் படுகொலையில் ஊடகவியலாளர் நிமலராஜனின் படுகொலை இன்றும் கொடூரம் நிறைந்த நினைவாகவே உள்ளது.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இரவைத் தாண்டிய பொழுதில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த அவரின் வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் வெறித்தனமாக படுகொலை செய்யப்பட்டார். நிமலராஜன் தனது மேசையில் இருந்தபடி கட்டுரை ஒன்றை எழுதிக்கொண்டிருந்த வேளை மதிலால் ஏறிப்பாய்ந்த கொலைஞர்கள் தமது கொலை வெறியை காட்டியுள்ளனர். நவீனரகத் துப்பாக்கிகளை தூக்கியவாறு வந்த கொலையாளிகள் யன்னலூடாகத் துப்பாக்கியை நீட்டி இவர் மீது கேள்வியின்றி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனைச் சற்றும் எதிர்பாராத நிமலராஜன் அந்த இடத்திலேயே மடிந்து வீழ்ந்தார். ஆனால் வந்தவர்களுக்கு கொலைவெறி தணியவில்லை. இன்னும் நிறைய இரத்தத்தை புசிக்க வேண்டும் என ஆசைப்பட்டனர். வீட்டுக்குள் இருந்தவர்களையும் படுகொலை செய்ய வேண்டும் என்ற நோக்கமே அவர்களிடம் அப்போது மேலெழுந்தது. இதனால் தப்பிச் செல்லும் போது கைக்குண்டுகளையும் சரமாரியாக வீட்டிற்குள் வீசிவிட்டு தலைமறைவாகினர்.

இவரின் படுகொலை தொடர்பான சூத்திரதாரிகள் எவருமே கைதுசெய்யப்படவுமில்லை. அத்துடன் ஊடகவியலாளர் சுகிர்தராஜன், உதயன் அலுவலகச் செய்தியாளர் ரஜிவர்மன் ஊடகவியலாளர் தேவா போன்ற படுகொலை பட்டியல்கள் தொடர்ச்சியாக நீள்கின்றன. ஆனால் இதுவரை இப்படுகொலைகளுக்கான சூத்திரதாரிகளின் விபரம் இலங்கை காவல்துறை பதிவுகளின் படி இனந்தெரியாதவர்கள் ஆகவே உள்ளது.

அத்தோடு மேலும் அதிகாரத்தை விமர்சித்த பிரகீத் எக்னெலிகொட, இராமச்சந்திரன் போன்ற பல ஊடகவியலாளர்கள் இன்றும் காணாமல் போனவர்களாகவே உள்ளனர். இவர்களைத் தேடிக் கண்டுபிடித்தல் என்பது இலங்கையில் இருட்டுக்குள் கறுத்த பூனையைத் தேடுவது போன்றதே.

இதனைவிட 'லங்கா ஈநியூஸ்' யாழ்ப்பாணத்திலுள்ள 'உதயன்' அலுவலகம் என்பனவற்றுள் இனந்தெரியாதவர்களின் வெறியாட்டம் அரங்கேறியிருக்கது. இந்த வெறியாட்டத்தை நடாத்திய கொலைஞர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இவ்வாறு ஊடக அடக்குமுறையில் இலங்கையே முன்னணியில் அணிவகுக்கின்றது. ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் அதிகமாக அரங்கேறிய காலப்பகுதியாக (26 படுகொலைகள் 1 காணாமல்போதல்கள்) மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலமே விளங்குகின்றது. இந்த உண்மையை பல சந்தர்ப்பங்களில் சர்வதேச ஊடக அமைப்புக்கள் வெளிப்படையாகவே கூறியிருந்தன. இந்த நிலையில் இலங்கை ஆளும் தரப்பாலும் ஊடக சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வாறு ஊடக அடக்குமுறை தலைவிரித்தாடும் சூழலில் ஊடகவியலாளர்கள் தம்மை சுய கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்தி பணியாற்றும் தேசமொன்றில் ஊடக சுதந்திர தினம் என்பது பொருத்தமான நிகழ்வா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் படுகொலை விசாரணைகளை கிடப்பிலே போட்டு மௌனம் காத்து வரும் அரசு ஊடகவியலாளருக்கு மடிக்கணனிகள் வழங்குவோம் எனவும் உதவித்திட்டங்கள் வழங்குவோம் எனவும் கூறுவது பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் கதையாகவே உள்ளது.


எனவே, எப்போது உண்மையான சுதந்திரம் ஊடகவியலாளருக்கு வழங்கப்படுகின்றதோ அப்போது படுகொலை அச்சம் அவர்களை விட்டு அகலுகின்றதோ அன்றைய நாள் தான் உண்மையான ஊடகசுதந்திர நாளாக அமையும். அதுவரை ஊடக சுதந்திர நாள் ஊடகத் தியாகிகளின் நினைவுகளை மீட்டிப்பார்க்கும் நாளாகவே அமையும்.




- ஜனநாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறையின் இன்னுமோர் வடிவம்



இலங்கையில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையோடு சேர்த்து மதப்பிரச்சினையையும் தூண்டிவிடுமாப் போலவே பெரும்பான்மைச் சமூகத்தினரின் அண்மைய காலச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. தம்புள்ளையில் அமைந்திருந்த நீண்ட கால பழமைவாய்ந்த ஜும்மா பள்ளிவாசல் பௌத்தபிக்கு ஒருவரின் நெறிப்படுத்தலில் சிங்கள இளைஞர்களால் தாக்கப்பட்டமையானது முஸ்லிம் சமூகத்தவர்களைக் கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியிருக்கின்றது. சிறுபான்மையினராகிய தமிழ்ச்சமூகத்தின் அடையாளங்களை அழித்து நீண்ட காலமாகவே ஏப்பம் விட்டவர்கள் தற்போது மற்றுமொரு சிறுபான்மையினராகிய முஸ்லிம் சமூகத்தவரின் அடையாளங்களையும் அழித்து அவர்களின் இருப்பையும் கேள்விக்குறியாக்குவதிலேயே முனைப்புக்காட்டுகின்றனர்.

கடந்த மாதம் 20ம் திகதியன்று தம்புள்ளையில் அமைந்திருந்த குறிப்பிட்ட பள்ளிவாசலில் முஸ்லிம் மக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தவேளையில் பௌத்ததேரர் ஒருவர் தலைமையில் நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்கள் வந்து பள்ளிவாசல் கட்டடங்களை மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். பொலிசார் நின்றிருந்த வேளையிலும் அவர்கள் சிங்கள இளைஞர்கள் மேற்கொண்ட அந்த அராஜக நடவடிக்கைகளை எந்தவகையிலும் தடுக்கவுமில்லை. ஒரு பொருட்டாக எடுக்கவுமில்லை. ஒட்டுமொத்தத்தில் சிங்கள இளைஞர்கள் மேற்கொண்ட இந்த அடாவடி நடவடிக்கைகளுக்கு ஆளும் தரப்பினர் ஆசீர்வாதம் வழங்கியிருப்பதையேயது வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இந்த சம்பவமானது அரபுநாடுகள் இலங்கை மீது கொண்டுள்ள அக்கறையையும் நன்மதிப்பையும் ஒரேயடியாகப் போட்டுடைத்த செயலாகவே அமைகிறது. யுத்தத்திற்குப் பின்னரான நாட்களில் இலங்கை அரசின் போக்குகளில் அதிருப்தி கொண்டுள்ள ஐரோப்பிய நாடுகள் இலங்கையை ஓரம்கட்டுகின்ற சூழ்நிலையில் இலங்கை அரசு தனக்கு ஆபத்து ஏற்படுகின்றபோதெல்லாம் ஆதரவைத் தேடுவதற்காக அடிக்கடி விமானமேறிப்போகும் அரபுநாடுகளும் இலங்கையைக் கைகழுவி விடுகின்ற சூழ்நிலை இப்போது உருவாகியுள்ளது.

1982 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் புனிதப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டிருந்த இடங்களில் வேற்று மதத்தவர்களின் அடையாளங்கள் எதுவும் இருத்தலாகாது என்றும், தம்புள்ளையில் அமையப்பெற்ற குறிப்பிட்ட பள்ளிவாசலை வேறு இடத்திற்கு இடம்மாற்றுவதற்கு ஆறு மாதகாலத்திற்கு முன்னரே கால அவகாசம் கொடுக்கப்பட்டதாகவும் சிங்களத்தரப்பில் ஒரு பகுதியினர் வியாக்கியானம் கூறுகின்றனர். ஆனால், தம்புள்ள பிரதேசம் புனிதப்பிரதேசம் அல்ல; அங்குள்ள ஜும்மாப் பள்ளிவாசல் வேறு எந்த இடத்திற்கும் இடம் மாற்றக்கூடாது; அவ்வாறு இடம் மாற்றினால் அரசாங்கம் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்ந்திருக்கின்ற முஸ்லிம் தலைவர்கள் தங்களது இனத்தின் இறையாண்மையை பாதுகாக்கவேண்டிய பொறுப்பை நிறைவாகச் செய்யவேண்டுமென்பதே ஒட்டுமொத்த சிறுபான்மைச் சமூகத்தினரின் எதிர்பார்ப்பாகும்.



தம்புள்ள பள்ளிவாசல் பௌத்த பிக்குகளின் தலைமையில் சிங்கள கடும்போக்காளர்களினால் தாக்கப்பட்ட சம்பவம் சிறுபான்மைச் சமூகத்தவரிடையே ஏற்படுத்திய கொதிநிலை தணியும் முன்னரே திருகோணமலையில் உள்ள பொது வைத்தியசாலை வளாகத்தினுள் அமையப்பெற்றிருந்த அறுபது ஆண்டுகால பழமை வாய்ந்த பிள்ளையார் ஆலயத்தையும் அகற்றும்படி பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்திச்சபை தீர்மானம் முடிவெடுத்தமையானது திருமலை இந்து மக்களிடையே பெரும் கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தியிருந்தது. வீதி அபிவிருத்தியைக் காரணம் காட்டி குறிப்பிட்ட பிள்ளையார் ஆலயத்தை அகற்றுவதே பாதுகாப்பு அமைச்சின் பிரதான நோக்கமாகவிருந்தது. இந்த நடவடிக்கைக்கு தங்களது கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தனர் திருமலை மக்கள். அத்தோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் அரசியல் தலைவர்கள் என பல்வேறு தரப்பிலிருந்தும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மட்டத்திற்கு ஆட்சேபனைக் கருத்துக்கள் சென்றதையடுத்து குறிப்பிட்ட பிள்ளையார் ஆலயத்திற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் வளாகத்தில் அமைந்திருக்கின்ற சட்டவிரோதமான கட்டடங்களை அகற்றுவது உட்பட இன்னும் பல தீர்மானங்களுடன் ஆய்வறிக்கை சமர்ப்பிக்கும்படி பாதுகாப்புச் செயலர் சம்பந்தப்பட்டவர்களுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

சிறுபான்மையினத்தவர்களின் சமய, கலாசார விழுமியங்களை அழிப்பதென்பது சிங்களக் கடும்போக்காளர்களுக்கு காலம் காலமாக வளர்ந்த கலையாகவே உள்ளது. அதுபோன்று தம்புள்ள பள்ளிவாசல் இடித்து சேதமாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் முகமாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் அதிகளவில் வாழ்கின்ற அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 26ம் திகதியன்று முழுநேர பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அன்றைய தினத்தில் மட்டக்களப்பிலுள்ள காத்தான்குடி எனும் பிரதேசத்தில் அமைந்திருந்த முஸ்லிம் சம்மேளனத்தின் காரியாலயகம் தீக்கிரையாக்கப்பட்டது.

"இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு" இது சிங்கள பேரினவாத சக்திகள் காலம் காலமாக வாய்ப்பாடமாக வைத்திருக்கும் வேதவாக்கு. தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் "நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள்" என்று கூறுகின்றார். சிறுபான்மையினர் மாற்றாந்தாய் பிள்ளைகளாகவே கவனிக்கப்படுகின்றனர். மேதகுவும் கொழுக்கட்டையும் உருவத்தில் வித்தியாசமானவைதான். ஆனால் உள்ளுக்குள் இருப்பது எல்லாம் ஒன்றுதான். அதுபோல்தான் சிங்கள பெரும்பான்மைத் தலைவர்களும் வெவ்வேறுவிதமான கருத்துக்களைக் கூறினாலும் அவர்களின் கருத்துக்களின் உள்நோக்கம் எல்லாம் இலங்கைத் தீவை முழுமையான பௌத்த சிங்கள நாடாக்குவதே என்பதேயாகும்.

சிங்களக் கடும்போக்காளர்கள் கூறுவது போல புனித இடங்களில் வேற்றுமத அடையாளங்கள் இருத்தலாகாது என்றால், இந்துமதத்தின் புனித பூமியாக விளங்குகின்ற கதிர்காமக்கந்தன் ஆலய வளாகத்திலேயே பௌத்த விகாரைகள் பலவும் அமைந்திருக்கின்றன. மிகவும் தொன்மை வாய்ந்த கதிர்காமக்கந்தன் ஆலயச்சுற்றாடலில் நவீனமான முறையிலும் ஆடம்பரமான வசதிகளுடனும் பௌத்த விகாரைகள் புதிதாக முளைத்தபோதிலும் கூட அதை இந்து மதத்தலைவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தடுத்ததில்லை. கதிர்காமத்தின் உச்சி மலையேறி அதையும் கடந்து சென்றால் வள்ளிமலையில் வள்ளியம்மன் கோவில் என்ற சிறிய கோவில் உள்ளது. அந்தக்கோவிலுக்கு உள்ளேயும் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதற்கும் இந்து மதத்தரப்பிலிருந்து எதுவித ஆட்சேபனைகளும் கிளம்பவில்லை. எனவே வேற்று மதத்தவர்களின் புனிதமான இடங்களிலெல்லாம் பெரும்பான்மைச் சமூகம் எழுந்தமானத்திற்கு புத்தர்சிலைகளை நிறுவலாம். இந்து ஆலயங்களை பௌத்த விகாரைகளாக மாற்றலாம். தமிழ்ப்பிரதேசங்களில் எல்லாம் புதிய புதிய புத்தர் சிலைகளை நிறுவலாம். ஆனால் தாங்கள் புனிதமான இடம் என்று சொல்கின்ற இடங்களில் வேற்று மதத்தவர்களின் அடையாளங்கள் எதுவும் இருக்கக்கூடாது. இதுவே பெரும்பான்மைச் சமூகத்தினரின் வாதமாகும். இது எந்த வகையில் நியாயம்? இதுவே சிறுபான்மையினர் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும்.

பொதுவாக அரசியல், பொருளாதாரம் சார்ந்த விடயங்களில் சமாளித்துப் போகும் சமூகமாக முஸ்லிம் சமூகம் உள்ளது. முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே முஸ்லிம் தலைவர்கள் காலத்திற்குக்காலம் ஆட்சிபீடம் ஏறுகின்ற சிங்களத் தலைவர்களுடன் கூட்டுச் சேர்கின்றனர். இந்த விடயத்தினை ஆளும் தரப்பினர் புரிந்துகொள்ளாமல் இல்லை. இருப்பினும் நீண்ட காலமாகவே சிறுபான்மைத்தமிழர்களின் சமய, கலாசார அடையாளங்களில் கைவைத்துப்பழக்கப்பட்ட பேரினவாத சக்திகள் தற்போது சிறுபான்மை முஸ்லிம்களின் சமய கலாசார அடையாளங்களிலும் கைவைக்கத் தொடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக அண்மையில் மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு இடங்களிலும் பூரண கதவடைப்பும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பேரினவாத சக்திகள் சிறுபான்மைச்சமூகத்தினரின் பாரம்பரிய அடையாளங்களை அழித்து அவர்களை அடக்கியாள்வதையே அன்று தொட்டு இன்றுவரையிலும் குறியாகக் கொண்டுள்ளனர். பெரும்பான்மைச் சமூகத்தினரின் மனங்களில் மாற்றம் ஏற்படாது அவர்களின் கடும்போக்கான பேரினவாதச் செயற்பாடுகள் தொடருமேயானால் இலங்கைத்தீவில் சமூகங்களிடையிலான நல்லிணக்கம், சகவாழ்வு என்பன வெறும் வார்த்தைப் பிரயோகங்களாகவே இருக்கும். அத்துடன் எதிர்காலத்தில் இன, மதக் கலவரங்கள் தலைதூக்கும் ஆபத்தும் ஏற்படலாம். இதனை இலங்கை அரசாங்கம் எப்போது உணர்ந்து, செயற்படப் போகின்றது என்பதுதான் விடை காணமுடியாத கேள்வியாகவுள்ளது.

**தமிழன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களப் புயல்

# நெப்போலியன்

30



# வாட்டர்லூ சமர்!

ஒரு வெற்றி, ஒரே ஒரு வெற்றி போதும். நெப்போலியன் அவ்வளவுதான் என்று கதை கட்டுகிறவர்கள் கொஞ்சம் தயங்கிப் பின்வாங்குவார்கள், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, தனது சாம்ராஜ்ஜியத்தை நிலைப்படுத்திக்கொண்டு விடலாம் என்று எண்ணினார் நெப்போலியன்.

நெப்போலியனால், மீண்டும் தன்னுடைய படை வீரர்களின் ஆதரவை அதிவேகத்தில் திரட்டிவிட முடிந்தது. அவருடைய கம்பீரமான, தன்னம்பிக்கை பொங்கும் பேச்சைக் கேட்டு, இராணுவத்தில் ஏராளமானவர்கள் புதிதாகச் சேர்ந்தார்கள், 'இந்த வம்பே வேண்டாம்' என்று விரும்பி ஓய்வு பெற்றுச் சென்றவர்கள்கூட, திரும்பி வந்தார்கள்.

இதனால், வெகுவிரைவில் கணிசமான பலத்துடன் ஒரு பிரெஞ்சுப் படையைத் திரட்டிய நெப்போலியன், யாரை முதலாவதாகத் தாக்கலாம் என்று யோசிக்கத் தொடங்கினார்.

அப்போது நெப்போலியனுக்குத் தலைவலி கொடுத்துக்கொண்டிருந்த நாடுகள் என்று பார்த்தால், இங்கிலாந்து, ஆஸ்திரியா, ரஷ்யா மற்றும் பிரஷ்யா. இவற்றில் ரஷ்ய, ஆஸ்திரியப் படைகள் சற்றுத் தொலைவில் இருந்தன. இங்கிலாந்தும் பிரஷ்யாவும்தான் பிரான்ஸ் எல்லைக்கு அருகே பெல்ஜியத்தில் முகாமிட்டிருந்த மற்றக் கூட்டாளிகள் வருவதற்குள், இங்கிலாந்து, பிரஷ்யாவைத் தாக்கலாம் என்று தீர்மானித்தார். இதற்காக, அவருடைய பிரெஞ்சு இராணுவம் பெல்ஜிய எல்லைக்குள் நுழைந்தது. மூன்று படைகளாகப் பிரிந்து, எதிரிகளைத் தேட ஆரம்பித்தார்கள்.

ஆரம்பத்தில் நெப்போலியனின் படைகளுக்குச் சில சிறுவெற்றிகள் கிடைத்தன. இதனால், இங்கிலாந்துப் படைகள் பின்வாங்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டன.

இங்கிலாந்து இராணுவம் பிரஸெல்ஸ் (Brussels) நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது, நெப்போலியன் அவர்களை விடாமல் துரத்திச் சென்றார். இங்கிலாந்துப் படையுடன் ஒப்பிடும்போது, பிரெஞ்சு இராணுவம் அளவில் மிகப் பெரியது என்பதால், ஓர் உறுதியான வெற்றியைப் பெற்றுவிடமுடியும் என்பது அவருடைய நம்பிக்கை.

ஆனால், இதே நேரத்தில், இங்கிலாந்துப் படைகளைப் பலப்படுத்துவதற்காக, பிரஷ்ய இராணுவம் ஒன்று வந்துகொண்டிருந்தது. அந்தத் தைரியத்தில், நெப்போலியனின் படைகளை நேருக்கு நேர் சந்திப்பதாக முடிவெடுத்தது இங்கிலாந்து.

1815, ஜூன் 17-ம் தேதி மதியம். இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த இடம், வாட்டர்லூ. பிரஸெல்ஸ் செல்லும் வழியில் இருந்த சிறிய கிராமம் இது.

இன்றைக்கு உலகம் முழுவதும் ஏகப்பட்ட 'வாட்டர்லூ'க்கள் இருக்கின்றன. அமெரிக்கா தொடங்கி, அண்டார்டிகாவரை பல ஊர்களுக்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எனினும், இவற்றில் மிகப் பிரபலமான 'வாட்டர்லூ' மேற்சொன்ன பெல்ஜிய கிராமம் தான்.

நெப்போலியனுடன் மோதுவதற்கு இங்கிலாந்து, வாட்டர்லூவைத் தேர்ந்தெடுக்கக் காரணம் அந்தப் பகுதியின் நில அமைப்புதான்.

பெல்ஜியத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான பிரஸெல்ஸை நோக்கிச் செல்லும் பிரதானப் பாதையில்தான் வாட்டர்லூ அமைந்திருந்தது. ஆனால், இந்தப் பகுதியில் மட்டும் பாதை கொஞ்சம் கீழே குனிந்து, பிறகு நிமிர்ந்து செல்கிறது.

அதாவது, சமதளமாகச் செல்லும் பாதையில், வாட்டர்லூவுக்கு அருகே ஒரு பள்ளத்தாக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. இந்த அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டு, சரியான முறையில் பதுங்கிப் போரிட்டால், நெப்போலியனைச் சமாளித்துவிட முடியும் என்று இங்கிலாந்துத் தளபதிகள் எண்ணினார்கள்.

தவிர, பிரஷ்யாவின் உதவி வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நெப்போலியனை இருமடங்கு பலத்துடன் எதிர்க்க முடியும். ஒரு வேளை, இந்தப் போரில் நெப்போலியனின் கை ஓங்கிவிட்டால், இருக்கவே இருக்கிறது பிரஸெல்ஸ் பழைய திட்டப்படி பின்வாங்கிச் சென்றுவிடலாம்.

அன்று இரவு, வாட்டர்லூ பகுதியில் பயங்கரமான மழை. ஆகவே, மறுநாள் காலை, நிலமெல்லாம் சேறாகிவிட்டது. இந்தச் சேற்றுக்கு நடுவே படைவீரர்கள், குதிரைகள், துப்பாக்கிகள், பீரங்கிகளையெல்லாம் வைத்துப் போரிடுவது சிரமம். இதனால், சூரியன் உச்சிக்கு வந்து, நிலம் காய்கிறவரையில் போரைத் தொடங்க வேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் காலதாமதம், ஒருவிதத்தில் இரண்டு படைகளுக்குமே பயனுள்ளதாக அமைந்துவிட்டது. எதிரிப் படைகள் எத்தனை பெரியவை, அவை எந்த விதத்தில் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் காலை வெளிச்சத்தில் தெளிவாகப் பார்த்துத் தெரிந்துகொள்ளமுடிந்தது.

இங்கேதான், இங்கிலாந்துப் படைத் தலைவர்கள் ஒரு சின்னச் சூழ்ச்சி செய்தார்கள். வாட்டர்லூவின் கீழே இறங்கி, மேலேறும் நில அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நெப்போலியனுக்குத் தங்களது முழு பலம் தெரிந்துவிடாதபடி பார்த்துக் கொண்டார்கள்.

இதனால், நெப்போலியன் இங்கிலாந்துப் படைபலத்தை மிகவும் குறைத்து மதிப்பிட்டுவிட்டார். தவிர, பிரஷ்யாவின் உதவி அவர்களுக்குக் கிடைக்கிறதா, இல்லையா என்பதையும் அவரால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

1815 ஜூன் 18-ம் தேதி நண்பகல் நேரத்தில், வாட்டர்லூ யுத்தத்தைத் தொடங்கிவைத்தது நெப்போலியன்தான். நெப்போலியனின் வீரர்கள், பேரரசர் வாழ்க என்று கோஷமிட்டபடி, இங்கிலாந்து வீரர்களை ஆவேசமாகத் தாக்கினார்கள். எண்ணிக்கையில் மிகவும் சுருங்கியிருந்த இங்கிலாந்துப் படை, இந்த வேகத்தைத் தாங்கமுடியாமல் திணறியது.

சீக்கிரத்திலேயே, போரில் நெப்போலியன் கை ஓங்கிவிட்டது. இனிமேல், பிரஷ்யாவின் உதவி வந்து சேரும்வரை, நெப்போலியனின் வெற்றியைத் தாமதப்படுத்துவதுதான் தங்களுக்கு ஒரே வழி என்று தீர்மானித்துக்கொண்ட இங்கிலாந்துப் படையினர், பதுங்க முடிவெடுத்தார்கள்.

இதைப் பார்த்த நெப்போலியன், இங்கிலாந்து பின்வாங்குகிறது என்று தவறாக எண்ணினார். ஆகவே, தனது படையின் முழுப் பலத்தையும் திரட்டி, அவர்களைத் தாக்க முயன்றார் அவர்.

உண்மையில், அவர் நினைத்ததைவிட இங்கிலாந்துக்கு இழப்பு குறைவுதான். பெரும்பகுதி வீரர்கள், தளபதிகளின் கட்டளையை ஏற்றுப் பதுங்கியிருந்தார்கள். இதை அறியாத நெப்போலியன், போர் நிகழும் பகுதியிலிருந்து முக்கிய இடங்களைக் கைப்பற்ற ஆணையிட்டார்.

இந்தத் தாக்குதல்களை, நெப்போலியனும் அவருடைய படைத் தளபதிகளும் குதிரைகளில் சென்று வழிநடத்தினார்கள். எதிரிகளைக் காட்டிலும் இருமடங்கு எண்ணிக்கையில் துப்பாக்கிகள், பீரங்கிகளை வைத்திருந்த நெப்போலியன், அவற்றையும் சிறப்பாகப் பயன்படுத்தி முன்னேறினார்.

பிரெஞ்சுப் படையின் வேகத்தை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அப்போதைய சூழ்நிலையில், நெப்போலியனுக்கு எங்கேயும் எதிர்ப்பே தென்படவில்லை என்பதுதான் உண்மை. அவ்வப்போது எதிர்ப்பட்ட படைகளும் மிகச் சிறியவையாகவே இருந்தன.

இதனால், அநாவசியமாகக் குண்டுகளை வீணாக்கவேண்டாம் என்று நினைத்தார் நெப்போலியன். துப்பாக்கிச் சூடுகளை நிறுத்திவிட்டு, முழுக்க முழுக்கத் தனது காலாட்படையினரை மட்டும் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கினார்.

வாட்டர்லூ போரில் பங்கேற்ற பல இங்கிலாந்துப் படை வீரர்கள், அந்தக் காட்சியை மிகுந்த நடுக்கத்துடன் வர்ணித்திருக்கிறார்கள், 'கடல்போலப் பரந்து விரிந்திருந்த படை, அதிவேகமாக எங்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது, நிலம் அதிர்ந்தது, அவர்கள் வரும் வேகத்தைப் பார்த்தால், எத்தனைப் பெரிய படையும் அவர்கள் முன்னே நிற்க முடியாது என்று தோன்றியது.'

அப்போதும், இங்கிலாந்துப் படையினர் எதிர்த்துத் தாக்கவில்லை. நெப்போலியனின் படைகள் அதிகம் முன்னேறாதபடி, யுத்தத்தை ஜெயித்து விட முடியாதபடி தடுத்து நிறுத்துவது மட்டுமே அவர்களுடைய நோக்கமாக இருந்தது.

இங்கிலாந்துப் படைத் தளபதி வெலிங்டன் பிரபு (Duke of Wellington) பதற்றத்தோடு நேரத்தைப் பார்த்துக்கொண்டார். இந்த பிரஷ்யர்கள் மட்டும் சரியான நேரத்தில் வந்துவிட்டால், இந்தப் போரை நம்மால் ஜெயித்துவிடமுடியும் என்று தனக்குத் தானே தைரியம் சொல்லிக்கொண்டார்.

இங்கிலாந்துப் படைகள் அப்படியொன்றும் பலம் இழந்திருக்கவில்லை. மாறாக, தங்களால் முடிந்த வரை பிரான்ஸுக்குச் சேதம் உண்டாக்கிக்கொண்டு, தங்களுக்கான வாய்ப்பை எதிர்நோக்கிப் பதுங்கியிருந்தார்கள்.

இதை அறியாத நெப்போலியன், தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னே பலம் குறையாத இங்கிலாந்துப் படை, அவர் இன்னும் நெருங்கி வருவதற்காகக் காத்திருந்தது, இன்னொரு பக்கத்திலிருந்து பிரஷ்யப் படை வந்துகொண்டிருந்தது. இவர்கள் இருவரும் இணைந்துவிட்டால் தான் சுற்றி வளைக்கப்பட்டுவிடுவோம் என்பதை நெப்போலியன் அறிந்திருக்கவில்லை.

மாலை சுமார் நான்கு மணியளவில், வெலிங்டன் பிரபு தனது படை வீரர்களைத் தாக்குதலுக்குத் தயாராகும்படி ஆணையிட்டார். அவ்வளவு நேரமும் தங்களுடைய தோழர்கள் அடிவாங்குவதை, உயிர் இழப்பதைப் பார்த்தபடி வையாலாகாதவர்களாகக்

**இங்கேதான், இங்கிலாந்துப் படைத் தலைவர்கள் ஒரு சின்னச் சூழ்ச்சி செய்தார்கள். வாட்டர்லூவின் கீழே இறங்கி, மேலேறும் நில அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நெப்போலியனுக்குத் தங்களது முழு பலம் தெரிந்துவிடாதபடி பார்த்துக் கொண்டார்கள்.**

கோபத்தை அடக்கிக்கொண்டு பதுங்கியிருந்த இங்கிலாந்து வீரர்கள், ஆத்திரத்தோடு முன்னேறத் தொடங்கினார்கள். இங்கிலாந்து வீரர்களின் ஆவேசமான கோஷங்களைத் தொடர்ந்து, துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின.

நெப்போலியன் இப்படிப் பெரிய அளவில் ஒரு திடீர்த் தாக்குதலைக் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. இங்கிலாந்து பின்வாங்குகிறது என்ற நினைப்பிலும், ஒருவேளை பிரஷ்யா முன்னேறி வந்தால் அவர்களைத் தடுக்கவேண்டும் என்பதற்காகவும், தனது படையைப் பிரித்துவைத்திருந்தார். இதனால், இங்கிலாந்துப் படை தாக்கத் தீர்மானித்த போது, பிரெஞ்சுப் படையின் பலம் குறைந்திருந்தது.

இதே சமயத்தில், தென்கிழக்குத் திசையிலிருந்து பிரஷ்ய இராணுவமும் பிரான்ஸைத் தாக்க ஆரம்பித்திருந்தது. இதனால், சட்டென்று எதிரிகளின் கை ஓங்கியது.

அடுத்த இரண்டு மணி நேரங்களுக்குக் கடுமையான போர் தொடர்ந்தது. இரண்டு படைகளும் கிட்டத்தட்ட சமஅளவு பலத்துடன் போரிடுவதாகத் தோன்றியது, எந்தக் கட்டத்திலும் யார் வேண்டுமானாலும் ஜெயித்திருக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தன.

ஆனால், இரண்டு பிரிவுகளாகப் போரிட்டுக் கொண்டிருந்த நெப்போலியன், இரு முனைகளிலும் கடுமையான இழப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. பக்கத்துப் பிரிவிடம் உதவி கேட்கக்கூட முடியாதபடி எல்லாப் பக்கங்களிலும் நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது.

தொடரும்............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# அதிசயமா...! அற்புதமா...?

ஆவணி மாதம் திங்கட்கிழமை, மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னமும் கதிரவனின் கடுமையான வெப்பம் தாக்கிக் கொண்டிருந்தது. என் மனைவி சூஜி சமையல் செய்து கொண்டிருந்தாள்.

எங்களின் ஒரேயொரு செல்ல மகளான டினா வீட்டின் வளாகத்துள் பூந்தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்காணித்தவண்ணம் இருந்தேன். எங்கள் வீடு லொஸ் ஏஞ்சல்சிற்கு அருகாமையிலுள்ள புறநகரில் இருந்தது. மகள் டினாவுக்கு வயது இருபத்திரண்டு மாதங்கள் மட்டுமே.

தொலைபேசி மணி ஒலித்தது. என் மனைவி அழைத்தாள். நான் விரைந்து சென்று தொலைபேசியில் பேசினேன். அப்பொழுது கூட என் பார்வை மகள் டினாவின் மீதே இருந்தது. அவள் தத்தித்தத்தி தனது குட்டிக் குதிரையை நோக்கி நடந்தாள்.

பெரிய நாகபாம்பு மகள் வரும் திசையில் செடிகளிடையே ஊர்ந்தது. அது செடிகளின் மறைவிலிருந்து என் மகளைத் நாகத் தலையைத் தூக்கியபோது அது மகளின் உயரத்திற்குப் படமெடுத்தபடி காணப்பட்டது. ஒரு முறை நாகம் அவளைத் தீண்டிய போதும் அவள் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருந்தாள். இரண்டாம் முறையும் பாம்பு டினாவைக் கடித்தது. அப்போதுதான் மகள் டினா கத்தி எங்களை அழைத்தாள். அவள் குரல் கரகரத்தது. தீனமாகவும் இருந்தது.

டினாவின் பார்வை ஒன்றும் அறியாத சிறுமியை யாரோ ஏமாற்றி விட்டது போல் காணப்பட்டது. என்னைத் தொடர்ந்து மனைவி சூஜியும் குழந்தையின் தீனக்குரல் கேட்டு, வெளிப்புறத்திற்கு பதட்டத்துடன் ஓடிவந்தாள். சூஜி வருவதற்குள் பாம்பு புதர்களுக்கிடையே சென்று மறைந்துவிட்டது.

"எங்கே கடித்தது" என்று ஏககாலத்தில் இருவருமாகக் கேட்டதற்கு டினா "இதோ தொடையில்" என்று காட்டினாள். தொடையில் இரண்டு இடங்களில் பாம்பு கடித்திருந்தது. இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. டினாவின் இதயத்துடிப்பு அதிகரித்தது. தொடையில் பாம்பு கடித்த இடத்தில் கத்தியால் கீறி விஷத்தை உறிஞ்சி உமிழ்ந்து விடலாம் என்று கத்தியைத் தொடையில் வைத்தேன். அவள் வலி தாங்காமல் கத்தினாள்.

"அவளை இப்படிக் கலவரப்படுத்தச் செய்யக் கூடாது. அவளின் இதயத்துடிப்பு மோசமாக அதிகரிக்கத் தொடங்கி ஆபத்தை விளைவிக்கும்" என்றேன் நான். சூஜி உடனே உள்ளே சென்று கலிபோர்னியா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் போன் செய்தாள். "அவசர அவசரமாக நாங்கள் அங்கு வந்து கொண்டிருக்கிறோம்" எனத் தெரிவித்தாள்.

குழந்தை டினாவின் கடிபட்ட காலைத் துவாலையால் சுற்றி, மற்றொரு துவாலையால் அவளைப் போர்த்தி எடுத்துக் கொண்டோம். சூஜி அவளைக் கலங்காமல் தன் இரு கைகளிலும் ஏந்திக் கொண்டாள். எமது காரில் தாமதமின்றிப் புறப்பட்டோம்.

சாலையில் போக்குவரத்து நெரிசல் நிறைந்த நேரம். ஒரு காரைத் தொடர்ந்து ஒரு கார் என பிக்னிக் பார்ட்டிக்குச் செல்வது போல ஊர்ந்து கொண்டிருந்தன. எனக்கு ஆத்திரமாக வந்தது. பயமும் எடுத்தது. ஏதோ ஒன்று என் உள்மனதைத் தூண்டியது. என் மகள் இறந்துவிடுவாள் என்ற எண்ணம் ஏற்பட்டது.

ஒரு முறை நாகம் அவளைத் தீண்டிய போதும் அவள் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருந்தாள். இரண்டாம் முறையும் பாம்பு டினாவைக் கடித்தது. அப்போதுதான் மகள் டினா கத்தி எங்களை அழைத்தாள். அவள் குரல் கரகரத்தது. தீனமாகவும் இருந்தது.

எப்படியோ இருபது நிமிடத்தில் மருத்துவமனையை அடைந்துவிட்டோம். எங்கள் கையிலிருந்து குழந்தையைப் பறித்துக் கொண்டு சென்றார்கள் மருத்துவமனை டொக்டர்கள். அவசரகால சிகிச்சைக்கான அறைக்குள் எம்மை அனுமதிக்க மறுத்தார்கள். எங்களால் குழந்தை டினாவின் அழுகுரலை மாத்திரம் கேட்க முடிந்தது. அவளுடைய அழுகைக் குரல் உச்சநிலையை அடைந்து மெல்லத் தணிந்தது. சில நிமிடங்களில் டினாவை ஒரு போர்வையால் சுற்றித் தூக்கிக் கொண்டு ஒரு தாதி லிப்டில் மாடிக்குச் சென்றாள்.

"எங்கே எடுத்துப் போகிறீர்கள்" என்று கேட்டேன் தாதியை. அவள் விரைந்தபடியே "எச்சரிக்கையுடன் பாதுகாக்கும் அறைக்குக் கொண்டு செல்கிறேன்" என்றாள்.

பாதுகாப்புப் பகுதியின் டொக்டர் றிச்சாட் எங்களிடம் வந்தார். "உங்கள் மகள் பிழைப்பாள் என்று நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். அவள் சிறு குழந்தை. அவளுக்கு எந்த அளவு விஷமுறிவு மருந்து கொடுக்கலாம் என்று தெரியவில்லை. எங்களால் முடிந்தது அவளை எச்சரிக்கையுடன் கண்காணிப்பது தான். உங்கள் மகளை விட்டிருக்கும் பகுதியினுள் யாரையும் அனுமதிக்கமாட்டோம். நீங்கள் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"என் குழந்தையை விட்டு நான் போக முடியாது" என்று கூறிக் கொண்டே டினாவை விட்டிருந்த பகுதியினுள் வேகமாக ஓடிச் சென்றாள் சூஜி. அவள் குழந்தையின் கால்பக்கம் கட்டிலில் அமர்ந்து கொண்டாள். யாராலும் அவளைக் கட்டிலைவிட்டு எழுப்பி அறைக்கு வெளியே அனுப்பி வைக்க முடியவில்லை.

"இதோ பாருங்கள்! நான் ஒரு ஏற்பாடு செய்கிறேன். அறைக்கு வெளிப்புறத்தில் இரண்டு நாற்காலிகள் போடச் சொல்கிறேன். நானும் அடிக்கடி வெளியில் வந்து குழந்தையின் நிலையைச் சொல்கிறேன்" என்றார் டொக்டர் றிச்சாட் பெற்றோர் எங்களின் மனநிலையைப் புரிந்து கொண்டவராக. அறையின் வெளியில் நாங்கள் உட்கார முடியாமல் தவிப்புடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்தோம். உட்கார்ந்த போதோ ஒருவர் முகத்தை ஒருவர் பரிதவிப்புடன் பார்த்துக் கொண்டோம். தாதிமார் டொக்டர், மருந்துகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு புயல் வேகத்தில் உள்ளே செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

நெடுநேரத்திற்குப் பிறகு றிச்சாட் வெளியே வந்தார். "இப்படிப் பாம்பு கடித்தவர்களுக்கு எங்களால் செய்ய முடிந்ததை நாங்கள் உங்கள் குழந்தைக்குச் செய்து வருகிறோம். சுமார் நாற்பத்தெட்டு மணி நேரம் மிகவும் நெருக்கடியானது. அதுவரை அவள் தாக்குப்பிடித்துவிட்டால் பிறகு கவலையில்லை" என்றார்.

இரவு பதினொரு மணிக்கு வராந்தா விளக்குகள்



அணைக்கப்பட்டன. சூஜியும், நானும் எங்கள் குழந்தைக்கே அந்நியர்கள் போலாகிவிட்டோம். எங்கள் குழந்தையைப் போல நோயுடன் போராடும் வேறு பல குழந்தைகளின் அழுகுரல் கேட்டது. அந்த அழுகுரல் இரவின் மௌனத்தில் எதிரொலித்தது. அதேசமயம் குழந்தையின் பெற்றோரை யாரோ அழைப்பது கேட்டது.

சூஜி எழுந்து நின்றாள். "குழந்தைக்கு விளையாட்டுப் பொம்மை வேண்டுமாம்" என்றாள். டினாவால் அவளுடைய கரடிக்குட்டிப் பொம்மையை விட்டு இருக்க முடியாது.

நான் காரில் புறப்பட்டேன். பொம்மையை எடுத்துவரத் தனியாகக் காரில் சென்றபோது என் காதருகில் அழும் குரல் ஒலித்தவண்ணமிருந்தது. எனக்குப் பயமாக இருந்தது.

மறுநாள் ஒரு டொக்டர் "நல்ல முன்னேற்றம் இருக்கிறது. ஆனாலும் இன்னும் ஒரு நாள் முழுவதும் கழிய வேண்டும் நாங்கள் உபயோகிக்கும் மருந்து சிக்கலை ஏற்படுத்தலாம்" என்றார்.

நானும், சூஜியும், ஒவ்வொருவரும் நான்கு மணி நேரம், முறை வைத்துக் குழந்தையைக் கவனித்துக் கொள்வது என முடிவு செய்தோம். அன்று மாலை நான் மருத்துவமனைக்கு வந்தபோது சூஜி குழந்தையின் அருகிலிருக்க அனுமதி பெற்றிருந்தாள். நானும் நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் டினாவைப் பார்த்தேன். கடிபட்ட கால் அளவுக்கு மீறி வீங்கியிருந்ததுடன் நீலமாகவும் இருந்தது. அவளுக்கு ஆகாரம் ஊசி மூலமாகவே அளிக்கப்பட்டது. கரடிப் பொம்மையை மார்புடன் அணைத்தவாறு கண்மூடியிருந்தாள்.

ஒரு மணிக்கு ஒரு தடவை டினாவின் உடல் வெப்பம், இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, உடல்வலிமை முதலியவை சோதனை செய்யப்பட்டன. ஒவ்வொரு மணிக்கும் டினாவின் கால் மேலும் மேலும் வீங்கிக் கொண்டே போயிற்று. உடல் வெப்பமும் அதிகரித்தது. உடலில் ஏறியிருந்த பாம்பின் விஷத்திற்கும் அதை முறியடிக்கக் கொடுக்கப்பட்ட மருந்துக்கும் இடையில் போராட்டம் நடந்து [illegible] ஆரம்பித்த நீல நிறம் கணுக்கால்வரையில் பரவிற்று. அதே சமயம் வயிறுவரையும் நீல நிறம் ஏறிற்று.

டொக்டர் நிர்ணயித்த நாற்பத்தெட்டு மணி நேரம் போய் புதன் கிழமையும் வந்தது. குழந்தை டினாவுக்குச் சுயநினைவு இல்லாவிட்டாலும் உயிருடன் இருந்தாள். இதற்கிடையில் "சிலவேளைகளில் நாம் ஒரு வேளை அவள் காலையே அகற்றி விடுக்க நேரலாம்" என றிச்சாட் கவலையுடன் தெரிவித்தார்.

அன்று மாலை நான் மருத்துவமனைக்கு வந்தேன். ஜன்னல் வழியாக என்னைக் கண்டதும் சூஜி வெளியில் வந்தாள். அவள் உடல் நடுங்கிற்று. கண்களில் நீர் பெருகிற்று. "நான் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்யவேண்டும். டினாவின் இதயத்துடிப்பு நின்று விட்டது. அவள் உயிர் பிரிந்துவிட்டது போலத் தோன்றுகிறது" என்று கூறிக் கதறினாள்.

பதினைந்து நிமிடங்களுக்கு முன்புதான் சூஜி குழந்தைக்கு ஸ்பூனால் ஆகாரம் கொடுத்தாளாம். பாம்பு கடித்து உயிருக்குப் போராடிய பிறகு குழந்தைக்கு அளிக்கப்பட்டும் திட உணவு அதுதான். அந்நேரம் டொக்டர் றிச்சாட்டும் அருகில் இருந்தாராம். டினா திடீரென்று இரண்டு முறை இருமிவிட்டு, கண்களைச் சுழலவிட்டபடி பெருமூச்சுவிட்டாளாம். றிச்சாட், சூஜியின் கையைப் பிடித்து அறைக்கு வெளியே கொண்டு வந்து விட்டாராம்.

மறுகணம் இரண்டு இருதய சிகிச்சை நிபுணர்கள் ஓடிவந்தனர். அவர்கள் இருவரும் டினாவின் இருதயத்தை கசக்கத் தொடங்கினர். சற்று நேரத்தில் வெளியே வந்த றிச்சாட் ஆறுதலளிக்கும் விதத்தில் "அவள் உயிர் திரும்பிவிட்டது. மிகவும் பலவீனமாக இருக்கிறாள். உள்ளே இருக்கும் டொக்டர்கள் இருவரும் சிறந்தவர்கள். அவர்கள் தங்கள் அறிவு சக்தி அனைத்தையும் பிரயோகித்துக் குழந்தையைப் பாதுகாக்கத் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள். இதை மாத்திரம் என்னால் உறுதியாகக் கூறமுடியும்" எனக் கூறினார்.

உடல் பருத்த ஒருவர் வியர்வை வழிய எங்களை நெருங்கி வந்தார். "நான் பாதர் கெல்லி" எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர், எங்களைப் பிரார்த்தனை செய்யும்படி தூண்டினார். நானோ, சூஜியோ மாதா கோயிலுக்குப் பிரார்த்தனை செய்யப் போவதில்லை. பாதிரியார் கெல்லியின் நம்பிக்கை மிகவும் சக்தி வாய்ந்தது. அவருடைய வேண்டுதலுக்குக் கீழ்ப்படிந்து நாங்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டோம்.

எங்களுக்கு டினாவைப் பார்க்க அனுமதி கிடைத்தது. அவள் சுயநினைவிழந்து கிடந்தாள். அவளுக்கு இரத்தம் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

"குழந்தையின் இதயம் எப்படி நின்றது" எனக்கேட்டதற்கு "உணவுப் பொருள் தொண்டையில் அடைத்துக் கொண்டிருக்கலாம். எனினும் நிச்சயமாக எதையும் சொல்வதற்கில்லை" என்றனர் மருத்துவர்கள்.

பயத்துடன் எங்கள் இரவு கண்காணிப்பு தொடங்கிற்று. நாங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை. எங்களில் ஒருவர் அருகில் இருந்தால் குழந்தை இறக்க மாட்டாள் என்ற நம்பிக்கை எங்களைப் பிரதானமாக அவளருகில் இருக்கச் செய்தது.

மறுநாள் மூச்சுவிடக் கஷ்டப்பட்டாள். நுரையீரலைச் சுற்றிக் காற்று அடைத்துக் கொண்டிருப்பதை அறிந்த டொக்டர்கள் ஓர் அறுவைச் சிகிச்சை செய்து உள்ளே ஒரு குழாயைப் பொருத்தினார்கள். சுவாசம் விடுவதற்கு சுலபமாக உதவும் என்றனர். ஆயினும் எதிர்பார்த்த அபிவிருத்தி ஏற்படவில்லை. டினா அசையாமல் படுத்திருந்தாள். அவளது பார்வை சுவாசம் அபிவிருத்தியடையப் பொருத்தியிருந்த இயந்திரத்தின் மீது நிலைகுத்தியிருந்தது.

இரண்டு நாட்களின் பின் குழாயை அகற்றினார்கள். டினாவை ஒட்சிசன் கூடாரத்துள் படுக்க வைத்தார்கள். அவளுடல் மேலும் விறைத்துக் கொண்டது. பாம்பு கடித்த கால் கறுப்பாக மாற ஆரம்பித்தது. அதனால் மூச்சுவிட முடியவில்லை. மீண்டும் ஒரு சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமெனக் கூறி சத்திரசிகிச்சை அறைக்குள் கொண்டு சென்றனர்.

ஒரு மணி நேரம் கழிந்தது. தாதியர், டொக்டர்கள் பரபரப்புடன் ஓடினர். குழந்தையின் படுக்கையை வார்டின் கீழ்ப்பகுதிக்குக் கொண்டு சென்று விரித்தார்கள். ஆட்கள் குழந்தையை ஸ்ரெச்சரில் தூக்கிக் கொண்டு வேகமாகச் சென்றார்கள். என்னால் டினாவின் [illegible] கூடப் பார்க்க முடியவில்லை. உரத்த குரலில் "குழந்தை பிழைத்துவிட்டாள்" என்று கத்தினேன்.

பாம்பு கடித்த மூன்றாவது வாரம் முதல் முறையாகக் குழந்தை டினாவை நாங்கள் கையில் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டோம். நான்கு நாட்களுக்குப் பிறகு டினாவை வீட்டிற்கு அழைத்துப் போகச் சொன்னார்கள்.

இன்றைக்கும் டினாவுக்குப் பத்து வயதாகிய நிலையில் அவளுக்கு என்ன ஆயிற்று என்று தெரியவே தெரியாது. அவள் தொடையில் கறுத்த சிறு வீக்கமும் பாம்புக் கடித்த பின்பு அறுவைச் சிகிச்சை செய்ததன் தழும்பும் தான் இருக்கின்றன. எனக்கும், சூஜிக்கும் தான் அது எதனால் ஏற்பட்டது என்று தெரியும். மற்றப்படி அவள் உயிரைக் காப்பாற்ற உழைத்தவர்களுக்கும் நினைவிருக்கலாம்.

டினா கொடிய நாகத்தின் விஷக்கடியில் இருந்து மீண்டது அதிசயமா! அற்புதமா? யாருக்குத் தெரியும்.

**தமிழில் – ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# செந்நீர்

அதிகாரி என்றால் எல்லாரும் அதிகாரி அல்ல. கல்வி அதிகாரி நல்லநாதன் வருகின்றார் என்றால், ஒரு நிசப்தம் அந்தப் பிரதேசத்தில் நிலவும்.

அவர் அவ்வளவு உயரமில்லை. எட்ட அடிவைத்து நடக்கமாட்டார். கிட்டக்கிட்ட ஆனால் விரைவாக - வேகமாக அடி எடுத்து வைத்து நடக்கும் போது நிலம் அதிரும். கையில் அதிகாரிகளுக்கான பை இருக்கும். மேற்பார்வைக்கென மோட்டார் சைக் கிளில் தான் போய் வருவார்.

அவருக்கு வழங்கப்பட்ட துறை ஆரம்பக்கல்வி. அன்றும் வன்னிப் பிரதேசத்திலுள்ள ஒரு பாடசாலைக்குள் காலடி எடுத்து வைத்தார். யுத்தம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது.

அந்தப் பாடசாலை நூறு அடி இருபது அடி நீளமான கட்டடம். ஒரு அந்தத்தில் மேடை. அதன் மறு அந்தத்தில் நீண்ட ஒரு மறைப்பு அறை. அதுதான் அதிபரின் காரியாலயம். மீதியுள்ள இடத்தில் நான்கு வகுப்பு. மேடையில் தரம் ஒன்றும் இரண்டும் வகுப்பு ஒன்றாக. அடுத்து மூன்று, நான்கு வகுப்பு. அதிபர் காரியாலயத்திற்கு முன்பாக தரம் ஐந்து வகுப்பு.

மேடைப்பக்கம் அமைந்திருந்த பகுதியிற் தான், பாடசாலை வளவிற்கான கேற். அவர் பாடசாலைக்குச் செல்லும் போது பகல் பத்து மணியாகி விட்டது. ஏற்கனவே ஒரு பாடசாலையைத் தரிசித்திருந்தார்.

யுத்த சூழலைக் காட்டி கல்வி நடவடிக்கையை புறக்கணிப்பதிலேயே கரிசனையைக் கொண்டிருந்தார் அந்தப் பாடசாலை அதிபர். அங்கு தனது உதவி தேவைப்படாது என்பதால் அப்பாடசாலையை விட்டுப் புறப்பட்டு விட்டார் அந்த உதவிக் கல்விப் பணிப்பாளர். இங்கு என்னடா என்றால்?... இங்கும் அப்படித்தான்.



மேடையில் ஒரு ஆசிரியை, தரம் ஒன்றும் இரண்டும் வகுப்பு அவருக்கு. வகுப்பில் பத்துப் பனிரண்டு பிள்ளைகள். கதிரை மேசை இல்லை. யுனிசெப் பாய்தான். பாயின் மீது மேடைக்குப் போடப்பட்டிருந்த கிரவல் படிவு படிந்து; வெள்ளை, நீல நிற யுனிசெப் பிளாஸ்ரிக் பாய் ஒரு புதுவித வர்ணத்தில்.........

பிள்ளைகளது வெள்ளை, நீல நிற சீருடையும் - அதே செந்நிறக் கிரவல் படிந்த பாய்க்கு - மச் பண்ணக் கூடிய வர்ணம்.

சுவர்க் கரையுடன் போடப்பட்டிருந்த பாயில் இரண்டு சிறுவர்கள் படுத்தவாறு... அவர்களது கால்கள் சுவரில் பதிந்தவாறு.

இன்னும் இரண்டு பெண்பிள்ளைகள் இன்னொரு பாயில் குறங்கிப் படுத்தவாறு... அதே பாயின் ஒரு ஓரத்தில் இன்னொரு பெண்பிள்ளை பயிற்சிக் கொப்பியைத் திறந்து வைத்தபடி, தனது கை விரல்களை மடித்துக் கணக் கிட்டவாறு... ஏதோ கணக்குச் செய்கின்றாள் போலும்.

ஆசிரியையும், தனது மேசைக்கருகில் ஒரு பிள்ளைக்கு பயிற்சிக் கொப்பியில் ஏதோ விளங்கப் படுத்தியவாறு... இந்த வகுப்பில் ஓரிரு பிள்ளைகளுக்கு மட்டும் தான் கற்பித்தல் நிகழ்கின்றதா?... தனக்குள் இக்கேள்வியைக் கேட்டுக் கொண்டார் நல்லநாதன் உதவிக் கல்விப் பணிப்பாளர்.

அவருக்கு மூக்கின் மேல் கோபம் வந்தது. மற்றப் பிள்ளைகள் பிள்ளைகள் இல்லையா?

மோட்டார் சைக்கிளை நிறுத்தும் பாவனையிலும், பின்னர் ஹெல்மெட்டைக் கழற்றி பொக்கற்றிலுள்ள சீப்பினால் நடு வழுக்கைத் தலையை தலை ஓரமாக உள்ள முடியால், இழுத்து மறைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டவாறே இவ்வகுப்பினை அவதானித்த நல்லநாதன்,

மோட்டார் சைக்கிள் பின் இருக்கையிலிருந்த தனது ஒப்பீஸ் பிறீவ் கேசினை கழற்றிக் கையிலெடுத்தார்.

வெடுக், வெடுக்கென அதிபர் காரியாலயத்தை நோக்கிச் சென்றார்.

தரம் மூன்று, தரம் நான்கு, தரம் ஐந்து வகுப்பைக் கடந்து அதிபர் காரியாலயத்துள் சென்றார்.

மூன்றாம் வகுப்பு ஆசிரியை மாணவன் ஒருவனை அதிபரை அழைத்து வர அவசரமாக அனுப்பினார். அதிபர் காரியாலயத்திற்கு வெளியாக இருந்த பாடசாலை சமையலறைக் கூடத்திற்கு ஓடிச் சென்ற மாணவன், அதிபரிடம் ஏஈஓ சேர் வந்துள்ளதாகத் தெரிவித்தான்.

அதிபர் வியர்க்க, விறுவிறுக்க நல்லநாதன் ஏஈஓ முன்பாக வந்து நின்றார்.

அதிகாரியென்றால், மற்ற ஆட்களைக் கதைக்க விடாது தான் பொரிந்து தள்ளுவதுதான் அழகு போலும்.

இஞ்சை பள்ளிக் கூடத்தில படிப்பு நடக்குதோ... அல்லது சமையல் மட்டும் நடக்குதோ?... அங்கை அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போனன்... அதிபர் இல்லை.... இஞ்சை என்னடா எண்டால் பிள்ளையள் பாயில படுத்துக் கொண்டு இருக்குதுகள். ரீச்சர் தன்ரை பாட்டுக்குப் பொரிந்து தள்ளினார் நல்லநாதன். கடை பண்ணிய அவரது நரைத்த மீசை துடிப்பது அவரது உதட்டசைவில் தெளிவாகத் தெரிந்தது.

மீண்டும் ஒருமுறை சீப்பை எடுத்து தலையை வாரிக் கொண்டார் அவர்.

இப்பதான் சேர் கிறேட் பைவ் இற்கு ஒரு வேர்க்கு குடுத்திட்டு குசினியில் என்ன நடக்குது எண்டு பார்க்கப்போனன்... தன்னிலை விளக்கம் அளிக்கத் தொடங்கினார் அதிபர். அதனைக் காதிற் போட்டுக் கொள்ளத் தயாராக இல்லாத ஏஈஓ, வெடுக் வெடுக்கென்று சப்பாத்துக்கால்களால் தரையை உதைத்தவாறு தரம் ஒன்று மேடை வகுப்பினை நோக்கி ஆக்ரோஷமாக நடையைக் கட்டினார்.

அவரைத் தொடர்ந்து ஓட்டமும் நடையுமாக அதிபர்...

தரம் ஒன்றும் இரண்டும் ஒன்றாக ஏழு பெண்கள் ஐந்து ஆண்கள் மொத்தம் பன்னிரண்டு. அன்றைய வரவும் பன்னிரண்டு. அதில் நான்கு பெண்கள் இரண்டு ஆண்கள் தரம் ஒன்று. மீதிப் பேரில் மூன்று பெண்கள், மூன்று ஆண்கள் தரம் இரண்டு எல்லா வற்றையும் துல்லியமாக வெளிக்காட்டியது வகுப்புக் கரும்பலகையின் வலது மேல் மூலை.

அல்லாமலும், வகுப்பறைக்குக் குறுக்காகக் கட்டப்பட்டிருந்த யுனிசெப் நைலோன் கயிற்றில் அழகாகக் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த படச் சொற்கள், படமும் சொற்களும் அட்டைகள் வலுநேர்த்தியாக அவற்றைப் பார்த்தாலே போதும். பிள்ளைகள் ஆசிரியர் உதவி இன்றியே எழுத்துக்களை இனங் கண்டு - வாசிக்கக் கற்றுக் கொள்வர்.

அத்தகைய விதத்தில் - திட்டமிட்டு மிகக் கனகச்சிதமாக அக்கற்றல் - கற்பித்தல் துணைச் சாதனம் தயாரிக் கப்பட்டிருந்தது.

இவை எல்லாம் மிஸ்டர் நல்லநாதன் ஏஈஓ யின் கோபத்தைச் சற்றுத் தணித்தது. ஆனாலும், தொண்டையைச் செருமிக் கொண்டார்.

தான் வகுப்பிற்குள் நுழைந்த பின்னராவது பிள்ளைகளை அலேட் பண்ணி - பாயில் அங்கொன்று இங்கொன்றாய் படுத்திருந்த பிள்ளைகளை தூக்கி [illegible] பார்த்த நல்லநாதன் சேர் ஏமாற்றமடைந்தார்.

பிள்ளைகள் செருக்கு குட் மோனிங் சொல்லுவாங்களோ என்று தணிந்த குரலில் ஓடர் பிறப்பித்தார் அதிபர். அதுகள்... பிள்ளைகள்... எங்கே?... கேட்டாற்றானே?

இதுதான் பழக்கம் என்று மனதுள் கறுவிய ஏஈஓ இந்த முறை அதிபர் றெக்கமண்ட் பண்ணி, அடுத்து நான் றெக்கமண்ட் பண்ணினால் தான் அடுத்த இன்கிறிமென்ட் என்று ஒரு அபாய அறிவிப்பை, தனது மிடுக்கான குரலில் தெரிவித்தார் நல்லநாதன்.

அந்த ஆசிரியை 'களுக்' கென்று வாய்விட்டுச் சிரித்து விட்டாள். நல்லநாதனுக்கு என்னவோ போலாகிவிட்டது. நான்... நான் தொண்டர் ஆசிரியர் சேர்.... என்ரை இன்கிறிமென்ரை நீங்கள் நிற்பாட்டேலாது. சம்பளம் கிடைச்சால்தானே, எங்களுக்கு இன்கிறிமென்ரைப் பற்றிக் கவலை.... ஒரு சதமும் ஸ்கூலாலை தாறேல்லை.... நாங்கள் சம்பளத்துக்காக வேலை செய்யேல்லை... ஆனால் தந்தால் வேண்டாம் எண்டு சொல்லமாட்டம் சேர்.. என்று எதுவித தயக்கமுமின்றி எடுத்துரைத்தார் அந்த ஆசிரியர்.

மிகக் கவனமாகப் பணியாற்றும் மிக அடக்க ஒடுக்கமான அவ் ஆசிரியைக்கு இவ்வாறு கதைக்கின்ற துணிவு எங்கிருந்து வந்தது என்று ஆச்சரியப்பட்டார் அதிபர். தனக்கு உறைப்பதற்காகத்தான் அப்படிச் சொல்லுகிறாரோ என்றும் ஒருகணம் தனக்குள் யோசித்துக் கொண்டார் அதிபர்.

காலங்காலமாக, அந்தப் பாடசாலை சமூகத்தாலும், அதிபர் மற்றும் அதிகாரிகளாலும் அரசியல் வாதிகளாலும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டும், அல்லது அவர்கள் தம்மைக் கவனிக்காமல் கை விட்டதும் அவரை அவ்வாறு கதைக்கத் தூண்டியதோ என அதிபர் ஒரு கணம் எண்ணிப்பார்த்தார்.

நல்லநாதன், நல்லாத் தான் விடுவார். ஆசிரியரைப் பார்த்து, அம்மா, சம்பளமோ இல்லையோ.... படிப்பிக்க எண்டு வந்திட்டால் ஒழுங்காகப் படிப்பிக்க வேண்டும். நாய்க்கு வேடம் போட்டால் குரைக்கத் தான் வேணும்... என்று தனது பக்க நியாயத்தை எடுத்துரைத்தார் நல்லநாதன்...

நாலு பிள்ளையள் படுத்திருக்கு. ரெண்டு தங்கடை பாட்டுக்குத் துள்ளிக் கொண்டு நிக்குதுகள். ஒண்டு கணக்குச் செய்யுது. ஒண்டுக்குப் படிப்பிக்கிறியள்... அது ஒண்டுதான் பிள்ளையே?... மற்றதுகளும் பிள்ளைகள் தானே?... அதுகளும் படிக்கிறதுக்குத் தானே வருகுதுகள்... சரி... என்னைக் கண்ட பிறகாவது அந்தப் பிள்ளையளை எழும்பி இருக்கச் செய்து படிப்பிச்சிருக்கலாம் எல்லே?... மூச்சு விடாமற் கதைத்தார் ஏஈஓ சேர்...இப்ப பத்து நாற்பத்தைந்து தாகுது... இன்னும் பத்துப் பதினைந்து நிமிடத்தில, மதிய போசனக் கஞ்சி றெடியாகி விடும்... அதைக் குடிச்சிட்டு பிள்ளையள் எழும்பி உசாராகப் படிக்குங்கள். பன்னிரண்டு மணிக்கு விடுகிற வகுப்பு ஒன்றரை மட்டும் நடக்கும். பேந்து பாருங்கோவன் பிள்ளையளின்ரை உசாரை..... சில பிள்ளையள் நேற்று இஞ்சை சாப்பிட்டிட்டுப் போனதற்கு... பிறகு ஒன்றும் சாப்பிடுறேல்லை.... ஆசிரியை சொல்லிக் கொண்டு போக நல்லநாதன் உதவிக் கல்விப் பணிப்பாளரின் கண்களில் கண்ணீர் பொலபொலவென வடியத் தொடங்கியது. நல்லநாதன் பிள்ளைகளின் வாடிய முகங்களுக்குள் எதையோ தேடினார். அதிபர் சமையலறைக்குச் சென்றதும் காரணமாகத்தான். ஏஈஓ விழித்துக் கொண்டார்

அவர் தனது கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைக்க முற்பட்ட போது ஓரிரு கண்ணீர்த்துளி யுனிசெப் பாயில் சடக்கென விழுந்தான் செய்தது. செம்மண் புழுதியுடன்பட்டு அது செந்நீராகியது.

- [illegible] -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

குறுநாவல்

20

நா.யோகேந்திரநாதன்

சின்னத்தம்பியின் முரட்டுக்குரலில் வெளிவந்த அந்த அதட்டலில் காசிப்பிள்ளை முதலாளி அதிர்ந்தே போய்விட்டார். நெஞ்சில் ஒரு வித பய உணர்ச்சியும் மேலெழ ஆரம்பித்தது. தான் கொண்டு வந்த வெள்ளைச் சாராயப் போத்தலைத் தயக்கத்துடன் எடுத்து மீண்டும் தனது பைக்குள் வைத்துக் கொண்டார்.

சாரஜன்ட் ஒரு செருமலுடன் ஆரம்பித்தார். "முதலாளி நீங்கள் முதல் வந்த விஷயத்தைச் சொல்லியிருக்க வேணும். பிறகு நான் அதுக்குச் சம்மதிச்சால் உங்கடை அன்பளிப்பை தரலாம். நீங்கள் முதலே போத்தலை தந்தால் அது என்னை விலைக்கு வேண்டிப்போட்டு உங்கடை அலுவல் பார்க்கிற மாதிரியல்லே...?"

இப்போ காசிப்பிள்ளைக்கு சற்று நிம்மதி பிறந்தது போல் தோன்றிற்று. "ம், இனி வந்த விஷயத்தைச் சொல்லுங்கோ...!" என்றார் சின்னத்தம்பி தனது பெரிய மீசையை ஒரு முறை தடவி விட்டவாறே. "பொன்னம்பலம், இராமலிங்கம் ஆக்களைப் பிணையில்லை விட வேணும்..." காசிப்பிள்ளை தயக்கத்துடன் ஒவ்வொரு வார்த்தைகளாகச் சொல்லி முடித்தார்.

"பிணை விடுறது கோடு. நல்ல அப்புக்காத்தை வைச்சுப் பிணை கேளுங்கோ...!"

"பொலிஸ் ஓமெண்டால் தானே நீதவான் பிணையிலை விடுவார்" என்றார் காசிப்பிள்ளை.

"முதலாளி! பொலிஸ் ஓமெண்டு சொல்ல இது என்ன கோழி களவெடுத்த கேசே... கொலையல்லே... குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் எந்த நீதவானும் பிணை விடார் தெரியுமோ. சிங்கன்ரை உடம்பிலை இருந்தது எடுத்த குண்டுகள் எல்லாம் கொழும்புக்கு அனுப்பியாச்சு.. அங்கையிருந்து றிப்போட் வந்த பிறகு தான் குற்றப்பத்திரிகை போடுவம்"

காசிப்பிள்ளை மெல்ல முனகினார். "குற்றப்பத்திரிகையைப் பிணை விடத்தக்க மாதிரி அதை நீங்கள் தான் செய்வியள்"

"முதலாளி இவங்கள் தான் கொலை செய்ததெண்டதுக்கு எல்லா ஆதாரமும் இருக்குது. அதுவும் திட்டமிட்ட கொலை... தூக்கை விட வேறை தண்டனை கிடையாது. விளங்குதே?"

காசிப்பிள்ளை எதுவுமே பேசவில்லை.

சின்னத்தம்பி தொடர்ந்தார், "ஆனால் உங்களுக்கு ஒரே ஒரு சாதகம் இருக்குது.. என்னெண்டால் கண் கண்ட சாட்சி இல்லை.. நீ...ஜீ..மாதிரி பெரிய அப்புக்காத்தை வைப்பியளெண்டால் சான்ஸ் இருக்குது.."

"ஆரை வைச்சாலும் எல்லாம் உங்கடை எழுத்திலை இருக்குது.. பிணையிலை விடவெண்டாலும்.."

"முதலாளி.. இப்ப பிணை விட்டால் பொன்னுக்குட்டியன் கலைச்சுக் கலைச்சு வெட்டுவான்.."

முதலாளிக்கு ஏதோ துணிவு வந்து விட்டது போல் தோன்றியது. "நல்ல சேட்டை எங்கடை ஆக்கள் விடுவாங்களே..? மணியாரன்மூலையையே கொளுத்த மாட்டாங்களே..?"

சின்னத்தம்பியின் முகம் இறுகியது. "அப்ப ஒரு பெரிய சாதிச் சண்டை நடத்திக்காட்டப் போறியள். அப்பிடித்தானே..?"

காசிப்பிள்ளை சின்னத்தம்பியின் மாற்றத்தில் திகைத்துப் போய் வாயடைத்துப் போனார்.

சின்னத்தம்பி தொடர்ந்தார். "பிணை விட முடியாது" மற்றும்படி வழக்கினை பார்த்து ஏதாவது செய்யிறதெண்டால் செய்யலாம். எப்படியும் வழக்கு முடிய இரண்டு மூண்டு வரியம் செல்லும். அதுக்கிடையிலை மெல்ல மெல்ல மணியாறன் மூலையாரின்ரை கோபமும் அடங்கிவிடும்"

அவர்களைத் தூக்குக்கு அனுப்பாமல் விட்டாலே போதும் என்றளவுக்குக் காசிப்பிள்ளையின் நிலை வந்து விட்டது. சின்னத்தம்பியின் பதில் அவருக்கு சற்று ஆறுதலைக் கொடுத்தது.

"உருத்திரபுரத்தான்கலிலை ஒருதனுக்கு ஆயுள் தண்டனை கிடைக்கும்.. பொன்னம்பலத்தையும், இராமலிங்கத்தையும் தப்பவைக்கலாம். ஆனால் என்னைப் பெரிய அளவிலை கவனிக்க வேணும்"

காசிப்பிள்ளை மகிழ்ச்சியில் படபடத்தார். "அது எத்தினை ஆயிரமெண்டாலும் நான் சிலவழிப்பன்"

"சரி இனி எடுத்து வையுங்கோ போத்தலை மேசையிலை, என்றார் சின்னத்தம்பி ஒரு மெல்லிய புன்னகையுடன். இருவருமே ஏனையவர்களைத் தப்ப வைத்து அம்பைத் தண்டிப்பது பற்றித் திட்டம் போட ஆரம்பித்தனர்.

பத்து பதினைந்து நாட்களுக்குள் மணியாறன் மூலையில் வெகு அழகான வாசிகசாலை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இளைஞர்கள், பெரியவர்கள் என எல்லோருமே உற்சாகத்துடன் பங்கு கொண்டனர். ஆலடிவெட்டை இளைஞர்களும் இரவு வேளைகளில் வந்து உதவி செய்தனர்.

ஆலடிவெட்டை விளையாட்டு மைதானத்தின் பெயர்ப் பலகையையும் மணியாறன்மூலை வாசிகசாலையையும் திறந்து வைக்க டி.ஆர்.ஓ.தங்கவேலுவை ஏற்பாடு செய்து விட்டனர். அவர் வல்வெட்டித்துறை மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர். கனகரத்தினம் அவரிடம் முழு விஷயங்களையும் சொல்லி அழைத்த போது அவர் மிக மகிழ்ச்சியுடன் சம்மதித்தது மட்டுமின்றி சாதி பேதங்களுக்கு சவால் விடும் வகையில் இளைஞர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பாராட்டும் தெரிவித்தார்.

அதே வேளையில் இத்திறப்பு விழாவுக்கு விதானையாரைத் தலைமை தாங்க வைப்பது எதிர்காலத்தில் பல விஷயங்களுக்குச் சாதகமாக இருக்கும் எனக் கனகரத்தினம் நம்பினான். எனவே சின்னப்பனையும், பொன்னுக்குட்டியையும் போய் விதானையாரிடம் கதைக்கும் படி கேட்டுக் கொண்டான். சின்னப்பன் முதலில் தயக்கம் காட்டினாலும் பொன்னுக்குட்டி வலியுறுத்தியதன் பேரில் இருவரும் போகச் சம்மதித்தனர்.

அவர்கள் விதானையார் வீட்டுக்குப் போன போது



மால் முற்றத்தில் விதானையார் சாய்மனைக் கதிரையில் அமர்ந்து கள்ளுக் குடித்துக் கொண்டிருந்தார். சின்னன் அருகில் நிலத்தில் இருந்தவாறு ஓலை கிழித்துக் கொண்டிருந்தா. அவர்களைக் கண்டதும் சின்னன் எழுந்து சற்றுத் தொலைவில் ஓலையைப் போட்டுக் கிழிக்க ஆரம்பித்தாள்.

விதானையார் இருவரையும் ஆச்சரியத்துடன் பார்த்து விட்டு "என்ன சின்னனி, இஞ்சாலப்பக்கம்? அண்ணமாருக்குப் பொங்கல் வைக்கப் போறியே?" எனக் கேட்டார். பூசாரி சின்னப்பன் அண்ணமார் கோவிலில் பொங்கல் வைக்க முதல் அரிசி விதானையாரிடம் தான் வாங்குவதுண்டு.

பொன்னுக்குட்டி "அதுக்கில்லையய்யா.. ஒரு வாசிகசாலை திறக்கப்போறம். அதுக்கு நீங்கள் தான் வந்து தலைமை தாங்க வேணும்" என்றார்.

விதானையார் மெல்லிய கேலியுடன் கேட்டார் "எழுதப்படிக்கத் தெரிஞ்சவன் இல்லாத இடத்திலை ஏன் வாசிகசாலையை?"

"எங்கடை பிள்ளை குட்டியள் படிக்கும் தானே ஐயா"

என்றார் பொன்னுக்குட்டி. ஏதோ ஒரு விதமான ஆபத்து ஆரம்பிப்பதற்கான அறிகுறி தென்படுவதாகவே விதானையாருக்குத் தோன்றியது. கள்ளை எடுத்து சிறிதளவு அருந்தி விட்டு விதானையார் ஒரு செருமலுடன் சொன்னார் "நீங்கள் திறந்து நடத்துங்கோவன்! அதுக்கு நான் எதுக்கு?"

கனகரத்தினம் சொல்லிக் கொடுத்த அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டார் பொன்னுக்குட்டி "ஐயா! டி.ஆர்.ஓ.ஐயா வந்து திறந்து வைக்கிறதுக்கு நீங்கள் தலைமை தாங்கிறது தான் பொருத்தமாயிருக்கும்"

விதானையார் திடீரென நிமிர்ந்து உட்கார்ந்தார் "என்ன டி.ஆர்.ஓ.வாறாரோ..?"

சின்னப்பன் மெல்லச் சொன்னார் "ஓமய்யா. அவர் தான் திறக்கிறார்!" இவர்கள் டி.ஆர்.ஓ.விடம் நேரில் சென்று கதைத்திருக்க முடியாதென்றே விதானையார் நம்பினார். இவர்களுக்குப் பின்னால் நின்று இவர்களை யாரோ இயக்குவது போலவே அவருக்குத் தோன்றியது. ஆனால் அதைப்பற்றி அவர் எதுவுமே கேட்கவில்லை. ஆனால் அவர் மனதுக்குள் இச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தீர்மானித்துக் கொண்டார்.

"என்ன நாள் வருகுது...?"

"வாற வெள்ளிக் கிழமை ஐயா...!" என்றார் பொன்னுக்குட்டி.

"சரி வெள்ளி தானே நான் வாறன். மற்றது டி.ஆர்.ஓ.வுக்கு இரவு சாப்பாடு நான் ஒழுங்கு பண்ணுறன் சரியே?"

அவர்கள் சரியெனத் தலையாட்டினர். விதானையார் விஷயம் தனது கையை மீறிச் சென்று விடாமல் வெகு அவதானமாக நடக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டார். அந்த விழா ஏற்பாடுகள் யாவும் தனது தலைமையிலேயே இடம்பெறுவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை டி.ஆர்.ஓ.வுக்கு ஏற்படுத்தும் வகையில் காய்களை நகர்த்துவதன் அவசியத்தை தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தார்.

அன்று பகல் மணியாறன்மூலையில எந்த ஒரு வீட்டிலும் சமையல் இடம்பெறவில்லை. சிங்கனின் அந்தியேட்டி வீட்டிலேயே எல்லோருக்கும் அன்று சாப்பாடு. கமலி மனம் நிறைந்த சோகத்தைச் சுமந்து கொண்டிருந்தாலும் ஓடி ஓடி வரவேற்பதும் பரிமாறுவதும் என துடிப்புடனேயே செயற்பட்டாள். அவள் ஒவ்வொரு இலையிலும் ஒவ்வொரு அகப்பை சோற்றையும் போடும் போது, சிங்கனுக்குப் பரிமாறுவது போன்ற ஒரு திருப்தி அவளுள் நிறைந்தது. அதில் கலந்து கொண்ட அனைவருமே ஏதோ ஒரு மாற்றத்தை நோக்கிச் சிங்கன் திரும்பி விட்டதாகவே கருதினார்.

சிவஞானம் ஆலடிவெட்டை இளைஞர்கள் அந்தியேட்டி வீட்டில் போய் சாப்பிட வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தான். ஆனால் கனகரத்தினம் அதை எள்ளளவும் விரும்பவில்லை.

இப்படிச் சின்னச் சின்னச் சலசலப்புகளைக் காட்டி சாதி வெறியரை உசாரடைய விடக் கூடாது என்பது அவன் வாதம். பல்லாயிரம் ஆண்டுகளாக ஊறிப்போய் விட்ட சாதிப் பாகுபாட்டுக்கு எதிராக மிகவும் தந்திரமாகவே போராட வேண்டும் என்பதை விளங்கப் படுத்தினான். நீண்ட நேர விவாதத்தின் பின் சிவஞானமும் அதை ஏற்றுக் கொண்டான்.

விதானையாரே நேராக டி.ஆர்.ஓ.வீட்டுக்குப் போய் அவரை அழைத்து வந்து ஐந்து மணிக்கு ஆலடிவெட்டையிலை சிங்கன் ஞாபகார்த்த விளையாட்டுக் கழக பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

பின்பு காரில் ஏறி, இருவரும் அவர்களுடன் கூட வந்தவர்களும் மணியாரன்மூலையில் வந்திறங்கினர். டி.ஆர்.ஓ.காரிலிருந்து இறங்கும் போதே சீன வெடி கொழுத்தி வரவேற்பு ஆரம்பமானது. அன்று மணியாரன்மூலையாரைப் பார்த்த போது அவரின் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. ஆண்கள் எல்லோரும் வெள்ளை வேட்டி, சால்வையுடன் புதுக் கோலத்தில் நின்றனர். பெண்களும் புதிய ஆடைகளுடன் தோற்றமளித்தனர்.

வாசிகசாலை முன்பாக வந்த போது பொன்னுக்குட்டி, வாழைத்தடலில் கட்டப்பட்ட மாலையைக் கொண்டு வந்து விதானையாரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கி டி.ஆர்.ஓ.வுக்குப் போட்டு அவரை வரவேற்றார். பொன்னுக்குட்டி அடுத்த மாலையைக் கனகரத்தினத்திடம் கொடுத்து அதை விதானையாரிற்குப் போடும்படி கூறினார்.

கனகரத்தினம் மெல்லச் சிரித்தவாறே வரவேற்புரை நிகழ்த்தத் தயாராகிக் கொண்டிருந்த முத்துவேட்கையிடம் அதைக் கொடுத்து விதானையாருக்குப் போடும்படி கூறினான். அவன் சற்றுத் தயங்கிய போது "பயமில்லை போடுங்கோ!" என்றான் அவன்.

அவன் மாலையைக் கையில் வாங்கி விதானையாரின் கையில் கொடுக்க முயன்றபோது அவர் அவனை புரியாமலே குனிந்து மாலையைக் கழுத்தில் வாங்கிக் கொண்டார்.

நின்ற அனைவருமே ஒரு கணம் திகைத்துப் போய் நின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## ...ரயை தள்ளி வைக்காதே!

பத்துமாதம் சுமந்து
பக்குவமாய் பெற்றெடுத்து
பாரினிலே வளர்த்து விட்டாள்
உனக்கு வரும் துன்பத்தை
தனக்கே போர்வையாய்
போர்த்தி
உன்னை இன்பமாய் வாழ
வைத்தாள்
தள்ளாடும் வயதினிலே – நீ
தள்ளி வைத்துப் பார்க்காதே
தாய் என்னும் தெய்வத்தை.

ஜே. றேணுகா
அல்லிப்பளை.



## அன்புக்கு ஈடேதுமில்லை

தேனினும் இனிமை தந்து
அந்தத் தந்தை
எந்தன் உயிர்!

இளமையின் வருவது
மோகம்
ஆனாலென
இதயத்தில் வளர்ந்து
காதல்!

மிரிவில் வருவது
சோகம்
சோகமே
உருவானவை ரோகம்!

அன்பினால் வருவதும்
உறவு
இன்ப உறவினைத்
தொடுப்பதோ
சந்தோஷக் கோடு!

அன்புக்கு ஈடில்லை
எதுவும்
அந்த அன்பொன்றே
ஆண்டவன்
அறிவொன்றும் ஆலயம்!

கவிக்குயிலன்
சேனையூர்- 06

## பொய்மை

உன்னைப் போன்று அழகில்லை
இவ் உலகினிலே
என்று சொல்வான்
உன் அருகினிலே
இவள் தான் என் உயிர்
என்று சொல்லாப் அவன் பின்னால்
பின் கேள்விக்குறியாக்கி
நிற்பாய் பலர் முன்னால்

எஸ். டிஸ்மன்
யாழ்ப்பாணம்

## அநாகரிக விலங்குகள்

காதிலே தோடு
கையிலே பேசி
கால்வாசி உடை
சாயத்தில் தலை
கண்களில் காமவெறி
கருத்தில் கொச்சை
வேஷத்தில் மனித உரு
சதைத் தினவு
கட்டுத்தால்.....
முன்னைத் தினறுது
தமிழ்ப் பண்பாடு.

நகரத்துத் தெருக்களில்
நலிந்து திரியும்
நாகரீக விலங்குகளால்
நாசமாய்ப் போகிறது
நங்கையர் பலர்
நல்வாழ்வும்
நன்செய் கொண்ட மண்ணின்
நறுமணமும்.

இயந்திரங்கள்
[illegible] (தக்கிய) செய்த
கைதப்பிள்ளை [illegible]
பிள்ளைகள் என்று
பெற்றோர் நம்பிப் பெற்ற
பிசாசுகளே! – உங்களை
ஆண்மையென்று
பேடிதனத்தை
கல்லில் வைத்துக் குத்துங்கள்.

அன்னை கோதரி என
பிரித்தறியத் தெரியாக்
காண்மாக்களே! (பன்றி)
மனித சாயலில்
காமம் கொண்டலையும்
அநாகரிக விலங்குகளே
உங்கள் காமத்தின் வீரத்தை
காறாக்களோடு (எருமை)
காட்டுங்கள்.

என். அ[illegible]

## உயிரால் ஓர் வாழ்த்து!

அகிலத்திற்கு என்னை
அறிமுகம் செய்த தாயே!
அண்டமெல்லாம் என் புகழ் பரவ
அயராது உழைத்த அம்மாவே
அன்னையர் தினத்திலே
உனக்குக் கவி பாட முடியவில்லை.
கவிமழையில் உன்னை
நனைத்து – கவி வடிக்க
என் மனம் விரும்பவில்லை.
ஏனென்றால்
பத்துமாதம் எனைச் சுமந்து
பகலிரவா கஷ்டப்பட்டு
வளர்த்த அம்மாவே – உன்னை
காலமெல்லாம் கண் கலங்கிடாமல்
பாதுகாப்பதே என் கடமை.
உன்னைப் பற்றி கவி வடிக்க
இவ் அகிலத்திலே
முடியாத காரியம் அம்மா
கண்மணியாக என்னை வளர்த்து
கண் கலங்காமல் பாதுகாத்த
காவியமே– உனக்கு
என் உயிரால் ஓர் வாழ்த்து!



[illegible] ஜெசிந்தா
சங்கத்தானை[illegible]



ஆயிரம் ஆயிரம் கோரிக்கைகள்
மண்டியிட்டுக் கிடக்கின்றன
மண்ணினுள் ஆழப்புதைந்து!

வெற்றுக் கோசங்கள்
மேடைகளில் வேட்டொலியாய்!
ஏக்கங்கள் மட்டுமே
எம்மவர் இதயங்களில்!

அயல்நாடுகளில் அரங்கேறுகிறது
எம்மவர் கண்ணீர்க் காவியம்
கண் துடைப்பு ஒரு புறம்.....
கண்ணீர் வடிப்பு ஒரு புறம்...
கறைபடிந்த வாழ்வு எம்மவர் வாழ்வு
கறுப்புச் சரித்திரமாகிறது!

விடியலை நோக்கியிருக்கின்றோம்
விழித்திருந்த போதும் – எம்
விடியல்கள் களவாடப்பட்டதை
அறியாதவர்களாய்.........!

ச.செல்வமலர்
விநாயகபுரம்- 02
திருக்கோவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39 மனைவி, 160 குடும்ப உறுப்பினர்கள்

மிசோரம் மாநிலத்தில், 39 பெண்களை மணந்து, 160 குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றாக வசித்து வருகிறார், ஒரு அதிசய மனிதர். வடகிழக்கு மாநிலமான மிசோரத்தில் உள்ளது பக்தவாங் டியாங்னுவாம் கிராமம். இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர் சையோனா, வயது 67. விவசாயம், மரச்சாமான் தயாரித்தல் உள்ளிட்ட தொழில்களை நடத்தி வரும் சையோனாவுக்கு, 39 மனைவிகள்.

முதல் மனைவியின் பெயர் ஜதியாங்கி, வயது 71. இவருக்கு ஏழு குழந்தைகள். கடைசி மனைவி பெயர் வன்லால்சியாமி, வயது 31. இவருக்கு, ஐந்து வயது மகள் இருக்கிறாள். சையோனாவுக்கு, 15 மருமகள்கள் உள்ளனர். 29 மகள்கள் திருமணமாகி, கணவருடன் தனியாக வசிக்கின்றனர்.

நான்கு மாடி கட்டடத்தில், 101 பெரியவர்களும், 59 சிறுவர்களும் ஒரே குடும்பமாக வசிக்கின்றனர். கடந்த, 2000ஆம் ஆண்டு சையோனா, கடைசி திருமணம் செய்து கொண்டார். ஒட்டு மொத்த குடும்பத்தினரும், ஒரே சமையல் அறையில் சமைத்து, ஒன்றாக சாப்பிடுகின்றனர்.

காலை உணவுக்கு 50 கிலோ அரிசியும், இரவு உணவுக்கு 35 முதல் 50 கிலோ தானியத்தையும் சமைக்கின்றனர். அத்துடன் ஒவ்வொரு நாளும் 25 கிலோ உருளைக்கிழங்கு, 15 கிலோ பருப்பு மற்றும் ஏராளமான அளவில் காய்கறிகள் இவர்களின் வீட்டிற்கு தேவைப்படுகின்றன. மாமிசம் சமைத்தால், ஒரு நாளைக்கு 45 கிலோ மாமிசம் சமைக்கின்றனர்.

வீட்டு வேலைகளில் யார், யார் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்பதை முதல் மனைவி தீர்மானிக்கிறார். வீட்டில் உள்ள ஆண்களை மற்ற வேலைகளுக்கு அனுப்புகிறார் சையோனா. வீடு கட்டுமானப் பணி மற்றும் தோட்ட வேலைகள் போன்றவற்றுக்கும் ஆட்களை அனுப்புகிறார்.



# மறைந்த ஹொலிவூட் நடிகையின் புகைப்படம் 3.5 லட்சம் டொலர்

அமெரிக்காவின் மறைந்த ஹொலிவுட் நடிகை மா்லின் மன்றோவின் புகைப்படம் ஒன்று, மூன்றரை லட்சம் டாலருக்கு விற் பனையாகியுள்ளது. மா்லின் மன்றோ, திரைப்பட நடிகையாகி விட வேண்டும் என ஆசைப்பட்டு முயற்சித்துக் கொண்டிருந்த, 1946ல், எடுக்கப்பட்ட புகைப்படம் அது.

ப்ளூ புக் மாடலிங் ஏஜன்சி என்ற மொடலிங் நிறுவனத்தில் உறுப்பினராக பதிவுசெய்து, வாய்ப்பு தேடிக் கொண்டிருந்த மன்றோவின் தலைமுடி, பிரவுண் வண்ணத்தில் இருந்தது.

அவரது முக அழகுக்கு, கோல்டன் வண்ண தலைமுடி தான் பொருத்தமாக இருக்கும் என கருதிய பிரபல புகைப்பட நிபுணா் நா்மா ஜீன், மன்றோவின் தலைமுடிக்கு, தங்க வண்ண டை அடித்து எடுத்த அந்த புகைப்படம் தான், மா்லின் மன்றோவுக்கு, 'ட்வண்டியத் செஞ்சுரி பாக்ஸ் ' திரைப்பட நிறுவனத்தில் நடிக்க வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. அதைத் தொடா்ந்து, அவா் உலகப் பிரசித்தி பெற்ற நடிகையானாா்.

இந்த புகழ் காரணமாகவே இப்புகைப்படம், மூன்றரை லட்சம் டொலருக்கு விற்பனையாகியுள்ளது.

யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்!



# சீனாவில்...

சீனா பலவகை தேசிய இனங்கள் ஒன்றிணைந்த நாடாகும். தற்போது சீனா அரசு உறுதி செய்துள்ளபடி 56 தேசிய இனங்கள் இருக்கின்றன. அதில், ஹான் இனம் தவிர மற்ற 55 இனங்களின் மக்கள் தொகை குறைந்து வருகிறது.

இங்கே நீங்கள் கண்டுரசிக்கின்ற ஆடைகள் ஹா நி இன மக்கள் அணியும் ஆடைகளாகும்.

ஹா நி இனம், சீனாவின் தென்மேற்கு எல்லைப் பகுதியில் வாழ் மிக பழைய இனங்களில் ஒன்றாகும். இவ்வினத்தின் பெரும்பாலானோர், யுன்னான் மாநிலத்தின் தென் பகுதியிலுள்ள ஹாங் ஆறு மற்றும் லான் சாங் ஆறு இடையிலான பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்வுச் சுற்றுச்சூழல் காரணமாக, ஹா நி இனத்தின் ஆடைப் பண்பாடு செழுமையானவை. கைவினை தயாரிப்புத் தொழில் நுட்பத்துடன், அதன் ஆடை வகைகளின் எண்ணிக்கை 100க்கு அதிகமாகும்.

# காதலை வெளிப்படுத்த 9999 சிகப்பு ரோஜாக்களில் உருவான கவுன்

*காதலின் மிகவும் பொன்னான நேரம் எது தெரியுமா? தங்கள் அன்புக்குரிய காதலியிடம், காதலர்கள், முதன் முதலில், காதலை வெளிப்படுத்தும் நேரம் தான். காதலை வெளிப்படுத்திய அந்த சுகமான நிமிடங்களை, வாழ்நாள் முழுவதும், நினைத்து நினைத்து இன்பம் காண்பதில், காதலர்களுக்கு அப்படி ஒரு இஷ்டம்.*

*சீனாவைச் சேர்ந்த ஜியாவோ பாண்ட் என்ற இளைஞர், தன் காதலியிடம், காதலை தெரிவிப்பதற்காக, என்ன செய்திருக்கிறார் தெரியுமா?*

*ஒன்பதாயிரத்து, 999 சிவப்பு ரோஜாக்களை வாங்கி, அவற்றை அழகிய கவுணாகத் தைத்து, தன் காதலிக்கு வழங்கி, காதலை தெரியப்படுத்தியிருக்கிறார். இதற்காக, இவர் பட்ட சிரமங்கள் ஏராளம். பல தையல் கலைஞர்களை வரவழைத்து, ரோஜா மலர்களுக்கு எந்த சேதமும் ஏற்படாமல், அனைத்து ரோஜாக்களையும் இணைத்து, அழகிய உடையாக தைத்துள்ளார்.*

*ஜியாவோ கூறுகையில், ஒரே ஒரு ரோஜாப் பூவை கையில் கொடுத்து, ஐ லவ் யூ என கூறி விடலாம் என திட்டமிட்டிருந்தேன். ஆனால், என் காதலி, புதுமையாக உடை அணிய வேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவர். அதனால், அவரை அசத்து வதற்காக, இந்த சிவப்பு ரோஜா கவுணை அவளுக்கு பரிசாக அளித்து, காதலை வெளிப்படுத்தினேன்... என்றார். அதெல்லாம் சரி... இந்த புதுமையான உடையில், உங்கள் காதலியை பார்ப்பதற்கு எப்படி இருந்தது? என, கேட்டபோது, வானுலகில் இருந்து, சிவப்பு உடை அணிந்து, தேவதை இறங்கி வந்தது போல் இருந்தது... என, உணர்ச்சிவசப்பட்டார்.*



# கல்லறையில் தொழில்புரியும் பெண் பட்டதாரிகள்

சீனாவில் மக்கள் தொகை அதிகரித்துள்ள அளவுக்கு, வேலை வாய்ப்புகள் இல்லை. அங்குள்ள இளைஞர்கள், எந்த வேலை கிடைத்தாலும் பரவாயில்லை, கை நிறைய காசு கிடைத்தால் சரி... என்ற மனநிலைக்கு வந்து விட்டனர். சீனாவில், இறந்தவர்களை அடக்கம் செய்யும் கல்லறைகளுக்கு, பெரும்மரியாதை தரப்படுகிறது. உடல்களை அடக்கம் செய்வதற்காக, கல்லறைக்கு வருவோரை, ஆறுதல் கூறி தேற்றுவதற்காகவே, ஒவ்வொரு கல்லறையிலும், பெண் ஊழியர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது, சீன அரசு.

முதல் கட்டமாக, ஐந்து பெண்கள், நியமிக்கப்பட்டுள்ளனர். ஐந்து பேரும், 25 வயதுக்கு உட்பட்டவர்கள். பட்டப்படிப்பு முடித்தவர்கள். மாண்டரின் மொழியில் சரளமாக பேசத் தெரிந்தவர்கள். இவர்களுக்கு ஆண்டுக்கு, தலா எட்டு லட்சம் ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. இது தவிர, வசிப்பதற்கு ஆடம்பரமான ஒரு வீடு உள்ளிட்ட சில வசதிகள் இலவசம்.

கல்லறையில் வேலை செய்வது குறித்து, அந்த பெண்கள் கூறுகையில், வேலை ஒன்றும் சிரமமில்லை. இந்த வேலையை மட்டமாக கருதவில்லை. ஆனாலும், இந்த வேலையில் சேருவதுதான், பெரும் சிரமமாக இருந்தது. ஐந்து பணியிடங்களுக்கு, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்விண்ணப்பித்திருந்தனர். கல்லறை வேலையாக இருந்தால் என்ன, காசு கிடைக்கிறதே... என, உற்சாகத்துடன் கூறுகின்றனர். அவர்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெலுங்கு பட நாயகன் ராம், தமன்னா இருவரும் இணைந்து நடித்திருக்கும் திரைப்படம் ஏனென்றால் காதல் என்பேன். இந்தப் படத்தை இயக்கிய இயக்குனர் கருணாகரனை கொலிவுட் இயக்குனர்கள் லிங்குசாமி, முருகதாஸ், பாலாஜி சக்திவே ஆகியோர் படத்தின் அறிமுக விழாவில் வாழ்த்தியுள்ளார்கள்.

இப்படத்தை ஷரவந்தி மூவிஸ் ரவிகிஷோர் தயாரித்துள்ளார், தெலுங்கில் இருபதுக்கும் மேற்பட்ட படங்களை இவர் தயாரித்துள்ளார். ராம்,தமன்னா இருவரும் காதல் ஜோடியாக படத்தில் இணைந்துள்ளார்கள். கவிஞர்கள் முத்துக்குமார், மதன் கார்க்கி இருவரின் பாடல் வரிகளுக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் அறிமுகவிழாவில் இயக்குநர் கருணாகரன் உரையாற்றும்போது, கொலிவுட்டிலிருந்து தெலுங்கு பட உலகிற்கு சென்ற எனக்கு அங்கே வரிசையாக ஹிட் படங்கள் கிடைத்தன, தற்போது இங்கே வந்துள்ளேன். ஏனென்றால் காதல் என்பேன் ஒரு காதல் படம், தமிழில் இந்த தலைப்பில் வெளியாகும் இப்படம்,தெலுங்கில் எந்துகந்தே பிரேமந்தா என்ற டைட்டிலில் வெளியாகிறது.

படத்தை பற்றி அதிகம் பேசினால் எதிர்பார்ப்பும் அதிகமாகிவிடும் என்பதால் படம் தொடர்பான உரையை நிறுத்தி தனது அனுபவங்களை பகிர்ந்தார்.

படிக்கும்போதே எனக்கு தமிழில் நடிக்க வாய்ப்பு வந்தது. இயக்குநர் பாலாஜி சக்திவேலும் ஷங்கர் சாரும் என்னை காதல் படத்துக்காக தேர்வு செய்தார்கள். சில காரணங்களால் படத்தில் நடிக்க முடியாமல் போனது என்றார்.அதற்கு பிறகு தெலுங்கில் ஏழு படங்களில் நடித்தேன் என்றார் இயக்குநர் கருணாகரன்.

# ஏனென்றால் காதல் என்பேன்

# இயக்குநருக்கு வாழ்த்து மழை

**சினி பிட்ஸ்**

## சூட்டிங்கில் அனன்யா கை முறிந்தது

நாடோடிகள், சீடன், எங்கேயும் எப்போதும் போன்ற படங்களில் நடித்தவர் நடிகை அனன்யா. மலையாளத்திலும் முன்னணி நடிகையாக இருக்கிறார். தற்போது மலையாளத்தில் விஜி தம்ப இயக்கி வரும் நாடோடி மன்னன் படத்தில் அபுசலீம் உடன் நடித்து வருகிறார். இப்படத்தின் சூட்டிங் கேரள மாநிலம் கொச்சி அருகே நடந்து வந்தது. படத்தின் காட்சிபடி அபுசலீம், அனன்யாவை தள்ளிவிடுவது போன்ற காட்சியை படமாக்கினார். அப்போது அனன்யா நிலைதடுமாறி கீழே விழுந்ததில் அவரது கை முறிந்தது. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் 2 மாதம் ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள்.

## கேன்ஸ் திரைப்பட விழாவில் முப்பொழுதும் உன் கற்பனைகள்

உலகின் பல்வேறு நாடுகளில் நடக்கும் திரைப்பட விழாக்களில் கேன்ஸ் திரைப்பட விழாவும் ஒன்று. இந்தாண்டு வருகிற மே மாதம் 16 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. இதில் தயாரிப்பாளர்களின் சிறப்புத் திரையிடல் மே 17 முதல் 23 வரை நடக்கிறது. விழாவின் ஆரம்ப நாளில் முப்பொழுதும் உன் கற்பனைகள் படக்குழுவுக்கு சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 22 ஆம் திகதி முப்பொழுதும் உன் கற்பனைகள் படம் திரையிடப்பட இருக்கிறது.

விண்ணைத்தாண்டி வருவாயா, கோ போன்ற வெற்றி படங்களை தயாரித்த எல்ரெட் குமார் இயக்குநராக அவதரித்த படம் முப்பொழுதும் உன் கற்பனைகள். அதர்வா, அமலாபால் நடிப்பில் சமீபத்தில் வெளியானது இப்படம். இதுகுறித்து படத்தின் தயாரிப்பாளரும், இயக்குநருமான எல்ரெட் குமார் கூறுகையில், எங்கள் குழுவுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாக இதனை கருதுகிறோம் என்று கூறியுள்ளார்.

## ஜூன் மாதம் நடிகர் சங்கத்திற்கு தேர்தல்

நடிகர் சங்கத்திற்கு ஜூன் மாதம் தேர்தல் நடத்துவது என்று செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தென்னிந்திய நடிகர் சங்கத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளை சேர்ந்த நடிகர், நடிகையர் என மொத்தம் 1500க்கும் மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இந்த சங்கத்திற்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்படுகிறது. தலைவர், துணை தலைவர், பொருளாளர், செயலாளர் என பல்வேறு பிரிவுகளுக்கு தேர்தல் நடக்கும். தற்போதைய தலைவராக நடிகர் சரத்குமார் இருந்து வருகிறார். இவர் கடந்த 6 வருடங்களாக தலைவராக இருக்கிறார்.

## அஜித் படத்தில் அறிமுகமாக கொடுத்து வைத்திருக்கிறேன்

அஜித் படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாக நான் கொடுத்து வைத்திருக்கிறேன் என்று பார்வதி ஓமணக்குட்டன் கூறியுள்ளார். வெள்ளை மார்பிளில் செய்த சிலை போல வசீகர புன்னகையோடு, வாட்ட சாட்டமான உடல் அழகோடு கண்காட்சியில் வைத்த பொம்மை போல அழகாக இருக்கிறார். பில்லா-2 படத்தில் அஜித்துடன் நடித்தது பற்றி பார்வதி ஓமணக்குட்டன் தனது அனுபவத்தினை கூறுகையில்,

என்னுடைய முதல் அறிமுக படமே அஜித் சார் படம் என எண்ணும்போது ரொம்ப சந்தோஷமாக இருக்கு. நினைத்தாலே பெருமையாக இருக்கு. அஜித் பற்றி சொல்லணும் என்றால் அவர் ஒரு நல்ல மனிதர், நல்ல நடிகர், சூட்டிங் ஸ்பாட்டில் நிறைய உதவிகள் செய்வார். பில்லா-2 படம் ரசிகர்கள் எதிர்பார்க்கும் அத்தனையும் இருக்கும். அஜித் படத்தில் அறிமுகமாக நான் கொடுத்து வைத்திருக்கிறேன் என்றார்.

## சினிமா நூற்றாண்டு மாளிகையை ஜெயலலிதா திறந்து வைத்தார்

சென்னை அண்ணாசாலையில் உள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்திய சினிமா ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் ஆனதையொட்டி இதற்கு சினிமா நூற்றாண்டு மாளிகை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவும் இரண்டாவது மாளிகைக்கான அடிக்கல் நாட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றது. திரைப்பட வர்த்தக சபையின் புதிய கட்டிடத்தை முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

## ஜெயம் ரவியுடன் ஜோடி போடுகிறார் அமலா பால்...!

சினிமாவில் அறிமுகமான குறுகிய காலத்திலேயே தமிழ், தெலுங்கில் முன்னணி நாயகியாக வளர்ந்து இருக்கும் அமலா பால், அடுத்து ஜெயம் ரவியுடன் ஜோடி போட இருக்கிறார். அமீர் இயக்கும் ஆதி பகவன் படத்திற்கு பிறகு ஜெயம் ரவி பூலோகம் என்ற படத்திலும், அடுத்து சமுத்திரகனி இயக்கத்தில் ஒரு படத்திலும் நடிக்க இருக்கிறார். இதில் சமுத்திரகனி இயக்கும் படத்தில் தான் ஜெயம் ரவிக்கு ஜோடியாக அமலாபால் நடிக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

அவரும் கதையை கேட்டு உடனே ஓ.கே சொல்லி விட்டாராம். ஒரே சமயத்தில் தமிழ் மற்றும் தெலுங்கு என இரு மொழிகளிலும் இப்படம் வெளிவர இருக்கிறது.

இப்படத்தில் நடிக்க அமலாவிற்கு பேசப்பட்டிருக்கும் சம்பளம் 60 லட்சம்! ஒரே நேரத்தில் இரண்டு மொழிகளிலும் வெளியாகும் இந்த பெரிய பட்ஜெட்டில் படத்தில் ஒப்பந்தமானதால் அமலா சந்தோஷத்தில் திளைக்கிறாராம்.

## சினி துளிகள்

- ★ கடந்த மாதம் திருமணம் முடித்த ரீமா சென், மீண்டும் நடிக்க வந்துள்ளார். எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கத்தில் விஜயகாந்த் நடித்து ஹிட்டான படம் சட்டம் ஒரு இருட்டறை. இதே படம் மீண்டும் ரீமேக் ஆகிறது. இப்படத்திற்கு ரீமாசென் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.
- ★ ஏற்கனவே 30 பாடல்கள் சொந்த குரலில் பாடி இருக்கும் மோகன்லால் அடுத்து ஜோஷி இயக்கும் ரன் பேபி ரன் என்ற படத்துக்கு சொந்தக் குரலில் பாடுகிறார்.
- ★ விஜய் ஆதிராஜ் இயக்கும் புதிய படத்தில் ஆர்யா தம்பி சத்யா ஜோடியாக நடிக்கிறார் யுவன் பட ஹீரோயின் ரகுல் பரீத் சிங்.
- ★ ஜி.வி.பிரகாஷ் இசை அமைக்கும் கேங்ஸ் ஆப் வாசிபூர் படம் 65 ஆவது கேன்ஸ் சர்வதேச பட விழாவில் திரையிடப்படுகிறது.
- ★ வெற்றிமாறன் மீண்டும் இயக்கும் தனுஷ் நடிக்கும் படத்துக்கு வேங்கை சாமி என்று பெயர் வைத்திருப்பதாக கூறப்படுகிறது.
- ★ உலகநாயகன் கமலஹாசனின் விஸ்வரூபம் திரைப்படத்தை ஜெயா பிக்சர்ஸ் விலைக்கு வாங்க உள்ளது. இப்படத்தை கமலே இயக்குகிறார். இவருடன் பூஜா குமார், ஆண்ட்ரியா நாயகிகளாக நடிக்கிறார்கள்.
- ★ த்ரிஷா, கோ கார்த்திகா, ஜூனியர் என்டிஆர் நடித்துள்ள தெலுங்கு படம் தம்மு. இப்படம் கர்நாடகாவில் மட்டும் 150 தியேட்டர்களில் வெளியாகியுள்ளது. பெரிய கதாநாயகிகள் நடித்த கன்னட படத்துக்கு இணையாக இத்தனை தியேட்டர்களில் இப்படம் வெளியாவதால் கன்னட திரையுலகம் கொதித்துப் போயுள்ளது.
- ★ பில்லா-2 இல் ஹெலிக்கொப்டரிலிருந்து தொங்கிய படியான காட்சியில் டூப் வேடமிடாமல் தானே நடித்து அசத்தியுள்ளார் அஜித் குமார் .
- ★ கொலிவுட் நடிகர்கள் பிரசன்னா, சினேகா ஜோடிக்கு வருகிற மே மாதம் 11ஆம் திகதி திருமணம் நடைபெற உள்ளது. சினேகாவும், பிரசன்னாவும் சகநடிகர், நடிகைகள், உறவினர்கள், நண்பர்களுக்கு தனித்தனியாக சென்று அழைப்பிதழ் கொடுத்து வருகிறார்கள்.
- ★ உடல் உறுப்புகளை தானம் செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சகா அறக்கட்டளை நிறுவனம் நடத்திய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரசன்னா-சினேகா நட்சத்திர ஜோடி, தங்களது உடல் உறுப்புகளை தானம் செய்ய ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளனர்.
- ★ தமிழ் சினிமாவின் வெளிவந்த நகைச்சுவைப் படங்களில் ஒன்றான இம்சை அரசன் 23 ஆம் புலிகேசியின் அடுத்த பாகத்துக்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்.பி.சவுத்ரியின் ரகளை!

பிரபல தயாரிப்பாளர் ஆர்.பி.சவுத்ரி புதிதாக தயாரிக்கும் படத்திற்கு ரகளை என்று பெயரிட்டுள்ளனர். தமிழ்-தெலுங்கு ஆகிய 2 மொழிகளில் தயாராகும் இப்படத்தில் சிரஞ்சீவியின் மகன் ராம்சரண்-தமன்னா ஜோடியாக நடித்து இருக்கிறார்கள். முக்கிய வேடத்தில் பார்த்திபன், அஜ்மல் ஆகிய இருவரும் நடித்துள்ளனர். அத்துடன் நாசர், கோட்டா சீனிவாசராவ், கீதா, பரகதி ஆகியோருடன் இந்தி பட உலகின் பிரபல வில்லன் நடிகர்கள் ஐந்து பேரும் நடித்து இருக்கிறார்கள்.

மணிசர்மா இசையமைக்க, சமீர் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஜெயராம் ஏ.ஆர்.பி. வசனம் எழுதியிருக்கிறார். சம்பத் இயக்கியிருக்கிறார். ரூ.40 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ள ரகளை குறித்து அதன் டைரக்டர் சம்பத் கூறுகையில், இது. பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய ஜனரஞ்சகமான படம். சண்டை காட்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து படமாககப்பட்டு இருக்கிறது. கோவாவில், ரெயில் பாதையில் நடக்கும் கார் ரேஸ், சைனாவில் மூங்கில் தோட்டத்தில் ராம்சரண் வில்லன்களுடன் மோதும் சண்டைக் காட்சி ஆகியவை திரிலாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பாங்கொக், சுவிட்சர்லாந்து, மலேசியா, சீனா, கோவா, ஐதராபாத், பொள்ளாச்சி ஆகிய இடங்களில் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன என்றார்.



## திரைக்கு வரவுள்ள...



**ரகளபுரம்**
நடிகர் : கருணாஸ்
நடிகை : அங்கனா, இயக்குநர் :மனோ



**சிக்கி முக்கி**
நடிகர் : புதுமுகம்
நடிகை : தீஷா பாண்டே, இயக்குநர் :ஸ்ரீகாந்த் ராஜா



**உறுமி**
நடிகர் : பிருத்வி ராஜ்
நடிகை : ஜெனிலியா, இயக்குநர் :சந்தோஷ் சிவன்

## ஊலலலா


பிரபல பிரமாண்ட பட அதிபர் ஏ.எம்.ரத்னத்தின் வாரிசு, இளம் இயக்குநர், இளம் நடிகர், ரவி கிருஷ்ணாவின் சகோதரர் என பன்முகங்கொண்ட இயக்குநர் ஜோதி கிருஷ்ணா, தனது இயக்கத்தில் கதாநாயகர் அவதாரமும் எடுத்திருக்கும் திரைப்படம் தான் ஊ ல ல லா...!

கதைப்படி தன்னை பார்க்கும் போதெல்லாம் கடுப்படிக்கும் அப்பா, அடுப்படியே கதி என கிடந்தாலும் தன் மீதும் குடும்பத்தின் மீது பாசங் காட்டும் அம்மா, இரண்டும்கெட்டான் வயதில் ஒரு தம்பி, எங்க கூப்பிட்டாலும் ஏன்? எதற்கு.? எனக் கேட் காமல் பைக்கில் ஏறிக்கொள்ளும் நட்பு, பார்க்கும் பெண்கள் எல்லாம் தன்னுடன் பழகமாட்டார்களா...? என ஏங்கும் மனசை உடைய வயசு! இதுதான் சூர்யா எனும் ஹீரோ ஜோதி கிருஷ்ணா! இவருக்கு பாராமுகங்காட்டும் இளம் பெண்களில் ஒருத்தியையாவது பிடித்து நட்பாக்கி, லவ்வாக்கி, அவர் மூலம் ஊரில் உள்ளபெண்களைஎல்லாம்உரசி பார்த்துவிட வேண்டுமென்பது நப்பாசை அல்ல...! லவ் ஆசை...! அப்படிப்பட்ட சூர்யா-ஜோதி கிருஷ்ணாவிடம் பிரீத்தி எனும் திவ்யா பண்டாரி வகையாக சிக்குகிறார். காதல் கூடாது, நட்பு கிடையாது என கட் அண்ட் ரைட்டாக இருக்கும் திவ்யாவை, மெல்ல மெல்ல கவிழ்த்து நட்பாக்கும் ஜோதி கிருஷ்ணா, அந்த நட்பை தப்பாக பயன்படுத்தி பல பெண்களை மடக்கி அவர்களுடன் சுற்றுகிறார். ப்ரீத்தி எனும் திவ்யா பண்டாரிக்கோ ஜோதி மீதுள்ள நட்பு, மெல்ல மெல்ல காதலாக கசிந்துருகிறது. ஆனால், அதை அசட்டை செய்யாத ஜோதி கிருஷ்ணா, பல பெண்களை வட்டமடித்து கொட்டமடிக்கிறார். ஜோதி கிருஷ்ணா திருந்தினாரா...? திவ்யா பண்டாரி வருந்தினாரா...? என்பது ஊ ல ல லாவின் மீதிக்கதை!

நாயகர் திவ்யா பண்டாரி வருகிறார் போகிறார், சிரிக்கிறார், பைக்கில் பறக்கிறார்... தட்ஸ் ஆல்! ஜோதியின் அப்பாவாக தலைவாசல் விஜய், அம்மா ராணி, திவ்யா பண்டாரியின் அப்பாவாக பட்டிமன்றம் ராஜா, கஞ்சா கருப்பு, சேகர் பிரசாத், சிட்டி பாபு, பக்கோடா பாண்டி, சாய் சுந்தர், கவுரவ் என ஏகப்பட்ட நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். சேகர் சந்திராவின் இசையும் ஆர்.ஜி.சேகரின் ஒளிப்பதிவும் அசரடிக்கிறது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தவறுக்கு தண்டனை

மகாபாரத யுத்தத்தின் முடிவு சமயம்! பீஷ்மர் அம்புப்படுக்கையில் படுத்திருந்தார். அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஒருஞானியின்கண்களில்இருந்துகண்ணீர்வழிவது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர் தனது சாவுக்காக பயப்படுபவரும் அல்ல. கௌரவர்களுக்காக போர் செய்து தோற்றுப் போனதற்காகவோ, அவர்களின் மரணத்திற்காகவோ கலங்குபவரும் அல்ல! அப்படியானால், எதற்காக அழுகிறார் என்ற சந்தேகத்துடன் கிருஷ்ணர் அவரை அணுகினார். கௌரவர்களும், பாண்டவர்களும், திரௌபதையும் உடன் நின்றனர்.

மகாத்மாவே! ஏன் அழுகிறீர்கள்! ஞானியான தங்கள் கண்ணில் நீர் வழிகிறதென்றால், அதற்கு அர்த்தமில்லாமல் இருக்காதே! என்றார் கிருஷ்ணர்.

கிருஷ்ணா! அறியாதவன் போல் பேசுகிறாயே! எவ்வளவோ இழப்புகள்! பாண்டவர்களுக்காக கடவுளின் அவதாரமாக நீயும் இருக்கிறாய். ஆனாலும், அவர்களின் கஷ்டம் தீரவில்லை, பிரச்சினைக்கு முடிவும் கிடைக்கவில்லை. அதை நினைத்து அழுகிறேன், என்றார்.

கண்ணன் பதிலேதும் சொல்லாமல் சிரித்தார்.

அந்தச் சிரிப்பின் அர்த்தம் என்ன தெரியுமா?

சூதாட்டம் தவறு என்று தெரிந்தும் தர்மர் சூதாடினார். அதிலும், மனைவியை பந்தயப் பொருளாக வைத்து இழந்தார். இந்த கொடிய செயலுக்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டாமா? நாம் செய்யும் தவறை முழுமையாக உணரும் வரை, இறைவனின் தண்டனை தொடரும். அதை அனுபவிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

# பழமொழிகள்

01. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.
02. ஐங்காயம் இட்டு அரைத்துக் கரைத்தாலும் தன் நாற்றம் போகா தாம் பேய்ச்சுரைக்காய்க்கு.
03. ஐயமான காரியத்தைச் செய்தல் ஆகாது.
04. ஐயர் வருகிற வரை அமாவாசை நிற்குமா?
05. ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்.
06. ஒரு காசு பேணின் இரு காசு தேறும்
07. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை
08. ஒரு கை (அல்லது வெறுங்கை) முழம் போடுமா?
09. ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?
10. ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை


# உங்களுக்குத் தெரியுமா?

ஒரு அகன்ற பாத்திரத்தை எடுத்து நடுவில் ஒரு நாணயத்தை வைக்கவும். இப்போது பாத்திரத்தின் விளிம்பில் இருந்து நாண[illegible] [illegible]ப் பார்க்கவும். நாணயம் தெரியும். இப் [illegible]ற்று பின்னால் நகர்ந்து பார்த்தால் நாண[illegible] [illegible]யாது.

நீங்கள் அப்படியே [illegible]ங்கள். உங்கள் நண்பரிடம் பாத்திரத்தில் [illegible]துவாக, தண்ணீரை ஊற்றச் சொல்லுங்கள். நாணயம் மீண்டும் உங்களுக்கு தெரியும். இதற்குக் காரணம் என்ன?

ஒளி ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்கு ஊடுருவி செல்லும். அதாவது ஒளி காற்றிலிருந்து தண்ணீருக்கும் தண்ணீரிலிருந்து காற்றிற்கும் ஊடுருவி செல்லும். இந்த ஒளி அலைகள் நா[illegible]யத்தில் பட்டு வளைந்து தண்ணீர் வழியாக வெளியே வருகிறது. இந்த ஒளியை நீண்ட தூரம் பயணிக்க விடாமல், பாத்திரத்தின் விளிம்பு தடை செய்கிறது. எனவே, நாணயம் உங்களுக்குத் தெரிகிறது.

படத்தில் 5 அணில்கள் உள்ளன. ஒன்று மற்றைய 4 உருவங்களிலிருந்தும் வேறுபடுகின்றது. கண்டறிக.






# சிறுவர் கடர்

## பென்குயின்

பென்குயின்கள் அண்டார்டிக பகுதியில் அதிகம் வாழ்கின்றன. அங்கு பெப்ரவரி முதல் ஒக்ரோபர் வரை குளிர்காலமாக இருக்கும். அப்போது இவை கடலில் வாழும். வசந்த காலம் தொடங்குவதற்கு முன்பே, ஒக்ரோபரில் கடலை விட்டு, வெளியே வந்து அதனுடைய வசிப்பிடத்திற்காக நீண்ட பயணம் செய்யும்.

சாதாரணமாக பென்குயின்கள் 100.கி.மீ., வரை பனிக்கடலில் நடந்து அண்டார்டிக் கரையோரம் பாறைகள் இருக்கும் இடத்திற்கு செல்லும். ஆண் பென்குயின்கள் நேராக, அவை முன்னர் கட்டிய இருப்பிடத்திற்கு சரியாகச் சென்றுவிடும்.

முட்டையிடுவதற்கு முன், பெண் மற்றும் ஆண் பென்குயின் இணைந்து தான் கூடு கட்டுகின்றன.

ஜோடிகளில் ஒன்று கற்களை தன் அலகினால் கொண்டு வரும். மற்றொன்று அழகாக கூடு கட்டும். நவம்பர் மாத நடுவில் பெண் பென்குயின் நீலம் கலந்த வெள்ளை நிறத்தில் இரண்டு முட்டைகளை இடும்.

ஆண், பெண் இரண்டுமே முட்டையை பாது காத்து குஞ்சு பொரிக்கும்.

குஞ்சுகள் வெளிவந்த நான்கு வாரங்கள் வரை அவைகளுக்கு தீன் ஊட்டும். அதன்பிறகு குஞ்சுகள் கடலை நோக்கி செல்ல ஆரம்பிக்கும்.


## வகுப்பறையில்....

ஆசிரியர்: மணி அடிக்குது. மிச்சத்தை அடுத்த வகுப்பில பார்ப்பம்

மாணவன்: அது சேர் என்ர கைபேசி அடிக்குது சேர்...



**படத்தில் 12 பொருள்கள் மறைந்துள்ளன. அவற்றை இனம்காண்க.**




**முயற்சிசெய்யுங்கள்**



இக்கரையிலுள்ள உள்ள பாம்பு மறுபுறத்தில் உள்ள தவளையை பிடிக்க முயல்கின்றது. வழிகாட்டுங்கள்.

உரு 1 இன் விடைகள்:
01. பத்தரிகை
02. தீக்குச்சி
03. கங்கர்
04. புத்தகம்
05. ஸ்கூட்றைவர்
06. வாள்
07. மொபைல்
08. வாழைப்பழம்
09. மரம்
10. குடை
11. முகில்
12. வாத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் எண்ணங்களே மனத் திரைப்படங்கள்



நீங்கள் எண்ணும் பொழுது ஒரு பொருளைக் கற்பனை செய்கிறீர்கள்.

இது ஆரம்ப மனோதத்துவப் பாடமில்லை. உங்கள் வாழ்வைக் கட்டுப்படுத்தி வருங்காலத்தைத் தீர்மானிக்கும் 'வெற்றி முறைகள்' மூலம் அறிந்து கொள்ளும் ஆரம்ப நிலை.

ஆகவே, அதிக நம்பிக்கையோடு தொடங் குங்கள். பெரிய விருப்பங்கள் உண்மையிலேயே நடந்து விடும்.

மாளிகை என்று எண்ணும் போது மாவன்னா - ளினா - கையன்னா என்று மா-ளி-கை எழுத்துக்களை நீங்கள் நினைப்பதில்லை. மாறாக ஒரு வீட்டை நினைக்கிறீர்கள். (மனத்தில் காட்சி காண்கிறீர்கள்) அது உங்களுடையதாகவோ, உங்களுக்குத் தெரிந்ததாகவோ அல்லது நீங்கள் வாங்கக் கனவு காணும் வீடாகவோ இருக்கலாம். அல்லது ஒரு வீடு உங்கள் மனக் கண் முன் வந்து நிற்கும்.

வீடு என்று நினைத்தாலும் வீ என்ற எழுத்தும் டு என்ற எழுத்தும் உங்களுக்குத் தோன்றும். எழுத்துக்கள் மனக் கண் முன் எழுந்து நிற்கும்.

உங்களுக்குப் பிடிக்காத ஒன்றை எடுத்துக் கொள்வோம். அந்த சமயத்தில் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் தீர்மானம் செய்வதைக் காட்சியாகக் காண்பீர்கள்.

இந்த விதமான உதாரணங்களை நிறையச் சொல்லலாம். ஆனால் உங்களுடைய விருப்பு வெறுப்புக்களை மனத்திரையில் காண்பதைப் பற்றி முடிவு செய்தால் பயன் உள்ளதாக இருக்கும்.

இப்படிச் செய்யும் போது உங்கள் உள் மனம்தான் மனத்திரை என்று புரிந்து கொள்ளுங்கள்.

மனத்திரையில் நீங்கள் தீர்மானிக்கத் திரும்பத் திரும்ப நினைப்பதெல்லாம் காட்சியாக மாறும். இவற்றை உள் மனம் நிலை நிறுத்திக் கொள்ளும்.

இது வாழ்வுக்கு வழிகாட்டி, மனக்காட்சிகளை நடைமுறையில் நடத்திக் காட்டும்.

'நினைப்பதைப் போலவே மனிதன் இருக்கிறான்' என்ற வையின் கருத்து - ஆன்மீக உண்மை. மனோதத்துவ மெய்ப்பொருள், இயல்பான நடைமுறை.

சந்தேகமில்லாமல் நினைத்தது போலவே நீங்கள் மாறுகிறீர்கள். அதாவது மனக்காட்சி போலவே மாறுகிறீர்கள்.

உங்கள் எண்ணங்களே மனக்காட்சிகள்.

உங்கள் உள் மனத்தில் காட்சிகளைத் தவிர மற்றவற்றையும் ஒழுங்குபடுத்த வேண்டும்.

உங்களுக்குத் தேவையானதை நீங்கள் மனத் திரைப்படமாகத் தொடர்ந்து காண வேண்டும். இல்லாவிட்டால் நோக்கம் தவறி விடும்.

உங்கள் தேவையை மனக்காட்சி செய்யாவிட்டால் உங்களுக்கு அது கிடைக்காது. வரைபடம் இல்லாமல் வீடு கட்ட முடியாது. போக வேண்டிய ஊருக்கு வழி தெரியாவிட்டால் செல்ல முடியாது. உங்களுக்கு என்ன தேவை என்று தெரியாவிட்டால் எதை அடையப் போகிறீர்கள்?

உங்கள் வாழ்வின் இலட்சியத்தைப் பற்றிக் கருதாவிட்டால் வாழ்க்கை முழுவதும் திசை தெரியாமல் அலைந்து கொண்டிருப்பீர்கள். அது எங்கே கொண்டு போய் விடும்?

ஆகவே, முதலில் என்ன செய்ய வேண்டும்?

உங்களது வாழ்வை மனக் காட்சிகள் மூலம் நடத்திச் செல்ல வேண்டும்.

**உங்கள் நெஞ்சம் மனத் திரைப்படம்: அதில் நீங்கள் 'சுப்பர் ஸ்டார்!'**

ஓர் எண்ணம் இன்னொரு கருத்தாக உருவாகிறது.

ஒரு யோசனை அதனோடு தொடர்புடைய இன்னொரு கருத்துக்கு இட்டுச் செல்கிறது.

முன்பே சொன்னது போல் உங்கள் எண்ணங்களே மனக் காட்சிகள்.

மனக் காட்சிகள் தொடர்ந்து கோர்வையாக நிகழும் போது மனத் திரைப்படமாக மாறுகிறது.

இந்தத் திரைப்படக் காட்சிகளைத் தொடர்ந்து தீர்மானமாய் ஆழ்ந்து சிந்தனை செய்யும் போது உள் மனம் கிளர்ந்து எழுகிறது. உங்கள் மனக் காட்சிகள் வாழ்வில் நடக்க ஆரம்பிக்கின்றன.

நம்து எண்ணங்கள் (மனக் காட்சிகள்) போலவே வாழ்க்கை அமைகிறது என்றார் அறிஞர் மார்க்கஸ் அரேலியஸ்.

'மக்கள் தங்களைப் பற்றிய கருத்துகளை மனக் காட்சி மூலம் கண்டதை - நடைமுறையாக்குகிறார்கள்' என்று மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள்.

இதையே வரலாற்று நிகழ்ச்சிகளும் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் நிரூபிக்கின்றன. இது சீர்த்தன்மை விதி.

ஒரு கருத்தையே காட்சியில் காணாமல் தொடர் காட்சிகளைத் திரைப்படம் போலக் கற்பனை செய்யுங்கள்.

புகைப்படம் போன்ற நிலையான காட்சியைக் கருதாமல் திரைப்படத்தைக் கண்டு களியுங்கள். உங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தை நிறைவேற்றும் அந்தப் படத்தின் சுப்பர் ஸ்டார் நீங்கள் தான்.

உங்கள் திரைப்படத்தில் எப்படிப்பட்ட சூப்பர் ஸ்டாராக நீங்கள் இருக்க வேண்டும் தெரியுமா?

உங்களையே கோழையாக, தாழ்வாக, சோர்வாகத் திரையில் காண்பீர்களா? அல்லது வெற்றிகரமான சுப்பர் ஸ்டாராக விளங்குவீர்களா?

நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள் சொல்லிக் கொடுத்த வழியில் நீங்கள் விருப்பத்தை அடையும் வகையில் நினைத்துப் பார்ப்பீர்கள், இல்லையா?

உங்கள் மனத் திரைப்படத்தை நீங்கள் இயக்குகிறீர்கள். உங்கள் உள்மனம் திரையாகிறது. சுப்பர் ஸ்டாராக நீங்கள் ஜொலிக்கிறீர்கள். உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறீர்கள்.

உங்கள் மனத்தில் என்ன நினைக்கிறீர்களோ அது போலவே வாழ்க்கை அமையும் என்பது சீர்த்தன்மை விதியாகும்.

தோல்விகளைப் பற்றியே உங்கள் கருத்துக்கள் இருந்தால் அதையே திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டிருப்பீர்கள். உங்கள் சுப்பர் ஸ்டார் தோல்வியால் துவண்டு விடுவார்.

அப்போது வாழ்க்கையிலும் நீங்கள் தோல்விகளையே சந்திப்பீர்கள்.

ஆனால், வெற்றியைப் பற்றியே உங்கள் மனத் திரைப்படம் அசை போடுமானால் சுப்பர் ஸ்டாராக நீங்கள் அதில் நடித்து வெற்றி வாகை சூடுவீர்கள்.

அப்போது வாழ்விலும் வெற்றி வசந்தம் வேறு எப்படி இருக்க முடியும்?

உங்களை எப்படிக் கருதுகிறீர்களோ அப்படியே மாறுகிறீர்கள் என்பதையே சீர்தன்மை விதி நிரூபிக்கிறது.

மனக்காட்சியில் என்ன விதை தூவுகிறீர்களோ அதுவே வளர்ந்து விளைச்சலைக் கொடுத்து வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது.

விதை விதைத்து விட்டு தினை அறுவடை செய்ய முடியுமா? அதுபோல-

ஏழ்மையை நினைத்தால் ஏழை ஆவீர்கள்.

பணத்தை நினைத்தால் செல்வந்தராவீர்கள்.

வெற்றியை எண்ணினால் ஜெயமடைவீர்கள்.

நல்ல எண்ணங்களைக் கருதினால் நல்ல நண்பர்களைப் பெறுவீர்கள்.

அன்பு செலுத்தினால் நேசிக்கப்படுவீர்கள்.

அது அப்படித்தான். சீர்த்தன்மை விதி நினைப்பதைப் போலவே மனிதன் மாறுகிறான்.

**மூன்று மனங்கள் மனத் திரைப்படத்தை எவ்வாறு நடைமுறையாக்குகின்றன?**

மனோ சக்தி மூன்று நிலைகளில் இயங்குகிறது. இருந்தாலும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய அறிவியல் அவை. ஒரே மனத்தின் மூன்று பகுதிகள்.


1. அறிவு சார்ந்த பகுதி. இது மூளை. இதை அறுவைச் சிகிச்சை மூலம் சோதிக்க முடியும். மனோதத்துவப் பரிசோதனை செய்ய முடியும். பிரக்ஞை உள்ள இந்தப் பகுதி மூலம் சிந்தனை செய்கிறீர்கள்.

இந்த அறிவுப் பகுதிதான் உள்மனத் திரையில் காட்சிகளை உண்டு பண்ணும்.

உங்கள் மனக் காட்சிகளை நீங்களே உண்டு பண்ணி நீங்களே இயக்க முடியும்.

2. உள் மனம். அறிவு சார்ந்த பகுதிக்குக் கட்டுப்படாமல் இயங்குவது. ஆனால் நினைக்கும் மனமான அறிவுப் பகுதியால் காட்சிகள் காணவும் உள் மனத்தை ஓரளவு ஒழுங்குபடுத்தவும் முடியும்.

உங்கள் உள் மனம் செய்யும் காரியங்கள் எல்லாவற்றையும் இங்கே விவரிக்க முடியாது.



சிலவற்றை மட்டும் பார்க்கலாம்.

நீங்கள் உயிர் வாழத் தேவையான இருதயத் துடிப்பு, சுவாசம், ஜீரணம் போன்ற எல்லாவற்றையும் உங்கள் உள் மனம் கட்டுக்குள் வைத்திருக்கிறது.

அறிவார்ந்த மனத்தால் "ஏ, இதயமே! நீ துடிக்கட்டும்.. ஏ, நுரையீரலே! நீ காற்றை இழுத்து விடு.. ஏ, வயிறே! நீ நன்றாக ஜீரணம் செய்." என்று கட்டளை இட ஆரம்பித்தால் ஒரு நிமிட நேரத்தில் நீங்கள் இறந்துபோய் விடக் கூடும். பல்லாயிரம் கோடி நரம்பு மண்டலச் சிக்கல் செய்யும் வேலையைக் கட்டுப்படுத்த அறிவுப் பகுதியில் முடியவே முடியாது.

ஆகவே தான் உள் மனம் என்ற உன்னதமான சக்தியை இயற்கை நமக்கு அளித்துள்ளது. அது அற்பமான மனிதனுக்கும் அளவிட முடியாத ஆனந்த நிலைக்கும் உள்ள ஓர் அற்புதமான தொடர்பு. எல்லையில்லா அறிவுக்கும் சர்வ வல்லமை பொருந்திய சக்திக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள பாலம். இதை உணர்ந்து மனிதன் செயல்பட வேண்டும்.

எந்தத் தேவைக்கும் எப்போதும் தேவைப்படும் சக்திக்கும் எல்லாத் தொடர்புக்கும் உள் மனம் அவசியம்.

உங்கள் அறிவுப் பகுதி மறந்து போனாலும் உள் மனத்தில் தோன்றிய காட்சிகள் பதிவாகி ஞாபக சக்திப் பெட்டகமாக நிலை பெற்று இருக்கும். ஆகவே தான் நீங்கள் மறந்து போன குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளைக் கூட மனோ தத்துவ நிபுணர்கள் சோதனை மூலம் வெளியில் கொண்டு வர முடிகிறது.

உங்கள் உள் மனத்தில் பதிந்த கடந்த கால நிகழ்ச்சிகள் மற்றும் தற்போதைய காட்சிகள் உங்கள் வாழ்க்கை என்னும் வீட்டைப் பகுதி பகுதியாகக் கட்டி முடிக்கின்றன. அது உங்கள் மனக் காட்சியின் தீவிரத்தைப் பொறுத்தது.

உள் மனக் காட்சிகளின் தரம், தீவிரம் போன்ற சேர்க்கையின் முடிவுதான் உங்களின் இன்றைய நிலை. இதுவரை நீங்கள் நடந்து வந்த பாதை.

அது நல்லதோ கெட்டதோ உள் மனக் காட்சிதான் காரணம்.

- வெற்றியின் படிகள் நீளும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநலம் பாதிக்கப்படும் பெண்கள்



இன்றைய பெண்கள் பெரும்பாலும் மனஅழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் நமது வாழ்க்கை முறையும், உணவு முறையும் தான். மனநல பாதிப்பு என்பது நமது மூளையில் ஏற்படும் இராசாயன மாற்றமே, இது மட்டுமல்லாமல் குடும்ப பிரச்சினைகள், பரம்பரை, சூழ் நிலைகள் கூட இந்த மன நிலைப் பாதிப்பை ஏற்படுத்தும். இன்றைய வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகளவில் மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள்.

குறிப்பாகச் சொல்லப்போனால் IT நிறுவனத்தில் பணிபுரியும் பெண்கள் பலர் இந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதற்குக் காரணம் சரியான தூக்கமின்மை, உணவு பழக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், இயந்திர வாழ்க்கை, அடுத்தவர்களிடம் உணர்ச்சிகளை பகிர்ந்து கொள்ள முடியாத நிலைமை, நேரமின்மை இரவு நேரங்களில் வேலை பார்த்தல். ஆயிரக்கணக்கான உடல் நல பாதிப்புகள் போலவே நூற்றுக்கணக்கான மன நோய்களும் இருக்கின்றன.

குறிப்பாக மனச்சிதைவு (schizodhernis), மனஎழுச்சி நோய் (Mania), மனசோர்வு (Depression), திரும்பத் திரும்ப செய்தல் (obession) அதிகப்படியான பயம் (Phobia). இரவில் தூக்கமின்மை, கணவன் மனைவி இருவருக்குள் ஏற்படும் சந்தேகங்கள், காதில் ஏதோ குரல் கேட்பது போன்ற உணர்வு, தனிமை யில் பேசுதல், ஒரே சிந்தனையில் அமர்ந்து இருத்தல் அதிகப்படியாக அடுத்தவர்களின் மீது வெறுப்படைதல், அதிகப்படியான கோபம், அதிகமாகக் கெட்ட வார்த்தைகளை உபயோகப்படுத்துதல் இவையும் மனநோயின் பாதிப்புகளே.

இவை மட்டுமல்ல வேலைகளில் கவனக்குறைவு, தினசரி அன்றாட வேலைகளை கூடச் சரியாகச் செய்யாமல் இருத்தல். நம்பிக்கையற்ற தன்மை, உதவியற்ற தன்மை, இவைகளும் ஒருவிதமான பாதிப்புகளே.

கைகளில் ஏதோ இருப்பது போல் நினைத்துக் கொண்டு அடிக்கடி சுத்தம் செய்தல், அடுப்பை அணைத்து விட்டோமா? பூட்டு பூட்டி இருக்கிறதா போன்ற செயல்களைத் தொடர்ந்து பல முறை சரிபார்த்துக் கொண்டு இருத்தல், வீணாக குளியறையில் நின்று நேரத்தை செலவழித்தல் இவைகளும் மனநோய்களின் அறிகுறிகளே.

பள்ளிகளில் படிக்கும் பெண் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்லும் பெண்கள் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இதனால் அவர்களின் மனநிலை பாதிப்படைகின்றது.

இந்த நவீன காலத்தில் படித்தவர்கள் கூட மனநல மருத்துவர்களிடம் செல்ல பயப்படுகிறார்கள். ஆனால், இந்த நோய்க்கும் மனநல மருத்துவத்தில் தீர்வு உண்டு. தகுந்த மருந்தினை உட்கொள்ளுதல் மூலம் தீர்வு காணமுடியும். ஒரு சிலர் மருத்துவரிடம் செல்லாமல், இது செய்வினை காரணமாக இருக்கலாம் என்று கோயில், குளங்களைச் சுற்றி வருகின்றனர். இதுமட்டுமல்ல பேய், பிசாசு பிடித்து விட்டது என்று வேப்பிலை அடிப்பது, காலில் சூடு வைப்பது, மந்திர வாதியை வைத்து பேய் ஓட்டுவது, சாட்டையால் அடிப்பது போன்ற தவறான மூட நம்பிக்கையை செய்து வருகின்றனர். இதுமட்டுமல்ல திருமணம் செய்து வைத் தால் சரியாகி விடும் என்பதெல்லாம் கூட தவறான அணுகு முறையாகும்.

சில பெண்கள் தங்கள் உடல்நிலையில் அடிக்கடி பிரச்சினை ஏற்படுவதாகக் கூறுவார்கள். உதாரணமாக அடிக்கடி தலைவலி, நெஞ்சுவலி, மயக்கம் வருதல், நெஞ்சு எரிச்சல், கண் சரியாகத் தெரியவில்லை எனப்பல மருத்துவர்களை அணுகி பல சிகிச்சை முறையை கையாளுகிறார்கள் அதுவும் ஒருவிதமான மன நிலை பாதிப்பே. அதுமட்டுமில்லாமல் சில பெண்கள் காதல் தோல்வியால் தற்கொலை முயற்சி செய்வது (Suicide), கணவன் மனைவி இடையே அடிக்கடி பிரச்சினை ஏற்படுதல், கடன் தொல்லை, தனிமை இது போன்று சூழ்நிலைகளால் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். அதுவும் ஒருவிதமான மனநலப் பாதிப்பின் வெளிப்பாடுகளே.

சில வயதான பெண்கள் (Dementia) ஞாபக மறதியால் பாதிக்கப்படுகிறார்கள். நேரம், நாள், இடம் தெரியாமல் பொருட்களை இடம் மாற்றி வைத்தல், 65 வயதிற்கு மேல் 5% பெண்களும், 80 வயதிற்கு மேல் 20% பெண்களும் இதனால் பாதிப்படைகின்றார்கள். மனநல மருத்துவத்தின் மூலம் தகுந்த சிகிச்சை எடுத்துக் கொண்டு நலமாக வாழ முடியும்.

தங்கள் பணிகளையும் சரியாகச் செய்ய முடியும். இன்றும் பல பெண்கள் ஆரம்பத்திலேயே தகுந்த சிகிச்சை எடுத்துக் கொண்டு தங்கள் பணிகளைச் சரிவர செய்து வருகின்றனர். மூளை வளர்ச்சி குறைந்த பெண்களும் சமுதாயத்தில் வாழ வழிகள் உள்ளன. அவர்களுக்கு தகுந்த பயிற்சியினைக் கொடுப்பதன் மூலம் அவர்களே அவர்களின் (Independence) வேலைகளை செய்து கொள்ள முடியும்.


மனநல மருத்துவம் என்பது வெறும் மாத்திரையை மட்டும் கொடுத்து தூங்க வைப்பது அல்ல. மனநல வாழ்வில் மறுவாழ்வும் உண்டு மருந்து மட்டும் இல்லாமல் தகுந்த பயிற்சி பெற்ற செயல்முறை மருத்துவர்கள், சமூக நல பணியாளர்கள், மனநல நிபுணர்கள் தங்கள் பயிற்சிகளை அளித்து சமுதாயத்தில் வாழ வழி வகுக்கின்றனர். உதாரணமாக தொழிற்கல்வி, ஒருங்கிணைந்த சிகிச்சை முறை, கணினிப் பயிற்சி, விளையாட்டு முறை, தன்முனைப்புப் பயிற்சி, உணவு பழக்க வழக்கமுறை, அன்றாட பழக்கவழக்க முறைகள் போன்றவைகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. குடும்ப ஆலோசனைகள் மூலமாகவும், தனி ஆலோசனை மூலமாகவும், சமூக பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்தி வாழ வழி வகுக்கப்படுகிறது.

# புற்றுநோய்க்கு மருந்தாகிறது எலுமிச்சை

உலகம் முழுவதும் புற்றுநோய்க்குப் பலியாவோர் எண்ணிக்கை கொஞ்ச நஞ்சமல்ல. இந்தக் கொடிய வியாதியை முற்றிலும் குணப்படுத்தும் மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. தற்போதுள்ள மருத்துவ முறைகளில் ஆரம்பக் கட்டத்தில் நோயைக் கண்டுபிடித்துவிட்டால் மட்டுமே குணப்படுத்த முடியும். மற்றபடி நோய் பாதிப்பைத் தடுத்து வாழ்நாளை அதிகரிக்க மட்டுமேமுடியும் என்ற நிலை உள்ளது.

உலக மருத்துவ விஞ்ஞானிகள் புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

அமெரிக்காவின் பால்டிமோரில் செயல்பட்டு வரும் ஒரு சுகாதார அமைப்புத் தான் இந்த பெருமைக்குரிய கண்டுபிடிப்புக்குச் சொந்தக்காரர்கள். தற்போது இந்த வியாதிக்கு உள்ள சிகிச்சைகளில் முக்கியமானது கீமோ தெரபி.



இந்த கீமோ தெரப்பியின் பக்க விளைவுகளையும் தாங்க முடியாத வேதனைகளையும் சொல்லவேண்டியதில்லை. இதற்கொரு மாற்றமாக வந்துள்ளதுதான் எலுமிச்சை.

உடலில் நல்ல செல்களுக்கு எந்த விதமான ஆபத்தையும் ஏற்படுத்தாமல், ஆபத்தான செல் கள் மற்றும் புற்றுநோயாக மாறிவிடக் கூடிய கட்டிகளை மட்டுமே அழிக்கும் அபரிமிதமான ஆற்றல் பெற்றது எலுமிச்சை என்கிறது இந்த ஆராய்ச்சி.

கீமோ தெரப்பியைவிட 10 ஆயிரம் மடங்கு ஆற்றல் கொண்டது இந்த எலுமிச்சை என்பது விஞ்ஞானிகள் கண்டுபிடித் துள்ள ஆச்சரியமான உண்மை.


ஆபத்தான பக்டீரியாக்கள், கிருமிகள் மற்றும் காளான்களையும் ஒரு கை பார்க்காமல் விடுவதில்லையாம் இந்த எலுமிச்சை.

இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவது, மனஅழுத்தங்களை கட்டுப்படுத்துவது, நரம்புக் கோளாறுகளைச் சரி செய்வது என்று எலுமிச்சையின் மகிமைகள் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

மார்பகம், ப்ராஸ்டேட், கல்லீரல் மற்றும் கணையம் என்று புற்றுநோய் எங்கிருந்தாலும் அவற்றை அழிக்கும் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியுமாம் எலுமிச்சையால். இத்தகைய சிறப்பு வாய்ந்த எலுமிச்சையின் மருத்துவ குணத்தைப் பயன்படுத்தி புற்றுநோயை அழிக்கும் மருந்துகளை உருவாக்கும் முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த அரிய கண்டுபிடிப்பு மருத்துவ ரீதியாக வெளிவந்தால் புற்றுநோய்க்கு சிக்கனமான, முற்றிலுமான தீர்வாக இருக்கும். எனவே, தற்போது இதற்கான மருந்துகளைத் தயார் செய்து கொள்ளை லாபம் ஈட்டி வரும் வர்த்தக நிறுவனங்களின் வயிற்றில் புளியை கரைத்து வருகிறது எலுமிச்சை.

# முளைதானியம்



மனிதன் பிறந்ததே சாப்பிடத் தான் என்பது போல. இன்றைய தேதிக்கு சைவத்திலும் அசைவத்திலும் விதவிதமான உணவுகள் உலகமெங்கும் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றில் பெரும்பாலும் ஆரோக்கியக்கேடே மண்டிக் கிடக்கிறது.

போதாதற்கு நித்தமும் ஒரு புத்தம் புது உணவைக் கண்டுபிடித்து ஓட்டல்காரர்கள் வாழ்கின்றனர்; மக்கள் நோகின்றனர். இயற்கை உணவே இனிய உணவு. ஒரு நாளைக்கு மூன்று வேளையும் முடியாவிட்டாலும், ஒரு வேளையாவது இந்த இயற்கை உணவை உட்கொண்டு வாருங்கள். அதன் பிறகு பாருங்கள் [illegible] ஆரோக்கியத்தை.

இயற்கை உணவு என்பது ஏதோ ஒன்று அல்ல, எல்லாம் நமக்குத் தெரிந்ததுதான். பச்சைப் பயறு, கொண்டைக்கடலை, வெந்தயம், எள்ளு, வேர்க்கடலை, சூரியகாந்தி விதை, வெள்ளரி விதை, கொள்ளு, கறுப்பு உளுந்து போன்ற தானியங்களை வீட்டிலேயே முளைக்கச் செய்து சாப்பிடுவதுதான் முளைதானிய உணவு எனப்படும் இயற்கை உணவாகும்.

இந்தத் தானியங்களை நன்றாகக் கழுவி, 8 மணி நேரம் ஊற வைத்து, பின் ஈரமான பருத்தி துணியில் சுற்றி வைத்து விட்டால், 8-10 மணிக்குள் தானியம் முளைவிட்டு இருக்கும். (இப்போது இந்த வேலையைச் செய்யும், ஸ்பிரவுட்ஸ் மேக்கர் என்ற பிளாஸ்டிக் டப்பாக்கள் விற்கப்படுகின்றன). இப்படி தயாரான இந்த தானியத்துடன் விருப்பம் போல தேங்காய், வெல்லம், தக்காளி, வெங்காயம், பீன்ஸ் ஆகியவைகளை சேர்த்தோ, சேர்க்காமலோ சாப்பிட வேண்டியதுதான்.

இந்த தானிய உணவானது ஆரோக்கியத்தையும், அளவற்ற சக்தியையும் அள்ளித் தரும் மலிவான, உன்னதமான உயிர் உணவு. இதன் பயனை உணர்ந்து கொண்டால், கட்டாயம் உங்கள் குடும்ப உணவாகவே மாறி விடும். இந்த முளை தானியத்தில் இருந்து முளைதானியக் கஞ்சி, சப்பாத்தி, தோசை, அடை போன்ற உணவுகளையும் தயாரித்து சாப்பிடலாம்.

இந்த உணவின் மூலம் புரதம், கால்சியம், சோடியம், இரும்புத்தாது, பொட்டாசியம், பொஸ்பரஸ் போன்றவைகள் கூடுதலாக கிடைப்பதுடன், விட்டமின் ஏ, பி1, பி2 போன்றவையும் அபரிமிதமாகக் கிடைக்கிறது. முளைவிட்ட பச்சைப்பயிறு சாப்பிட்டால், சர்க்கரை நோய் கட்டுப்பாட்டில் இருக்கும். முளைவிட்ட கோதுமை சாப்பிட்டால், புற்றுநோய் மட்டுப்படும். முளைவிட்ட எள்ளு சாப்பிட்டால், ஒல்லியானவர்களுக்கு உடல் போடும். கண்பார்வை மேம்படும். முளைவிட்ட கொண்டைக்கடலையை விளையாட்டு வீரர்கள் மற்றும் கடினமான உடல் உழைப்பாளிகள் அதிகம் சாப்பிடலாம். இதன் மூலம் தங்களது சக்தி குறையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

முளைவிட்ட கறுப்பு உளுந்து, தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கச் செய்யும். முளைவிட்ட கொள்ளு சாப்பிட்டால், உடல் பருமன் குறையும், மூட்டுவலி தீரும். இன்னும், இன்னும் இப்படி எத்தனையோ மருத்துவத்தை செய்யவல்லவைதான் முளைவிட்ட தானியங்கள். இப்படி நோய்களை தீர்ப்பது மட்டுமல்ல, எந்தவித நோய்களும் வராமல் தடுக்கும் சக்தியும் இந்த முளைவிட்ட தானியங்களுக்கு அதிகம் உண்டு. இருந்தும் இந்த முளைவிட்ட தானியம் மக்களிடம் பிரபலமடையாத தற்கு காரணம், வேகமான உலகில் நாம் இருப்பது தான். இதற்காக கொஞ்சம் மினக்கெட வேண்டும். ஆனால், அதற்கு யாரும் தயாராக இல்லை.

ஒரே வார்த்தைதான். நீங்கள் உங்கள் உடலின் நண்பன் என்றால் மினக்கெடலாம். இல்லை, எதிரி என்றால் விருப்பம் போல இருந்து கொள்ளுங்கள்.

உங்கள் வீடு விசேஷம் என்றால் வித்தியாசமாக இந்த இயற்கை உணவைப் பரிமாறலாம். எப்படியாவது வரும் தலைமுறை இந்த இயற்கை உணவைச் சாப்பிட்டு, ஆரோக்கியமான தலைமுறையாக இருக்க வேண்டும் என்பதுதான் எல்லோருடையது மான லட்சியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சச்சின் காங்கிரசில் சேர்கிறார்?

உலகின் முதலாம் இலக்க கிரிக்கட் வீரரான சச்சின் டெண்டுல்கருக்கு ராஜ்யசபா (மாநிலங்களவை) எம்.பி பதவி வழங்க இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. கடந்த வாரம் பரபரப்பான அரசியல் செய்தியாக இது உலகம் முழுவதும் உலாவியது. அரசியல் பின்னணி எதுவுமற்ற நடுத்தரக்குடும்பத்தினரான சச்சின் இன்று கோடீஸ்வரரானது கிரிக்கட் மூலம் மட்டுமே. அதே கிரிக்கட் வெற்றிகள் அவருக்கு புதியதொரு இனிங்ஸ்ஸை ஆட வழி சமைத்துள்ளது. இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையின் எம்.பியாக ஜனாதிபதி 15 பேரை சிபாரிசு செய்யமுடியும். கலை, இலக்கியம், திரையுலகம், தொழிற்துறை, சமூக சேவை முதலியவற்றில் நாட்டுக்கு சேவை செய்தவர்களை இவ்வாறு தெரிவு செய்யலாம் என அரசியலமைப்பு கூறுகிறது. அதன்படி தொழிற்துறை பெண் பிரமுகர் அனு ஆக்கா, ஹிந்தி நடிகை ரேகா, சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்ட பெயர்கள் இம்முறை சிபார்சு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கட்சிசார்பில்லாதவர்களை ராஜ்யசபா எம்.பிக்களாக தெரிவு செய்யும் வித்முறை இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் கிரிக்கட் வீரர் ஒருவர் இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும். தற்போதும் முன்னாள் கிரிக்கட் அணித்தலைவர் மொஹமட் அசாருதீன், முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நவ்ஜோத்சிங்சித்து ஆகியோர் முறையே காங்கிரஸ், பி.ஜே.பி.சார்பில் லோக்சபா எம்.பிக்களாக உள்ளனர். எனினும், இவர்கள் லோக்சபா தேர்தலில் கட்சிகள் சார்பில் போட்டியிட்டு தம் தொகுதிகளில் (அசாருதீன் உத்தரபிரதேசத்தின் மொராதாபாத்திலும் சித்து பஞ்சாபின் அமிர்தசரஸ் தொகுதியிலும்) வென்றவர்கள். சச்சின் டெண்டுல்கரோ தேர்தலில் போட்டியிடாமலே ராஜ்யசபாவின் எம்.பியாக நியமிக்கப்படவுள்ளார். இந்த எம்.பிக்கள் கட்சி சார்பற்ற நடுநிலை உறுப்பினர்களாகவே கருதப்படுவர். எனினும் நியமனம் பெற்று 6 மாதத்தினுள் தாம் விரும்பிய கட்சியில் சேர்ந்துவிடமுடியும். சச்சின் டெண்டுல்கரும் அவரது மனைவி டாக்டர் அஞ்சலி டெண்டுல்கரும் சென்றவாரம் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியும் டில்லியில் நேரடியாக சந்தித்துப் பேசி உள்ளனர். இந்திய கிரிக்கட் சபையின் முக்கிய நிர்வாகியும் மத்திய இணையமைச்சருமான ராஜீவ் சுக்லாவே இந்தச் சந்திப்பினை ஒழுங்கு செய்ததாகக் கூறப்படுகிறது.

தொடர்ந்து பல மாநிலத் தேர்தல்களில் தோல்வியைத் தழுவி வரும் காங்கிரஸ் கட்சி இன்னும் இரண்டு வருடங்களில் நடக்கவுள்ள லோக்சபா தேர்தலில் படுதோல்வியடையக்கூடும் என்று இப்போதே எதிர்வு கூறல்கள் பலமாக வெளிவரத் தொடங்கி உள்ளன. சென்ற வாரம் கூட மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரத்தின் மகன் அரசு சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் கையூட்டு பெற்றதாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து நாடாளுமன்றில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. சிதம்பரம் ராஜினாமா செய்யவேண்டுமென எதிர்க்கட்சிகள் பெரும் ஆவேசத்துடன் குரலெழுப்பி உள்ளன. ஏற்கனவே பல மத்திய அமைச்சர்கள் ஊழல் குற்றச் சாட்டில் பதவி விலகி உள்ளனர். அ.ராசா (தி.மு.க), தயாநிதி மாறன் போன்றோர் பதவி விலகியும், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சுரேஸ்கல்மாடி முதலிய மூத்த எம்.பிக்கள் சிறை சென்றும் உள்ளனர். இராணுவத்திற்கு தளபாடம் வாங்கியதில் ஊழல், பழைய போபர்ஸ் ஊழலில் புதிதாக குற்றச்சாட்டு, சிதம்பரம் மகன் மீது கையூட்டு வாங்கிய புகார் என இப்படி நாளாந்தம் மத்திய அரசுமீது இரண்டு மூன்று ஊழல் புகார்கள் புதிது புதிதாக எழுந்த வண்ணமே உள்ளன. இந்தப் போக்கில் போனால் எதிர்வரும் 2014 லோக்சபா தேர்தலில் தலைகுப்புற கவிழ நேரிடும் என்பது சோனியா மற்றும் ராகுல்காந்திக்கு தெளிவாகப் புரிந்துள்ளது. மாநில சட்டசபை தேர்தல்கள் இடைத் தேர்தல்களிலும் கட்சி அவ்வளவாக வெற்றியீட்ட முடியவில்லை. எனவே, எதையாவது உருப்படியாகச் செய்து கட்சியை உயிர்ப்பிக்கவேண்டிய தேவை காங்கிரஸ் தலைமைக்கு உள்ளது. இதற்கான வியூகத்தின் ஒரு பகுதியாகவே சச்சின் டெண்டுல்கரை கட்சியில் சேர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிரிக்கட் வீரர்கள் நடிகைகளுடன் சல்லாபிப்பது வழமையாகிவிட்ட நிலையில் பிரபல கிரிக்கட் வீரர்களில் சச்சின் மட்டுமே இவ்வாறான குற்றச்சாட்டு எதுவுமின்றி வாழ்ந்து காட்டிய பண்பாளர் என புகழப்படுகிறார். மைதானத்தில் எதிரணியினருடனோ உடை மாற்றும் அறையில் தனது அணியினருடனோ எந்த நேரடி பகிரங்க மோதலிலும் ஈடுபடாதவர் சச்சின் ஒருவர் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. முன்பு அணித் தலைவராக இருந்த அசாருதீன், பயிற்சியாளராக இருந்த அவுஸ்ரேலியர் கிரெக்சப்பல் முதலானோருடன் சச்சினுக்கு மனஸ்தாபம் இருந்தும் வெளிப்படையாக எதையுமே அவர் வாய் திறந்து கொட்டியதில்லை. பாலியல் அடக்கம், நாவடக்கம் என அடக்கத்தின் உருவமாகவே இருந்துள்ளார். ஏனைய வீரர்கள் பல சந்தர்ப்பங்களில் சர்ச்சைகளில் வீணாக மாட்டிக் கொண்டு பெயரைக் கெடுத்துக் கொண்ட சந்தர்ப்பங்கள் நிறையவே இருந்தன.

இவ்வளவு நல்ல பெயர் இருந்தும் அவரை பல முட்டாள் அரசியல்வாதிகள் தொடர்ந்து சீண்டி வந்துள்ளனர். இவர்களில் பிரதானமானவர் சிவசேனா தலைவர் பால் தாக்கரே ஆவார். சச்சின் பிறந்து வளர்ந்த மும்பை நகரினதும் அதை அடக்கிய மகாராஸ்டிர மாநிலத்தினதும் பிரதான எதிர்க் கட்சி பால் தாக்கரேயின் சிவசேனாவும் அதன் கூட்டணிக் கட்சியான பி.ஜே.பி.யும் ஆகும். இரண்டு வருடங்களுக்கு முன் ஒருநாள் கிரிக்கட்டின் முதல் இரட்டை சதத்தை அடித்தபோது "சச்சின் ஒன்றும் பெரிய பண்பாளரல்ல; தான் சார்ந்த மராட்டிய மாநிலத்தின் ஏனைய வீரர்கள் இந்திய அணியில் இடம்பெற அவர் உதவவில்லை" என ஒரு தேவையற்ற குற்றச்சாட்டை தாக்கரே கிளப்பினார். இந்திய அணிக்கு வீரர் தெரிவு தேசிய அளவில் வீரரின் திறமையை பொறுத்ததே; அணியிலுள்ள சிரேஷ்ட வீரர் என்ற வகையில் அல்லது அணித்தலைவர் என்ற கோதாவில் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த திறமையான வீரர்களை ஓரங்கட்டிவிட்டு சச்சின் தனது மராட்டிய மாநிலத்திலுள்ள திறமை குறைந்த வீரர்களை சிபார்சு செய்ய வேண்டுமென தாக்கரே நினைப்பது எவ்வகையில் நியாயமென பல நடுநிலைத் தரப்பினர் சச்சினுக்கு ஆதரவாக குரல் எழுப்பினர். உண்மையில் வினோத் காம்பிளி போன்ற மராட்டிய வீரர்கள் போட்டிகளில் தொடர்ந்து சோபிக்கத் தவறிய நிலையில் கூட சச்சின் தன் சொந்தச் செல்வாக்கில் அவர்களுக்கு அணியில் இடம்பிடித்துக்கொடுத்தே இருந்தார். பால் தாக்கரே போன்றோர் இலங்கையின் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, பேராசிரியர் நளின் டி சில்வா, குணதாச அமரசேகர போன்றோர் போல யதார்த்தத்தை உணராத ஒரு இன, மத வெறியர் ஆவார். மஹாராஷ்டிர (மராட்டிய) மாநிலத்தில் வாழும் ஏனைய மாநிலத்தவர் அம்மாநில மொழியான மராட்டியத்தில் புலமை பெறுவது கட்டாயம் என அவர் ஒரு முறை கூறி பலரதும் எதிர்ப்பை சம்பாதித்தார். இவர் இப்படி கூறினால் - மாநிலத்தின் பெரும்பான்மை மொழியை கற்க நிர்ப்பந்தித்தால் நாட்டின் பெரும்பான்மையினர் பேசும் ஹிந்தி மொழியை மராட்டியர் கற்றாகவேண்டுமே என தாக்கரேக்கு எதிர்ப்பு கிளம்பியது. இவ்வாறு உப்புச்சப்பற்ற சட்டவிரோதமான வாதங்களை விதண்டாவாதமாகப் பேசுபவர் தாக்கரே. இவருக்கு அந்த நேரத்தில் சச்சின் எந்தப் பதிலையும் கொடாமல் அதீத மௌனம் காத்தார். ஆனால் பொது மக்களும் ஊடகங்களும் இதுவிடயமாக சச்சினை ஆதரித்து தாக்கரேயை கண்டித்தனர். பிரண்டுபோன தாக்கரே தன் தவறை உணர்ந்து பின்பு சச்சினுக்கு 'பாரதரத்னா' விருது வழங்க வேண்டும் என சப்பைக்கட்டு கட்டியதும் நினைவிருக்கலாம். ஆனால் தாக்கரேயை பழிதீர்க்க சச்சினின் மனைவி அப்போதே முடிவெடுத்துவிட்டார். அவர் ஒரு சிறுவர் வைத்திய நிபுணர் என்பதுடன் பத்திரிகைகளில் எழுதுபவரும் ஆவார்.

இதற்கு முன்னரும் கூட தாக்கரேயின் பங்காளி கட்சியான பி.ஜே.பி.யின் பிரமோத்மகாஜன் சச்சினுக்கு வெளிநாட்டில் பரிசாகக் கிடைத்த காருக்கு வரிச்சலுகை மறுத்ததுடன் அதை பகிரங்கமாக்கி சச்சினுக்கு பெரும் அவமானமும் ஏற்படுத்தி இருந்ததும் கவனிக்கத்தக்கது. இந்த மனஸ்தாபங்களால் சச்சின் காங்கிரசில் சேர முடிவெடுத்திருக்கலாம் என இப்போது தெரியவந்துள்ளது. தாக்கரேயின் தப்புத்தாளங்களுக்குத் தக்க பதிலடி தர சச்சின் வழிகால் தேடியபோது ஆபத்பாந்தவனாக வந்ததே காங்கிரஸ் கட்சியாகும். இன்று ஓய்வு பெறும் நிலையிலுள்ள சச்சின் காங்கிரஸ் தந்த கௌரவத்தினை பயன்படுத்தி இதை சாதிக்க முயலக் கூடும். மேலும் மராட்டியம் என மார்தட்டும் தாக்கரேயின் வாயை அடைக்க ஒரிஜினல் மராட்டியரும் மும்பையிலேயே பிறந்து மும்பையின் பிரபலமான ஷிவாஜி பார்க்கில் கிரிக்கட் பயின்ற சச்சினை வெளி மாநிலத்தவர் எனத் திட்டவும் தாக்கரேக்கு இயலாது. மும்பை மாநகரம் ஏற்கனவே காங்கிரசின் கோட்டையாகும். அதனுடன் சச்சின் செல்வாக்கும் சேர்ந்தால் தாக்கரேயின் கதி அதோகதிதான். தடியைக் கொடுத்து அடியை வாங்குவது, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது என்பதே தான் தாக்கரேயின் அரசியல் என்பது மற்றொரு தடவை நிரூபணமானது. நடிகைகளுடன் சல்லாபித்தவர் எனத் திட்டவும் தாக்கரேயால் முடியாது. ராகுல் டிராவிட் - நடிகை ரவீனா டாண்டன் சௌரவ் கங்குலி - நடிகை நக்மா, டோனி - நடிகை அசின் என பிரபல வீரர்கள் சகலரும் நடிகைகளுடன் கிசுகிசுக்கப்பட்டாலும் சச்சினுடன் எந்த நடிகையின் பெயரும் ஒருபோதும் இணைத்து பேசப்படவில்லை. அப்பழுக்கற்ற நேர்மையின் சொந்தக்காரர் சச்சின் ஆவார். களத்தில் நடுவர் தவறாக ஆட்டமிழப்புத் தந்தாலும் முறைத்துப்பாராமல் அந்த நிமிடமே நடையைக்கட்டுபவர் சச்சின் போன்ற சிலரே. இந்தியாவில் கிரிக்கட் மதமாயின் அதன் கடவுள் சச்சினே தான்.

இதற்கிடையில் சச்சினை முன்பு வசைபாடிய அசாருதீன் இன்று காங்கிரஸ் எம்பியாக உள்ளார். இவர் எவ்வாறு சச்சினை வரவேற்பார் என்பது சுவாரஸ்யமான கேள்வி. ஆனால் சச்சின் போலன்றி அசாருதீன் ஆட்டநிர்ணய சர்ச்சையில் கூட சிக்கிய ஒருவராவார். சச்சினின் பண்பு, நேர்மை, ஒழுக்கம், பிரபல்யம், முகவசீகரம், உலக சாதனைகள் என சகலதும் இனி காங்கிரஸ் கட்சிக்குச் சொந்தமாகும் என்பது தாக்கரே உள்ளிட்ட எதிரணியின் அடிவயிற்றில் இடி போல இறங்கியுள்ளது. உலகின் அதிக டெஸ்ட் ஓட்டம், அதிக ஒருநாள் ஓட்டம், அதிக டெஸ்ட் சதம் மற்றும் அரைச்சதம், அதிக ஒருநாள் சதம், மற்றும் அரைச்சதம். ஒருநாள் போட்டிகளின் முதல் இரட்டைச்சதம், அதிக போட்டிகளில் விளையாடியது (டெஸ்ட், ஒருநாள்), பிராட்மனுடன் சமனாகக் கருதப்பட்டது என சச்சின் சாதனைகளை எழுத ஒரு புத்தகமே போதாது. இத்தகைய ஒருவரை மனம் நோகடித்த தாக்கரேக்கு அழிவு தொடங்கிவிட்டது என்பது மட்டும் உண்மையாகும்.

■ அஜித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அப்பா ஒரு பெண்...!

உண்மையில் மனித மனம் என்ன விடயத்தைச் சிந்திக்கிறது, என்னத்தை அவாவி நிற்கிறது என்பதெல்லாம் கண்டுபிடிக்க முடியாத மர்மமாகவே இருக்கிறது. ஏன் என்ற கேள்விக்கு மேற்குலக நாடுகளில் இருந்து பார்த்தால்தான் தெரியும். அவ்வளவு சிக்கல்.

நான் ஐரிவி தொலைக்காட்சியின் விவரண நிகழ்ச்சி ஒன்றை திடீரென்று பார்த்தேன். அதில் எனது தந்தை பெண்ணாகிறார் என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சி போட்டார்கள்.

நான் இலங்கையில் பிறந்ததாலோ என்னவோ அது என்னை பெரிதும் தாக்கி விட்டது. ஆனால், இங்கு எல்லா வெள்ளைக்காரரும் அதனை இலகுவாக எடுப்பார்களோ என்று யோசிக்கிறேன்.

அந்த ஆணுக்கு ஐம்பத்து மூன்று வயது. அவர் தன்னுடலிலுள்ள ஆண் உறுப்பை பெரியதொரு அறுவைச் சிகிச்சை மூலமாக மாற்றி பெண்ணுடலில் உள்ள உறுப்புகளை அறுவைச்சிகிச்சை மூலமாகக் கொண்டு வருகிறார்.

அவருக்கு மனைவியும் ஒரு பெண் பிள்ளையும் இருக்கிறார்கள். அந்த மனைவியும் பெண் பிள்ளையும் அப்பா பெண்ணாவதை வெறுக்கவில்லை விரும்புகிறார்கள்.

அந்த தந்தையின் தலைமைப்பாட்டில் நின்ற வண்ணம் தனது தந்தை பெண்ணாவதை எந்த மன சஞ்சலமும் இல்லாமல் ஏற்றுக்கொள்கிறாள் அந்த மகள்.

அப்படி இலங்கையில் பிறந்த ஒரு ஆள் யோசிக்கக் கூட முடியுமா?

ஆனால் தன்னில் கொஞ்சம் கொஞ்சமாக பெண் தன்மை மேலோங்கி வந்ததாகவும் அதனால் ஆணாக இருக்க விரும்பவில்லை என்றும் அவர் சொல்கிறார்.

அந்த அறுவைச் சிகிச்சை சாதாரணமானது அல்ல. அது பெரும் செலவில் செய்யப்படுகின்ற பல நிபுணர்கள் செய்கின்ற அறுவைச் சிகிச்சை. அதற்கு குடும்பம் முழு ஒத்துழைப்பை வழங்குகிறது.

ஆண் உடலில் பெண் மாற்றங்கள் நிகழும் பொழுது ஒரு ஆண் தன்னை பெண்ணாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார். அதற்கு பிறகு அவரால் ஒரு ஆணாக வாழ முடியாது. பெரும் மனச்சிக்கலுக்கு உள்ளாகிறார்.


இங்கு பிரிட்டனில் மாத்திரம் ஆறாயிரம் பேர் ஆண்களாக இருந்து தங்களை அறுவைச்சிகிச்சைக்குப் பிறகு பெண்களாக மாற்றிக்கொண்டவர்கள் இருக்கிறார்கள் என்று ஐரிவி தொலைக்காட்சி சொல்கிறது. இந்த வருடம் மாத்திரம் 150 பேர் அறுவைச் சிகிச்சை செய்யக் காத்திருக்கின்றனர். இதில் ஆண்கள்தான் தங்களை அறுவைச்சிகிச்சை செய்து பெண்களாக மாற்றிக்கொண்டு வாழ்கிறார்கள்.

'இயற்கை வெறுப்பு வெறுவன்' பிவ் தோம்ஸ் சொல்கிறார். ஒரு ஆண், தான் தவறான உடம்போடு வாழுகிறார் என்று நினைத்தால் அதில் இருந்து விடுபட வேண்டியதுதான். அதற்குள் கிடந்து ஏன் உழல வேண்டும்? இந்த பால்மாற்று அறுவைச் சிகிச்சை அதற்கு வழி வகுக்கும் என்று சொல்கிறார்.

தொடர்ந்து பெண் நினைவுகளோடு ஆண் உடம்பில் வாழுவது மன உளைச்சலை, மன வேதனையை ஏற்படுத்தும். அது மன நோயைக் கொண்டுவந்து விட்டு விடும் என்று உளவியல் மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

ஆண் உடலோடு ஒரு பெண்ணாக வாழ்வது கொடுமையானது. ஏனெனில் இது உணர்வு சம்பந்தப்பட்ட விடயம். நுண்ணிய மன உணர்வுகளை யாரோடு பகிர்ந்து கொள்வது? ஒரு பெண் மனநிலையில் இருந்து நான் பட்ட அவஸ்தைகளுக்கு தீர்வு கிடைத்து விட்டது என்கிறார் ஜேன். ஒரு வருடத்துக்கு முதல் பால்மாற்று சிகிச்சை செய்தவர் அவர். அவருக்கு மனைவி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். தாங்கள் மகிழ்ச்சியாக வாழ்வதாக மனைவி சொல்கிறார்.

ஆனால், கலியாணம் முடித்து இரண்டு பிள்ளைகள் பெற்ற பிறகு தான் ஆணல்ல பெண் என்று ஒரு தந்தை நினைக்கும் போது - அல்லது, உடல் மாற்றம் வரும் போதுதான் பல சமூகப் பிரச்சினைகள்



வருவதாக ஜேன் சொல்கிறார். சமூகத்தில் பல நண்பர்கள் தன்னை விட்டு போய் விட்டதாக சொல்கிறார் அவர்.

அவரின் 'ரீன் ஏஜ்' மகள் அவருக்கு தலையை வாரிவிட்டாலும் பிறந்த நாள் காட் கொடுக்கும் பொழுது அவரை தந்தை என்றுதான் காட்டில் எழுதுகிறாள். ஜேன் ஒரு பெண்ணாக இருந்தாலும் அவர் தனது தந்தைதான் என்று சொல்கிறாள் மகள்.

இங்கு பிரபல சட்டத்தரணியாக இருந்தவர் டேவிட் போர்ஜஸ். ஆனால் அவர் சோனியா என்ற பெயரில்தான் இங்கு பிரபலமானார். அவர் ஒரு ஆண். மூன்று பிள்ளைகள் அவருக்கு இருக்கின்றனர் ஆனால் அவர் தன்னை ஒரு ஆணாக அல்லாமல் பெண்ணாகவே நினைத்துக்கொண்டிருப்பார்.

அவர் அநேகமாக பெண்கள் அணியும் ஆடைகளையே அணிவார். அவரது மனைவி மட்டுமல்ல, ஏன் அவரிடம் வழக்கு விசயமாக போன தமிழர்கள் எல்லோரும் அவரை மிகவும் சிறந்த ஒரு மனிதர் என்றே சொல்வார் கள்.

அவர் எத்தனையோ தமிழர்களுக்காக வாதாடி அகதி அந்தஸ்த்தை எடுத்துக் கொடுத்திருக்கிறார். மனித உரிமைகள் தொடர்பான சிறந்த சட்டத்தரணி அவர். பின்னாளில் அவர் முழுமையாகத் தன்னை பெண்ணாகவே மாற்றிக்கொண்டவர். அவருக்கு தன்னுடைய பால்மாற்றம் ஒரு பிரச்சனையாகவே இருக்கவில்லை. தொடர்ந்தும் தன் வேலைகளை அவர் மிகவும் மும்முரமாகவே செய்து கொண்டிருந்தார்.

ஆனால், அவர் தன்னை ஒரு பெண்ணாக நினைத்திருக்கிறார். அவரது நடை உடை பாவனை ஒரு பெண்ணைப்போலத்தான் இருக்கும். அவ்வளவு அவரது பிள்ளைகள் ஏற்றுக்கொண்டுதான் வாழ்ந்தார்கள்.

2010 ஒக்டோபர் 25 ஆம் திகதி அவரை நிரா கனகசிங்கம் என்ற தமிழ் பெண்ணொருவர் சுரங்க ரயில் நிலையத்தில் வைத்து, ரயில் பாதையினுள் தள்ளி விழுத்த, அவர் இறந்து விட்டார். பின்னர் நீதிமன்றம் நிராவுக்குத் தண்டனை வழங்கியிருக்கிறது. ஆனால், அவரை நிரா ஏன் தள்ளி விழுத்திக் கொன்றிருக்கிறார் என்று இன்னும் வெளி உலகத்துக்குத் தெரியவில்லை. ஆனால், நிராவுக்கு மன நோய் இருந்ததாகவும் அதனால் சோனியாவை அவர் வேண்டுமென்றே கொல்லவில்லை என்றும் நிராவின் உறவினர்கள் சொல்கிறார்கள்.

இவ்வாறான உடல் மாற்றத்தின் மூலம் பாலின மாறுதல் திடீரென்றும் சிலருக்கு வருகிறது. அவர்கள் என்ன செய்வது என்ற பிரச்சினை வருகிறது. மேற்குலக நாடுகளில் இவ்வாறான பால்மாற்றம் ஏற்பட்டு விட்டால் தங்கள் ஆணுறுப்புகளை வெட்டி அகற்றி விட்டு பெண்ணுறுப்புகளை உருவாக்கி விடுவார்கள்.

இந்தியா போன்ற நாடுகளில் வறுமையில் இருக்கும் இவ்வாறான பால் மாறுகின்றவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இந்தியாவில் பால்மாற்று அறுவைச் சிகிச்சைகள் பாதுகாப்பில்லாமல் செய்யப்படுகின்றன. அதனால் பல அநியாய மரணங்களும் சம்பவிக்கின்றன.

பால்மாற்று அறுவைச்சிகிச்சை என்பது சமூகத்தில் குறிப்பாக, இந்திய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. காரணம் அதற்கான அறிவு போதாமை தான்.

சீனாவில் பால்மாற்று தொடர்பான விடயம் கிறிஸ்துவுக்கு முன் 8 ஆம் நூற்றாண்டுக்கும் முன்பு கூட இருந்ததாக கண்டறியப்பட்டிருக்கிறது. ஆனால், இது கட்டாய மாற்று நடவடிக்கை என்றே வரலாற்றாசிரியர்கள் சொல்கிறார்கள்.

இவர்கள் நபுஞ்சகர்கள் என்றழைக்கப்படுகிறார்கள். ஆண்பால் அழித்தல் அறுவைச்சிகிச்சை மூலம் ஆண்பால் உறுப்புகளை அகற்றியவர்களைத் தான் நபுஞ்சகர்கள் என்று சொல்கிறார்கள்.

தாய்மையடையக்கூடிய பெண்கள் இருக்கும் அரசனின் அரண்மனையில் வேறு எந்த ஆணுடைய விந்தும் விழுந்து, எந்தப் பெண்ணின் கருமுட்டையிலும் கலந்து துளிர்த்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவே நபுஞ்சகர்கள் உருவாக்கப்பட்டார்கள். இங்கு அரசனின் வாரிசுதாய்மை பேணப்பட்டது எனலாம்.

சீனாவில் மிங்க் முடியாட்சியில் மட்டும் 70,000 ஆண் குழந்தைகளுக்கு பால் அழிப்பை அறுவைச்சிகிச்சை மூலம் செய்திருக்கிறார்கள். இந்த அறுவை நிபுணர்கள் அறுவைச்சிகிச்சையை பரம்பரை பரம்பரையாக குடும்பத்தொழிலாகவே செய்து வந்திருக்கிறார்கள்.

நரம்புகளை விறைக்க வைக்கும் மூலிகைக் கஷாயங்கள் கொடுத்து உறுப்புகளை மிளகுக்கலந்த சுடுநீரால் கழுவுவார்களாம். ஆணுறுப்பை முழுக்க அறுத்தெறிவது ஒரு வகை, விதையை மட்டும் அகற்றுவது இன்னொரு வகை என்று இரண்டு வகையான அறுவைச்சிகிச்சை முறைகள் நடைமுறையில் இருந்திருக்கின்றன.

இந்த அறுவையின் போது அநேகமானவர்கள் மரணித்தும் போயிருக்கிறார்கள். இதெல்லாமே ஆண் தன் சொத்துடைமைக்கு வாரிசாக தன் இரத்த சொந்த வழி வாரிசு மட்டுமே இருந்தாக வேண்டும் என்ற எண்ணத்தின் உச்சக்கட்டம். அரண்மனையில் மற்ற வேலைகள் செய்ய ஆண்களும் வேண்டும் அதே நேரத்தில் எங்காவது அந்த இருட்டில் ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சத்தின் விளைவு தான் ஆண்பால் அழித்த நபுஞ்சர்களின் வரலாறு.

19 ஆம் நூற்றாண்டில் சீனத்தில் போய் வசித்த ஆங்கிலேயர் மூலம் தான் வெளியுலகுக்கு சீனாவின் இந்த வழக்கம் தெரியவந்தது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் தனி மனித சுதந்திரம் ஒவ்வொருவரையும் தனித்தனியாக மதிக்கிறது.

எங்கள் மகன் படிக்கும் பாடசாலையில் மூன்றாம் பாலின ரீச்சர் ஒருவர் இருக்கிறார். அவருக்கான முழு அங்கீகாரத்தையும் லண்டன் வழங்கியிருக்கிறது.

இந்தியா போன்ற நாடுகளில் அவர்கள் எப்பொழுதும் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் கேலிப்பொருளாகவும் பாலியல் பண்டமாகவும் மட்டுமே பார்க்கப்படுகிறார்கள். அது மாற்றப்பட வேண்டும். அவர்களுக்கான அங்கீகாரம் முழுமையாகக் கிடைக்க வேண்டும். அதற்கான போராட்டங்கள் சரியான திசையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஐரிவி டொக்கியுமன்றி சொல்லுகின்ற விடயங்கள் ஆயிரம். சும்மா வாழ்ந்தோம் இறந்தோம் என்பதற்கு அப்பால் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன இந்த உலகத்தில்....!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்



## குடிபுகுதலுக்குப் போய்.....

சாப்பாட்டுக் கதை சொன்னனான். வீட்டில சாப்பாட்டு விடயத்தில இப்ப நொந்தக் கவனம் கண்டியளோ! பசியோண்ட இருக்கேக்கை "சாப்பாடு போட்டாச்சு" என்று சத்தம் கேக்கும். உள்ளுக்குப் போனால் அப்பதான் அரிசி புடைக்கிற அல்லது தேங்காய் துருவுற வேலை நடக்கும்.

'சாப்பாடு-போட்டாச்சு' என்ட சத்தம் ஒரு 'இலூசன்' Illusion - மாயை.... இந்தக் கிழமை போற இடத்தில நடக்கிற சம்பவங்களைச் சொல்லுறன் பாருங்கோ...

நாகமணியற்றை மூத்த பொடியன்ரை குடிபூரல் வீடு. பொடியன் கால்நடை வைத்தியர். 'வெற்றினரி டொக்டர்' யூனிவசிற்றியால வெளிக்கிட்டு ரெண்டு வருசத்துக்குள் வீடுகட்டிப் போட்டான். நல்ல பிரயாசையான பொடியன் கண்டியளோ....

ரெண்டாவது பொடியனும் டாக்குத்தர்தான்...... இப்பதான் படிப்பு முடிஞ்சு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில 'இன்ரேன்' படிப்பு-

மூன்டாவது பொடியனும் டொக்டர்தான்.... கலைப்பிரிவில ஏதோ பண்பாட்டு டொக்டராம். யாழ்ப்பாணத்துப் பண்பாடுகளை ஆராய்ச்சி செய்து டொக்டர் பட்டம் பெற்றவை.

நாகமணியின்ர வீடு குடிபுகுதல் கொண்டாட்டத்திற்கு இந்த பண்பாட்டு டொக்டர்தான் வரவேற்பாளர் ஓடி ஓடி எல்லாரையும் வரவேற்றுக் கொண்டு நின்றுது தம்பி...

எங்கட நெருங்கின உறவுதான் நாகமணியர். குடிபுகுதலுக்கு - புதுமனைப்புகு விழா வைபவத்திற்கு - அருக்கை முழுப்பேருக்கும் சொல்லேல்லை. தெரிஞ்ச - நாலைஞ்சு இரத்த உறவுக்காரருக்குத் தான் சொன்னவை. பலபேரும் வாற இடமென்டு - என்ரை மோதிரத்தை அடைவு வைச்சு - புது வேட்டிசால்வை - பட்டு வேட்டி கண்டியளோ... புதுச் சேட் - உந்த உத்தியோகத்தர்மார் போடுற சேட் கண்டியளோ...

இதெல்லாம் போட்டுக் கொண்டு குடிபுகுதலுக்குப் போனன்.

சிறாந்தையில நின்ட பண்பாட்டு டொக்டர் தம்பி ஓடிவந்தது. வரவேற்கத்தான். எப்படியும் - நான் ஒரு நெருங்கின உறவு மாமன் எல்லே....!

கிட்ட வந்ததுக்குப் பிறகுதான் விளங்கிச்சுது. அவர் வரவேற்க ஓடி வந்தது - என்னையல்ல எனக்குப் பின்னால வந்த ஒரு முன்னாள் 'வடக்கின் வசந்தம்' ஓப்பிசரைத் தான் வரவேற்க ஓடிவந்தவர் என்டு.

அரசிசிறுத்திக்குப் போறாப்போல ஓய்வு பெற்ற அந்த உத்தியோகத்தருக்கு வரவேற்பென்ட வரவேற்பு..... அதுவும் ஒரு பண்பாடு தான். அவரை இருத்திப் போட்டு - அவருக்குப் போட்டு வைச்சி - 'கூல்றிங்' எடுக்கவும் அந்தத் தம்பிதான் ஓடிக்க.... மற்றாக்களுக்கென்டால் அவையை இருத்திப் போட்டு - ஒரு 'சிக்னல்' போட இருக்கவென்டே ஏற்பாடு செய்த ஆக்கள் கொண்டு வருகினம். இது அந்தத் தம்பி தானே எடுக்கப் போயிட்டுது. ஒரு பண்பாடுதான். என்னை வரவேற்பாருமில்லை. இருக்கச் சொல்லுவாருமில்லை..... அது சரி... அது என்ரை வீடு மாதிரி... ஆர் என்னை வரவேற்கவேணும்?..... என்ரை குஞ்சுகள் நல்லா இருக்கவேணும் என்டு மனதுக்கை ஆசீர்வதிச்சுக் கொண்டு....... போய் ஒரு கரையில - கதிரை எடுத்துப் போட்டுக் கொண்டு இருந்தன்..... ஆரார் வருகினம்... என்டு விடுப்புப் பார்த்துக் கொண்டு இருந்தன் என்டு சொல்லுறனிலேயன்......

கூல் றிங்ஸ்லோட வந்த பண்பாட்டு டொக்டர்தம்பி - அதை அவசரமாக ஒரு மேசையில போடாக் குறையா வைச்சிட்டு - கேற்றடிக்கு ஓடிச்சுது....

அங்கை வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தையில 'ஓப்பிசர்'....

உண்மையில சொன்னால் 'பம்ப்' எரியாமலே போட்டோ எடுக்கலாம்.... அப்பிடி அந்தப் பண்பாட்டு டொக்டரின்ர பல்முழுக்கப் பளிச்சிட வரவேற்பு.... பொட்டு எல்லாம் போட்டு... மாலை போடாக் குறையாக........

அவரைக் கையைப் பிடிச்சு அழைச்சுக் கொண்டு வந்தார்.

பழைய ஓப்பிசருக்கும் - புது ஓப்பிசருக்கும் சரிபட்டு வராதாம்.... அதனால் - இப்ப கட்டிக் கொண்டு போனவரை வீட்டு 'ஹோல்'லை ஹோல் - வண்டர்ஸ் முந்தி எங்கட வீட்டு 'மால்' மாதிரி - வாற போற ஆக்களை இருத்திக் கதைக்க........ நல்ல வடிவானான - வசதியான பெரிய வீடுதான்......

சாப்பிட வரச் சொல்லிக் கேக்க மனமன வென்டு எழும்பிப் போனன்... பெரிய பெரிய ஆக்களுக்கு 'டைனிங் ரேபிள்'ளை. எங்கட 'டைனிங் ரேபிள்' மாதிரி பெரிய டைனிங் ரேபிள் தான்...

பொதுவான உறவுகள் சனத்துக்கு சிறாந்தையில பாய் விரிச்சு - வரைமுறையில்லை..... அதுதானை பண்பாடு...

அவசரப்படுத்த சனம் இடம் பிடிக்கேக்குள்ள... நானும் ஒரு கரையில பாயில இருந்தன்.

இலை வைக்கக் கொண்டு வந்தாங்கள்.... வடிவாகத்தான் ஏற்பாடுகள்.... ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பொறுப்பாளர்.

இலைபோட்டுக் கொண்டு வந்தவர், என்ரை இடத்துக்கு வந்த உடனை 'ஐயா.....' இது உள்ளுக்குப் போற பாதை.... இதில இருந்தால் ஒன்டும் செய்ய ஏலாது.... அடுத்த சபைக்கு வாறியளோ?..... "மரியாதையான பிள்ளை...., வலு பக்குவமாகக் கேட்குது... இது எங்கட வீடு... இப்ப சாப்பிட்டால் என்ன? பேந்து சாப்பிட்டால் என்ன?..., எழும்பிவிட்டன்.....

நூஞ்சாறு பேர் சாப்பிட்டு எழும்பின உடனை அந்தத் தம்பி தேடி வந்து - 'ஐயா வாங்கோ' என்டு கூட்டிக் கொண்டு போச்சுது.... சும்மா தட்டிப் போட்டு - இருக்கப் போக இன்னொரு ஏற்பாட்டாளர் ஓடிவந்தார்.... மூன்று ஆக்களும் எழும்பின உடனை - ஒருக்கால் கூட்டி ஒதுக்கிப் போட்டுத்தான் அடுத்த சபை...... ஐயா கொஞ்சம் வெளியில அப்பிடி இருக்கிறியளோ...."

வலு மரியாதையான பிள்ளையள்... வலு பக்குவமாகத்தான் கேட்டுதுகள்.... இது எங்கட வீடுதானை... எப்ப சாப்பிட்டால் என்ன?..

வெளியில போய் இருந்திட்டன்.

சபை முடிஞ்சு - கூட்டி - பாயையும் ஒருக்கால் தட்டிப் போட்டிட்டு - இரண்டாம் சபைக்கு ஆக்களைக் கூப்பிட்டிச்சினம்.

போயிருந்திட்டன்.. இன்னும் சின்னப் பிள்ளையள் நாலைஞ்சு - இன்னுமொரு ஆறேழு ஆம்பிளையள் - வலு மும்மரமாக அங்கையும், இஞ்சையும் கரண்டியும் கையுமாகப் போய்வந்த இன்னொரு ஏற்பாட்டாளர்...."இது பொம்பிளையள் இருக்கினம்... அவை சாப்பிட்டப் பிறகு சாப்பிடலாம்.... கொஞ்சம் வெளியில இருக்கிறியளோ?...." வலு மன்றாட்டமாகக் கேட்டுதுகள்...., சரி என்டிட்டு வெளியில வந்து இருந்திட்டன்.

(24 ஆம் பக்கம் பார்க்க)


## அரச பாதுகாப்பு அமைச்சின் அறிவித்தல்

அரச சொத்துக்களின் முறை சாரா சட்ட ரீதியாக அமையாத முறையில் தங்கியிருக்கின்ற, கைப்பற்றிக் கொண்டிருக்கும் அல்லது அனுபவிக்கும் நபர் அல்லது முறைசாரா சங்கங்கள் பற்றி செயல்பட குற்ற பரிசீலனைத் திணைக்களத்தினூடாக விஷேட விமர்சன பிரிவு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இது சம்பந்தமாக நீங்கள் அறிந்த பிழையற்ற விடயங்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது தொலை நகல் (பக்ஸ்) மூலம் பெற்றுத்தர முடியும்.
- விடயங்களை இரகசியப்படுத்திக் கொள்வோம்.

### அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

பிரதி பொலிஸ் அதிபர் குற்ற பரிசீலனைத் திணைக்களம்

- தொ.பே.எண் 011 2328138 தொலை நகல் (பக்ஸ்) 011 2326937
- குற்றவியல் பரிசீலனைத் திணைக்களத்தின் விஷேட பிரிவு 1933
- தொ.பே.எண் 011 2422176 தொலை நகல் (பக்ஸ்) 0112 380380


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளஸ்டர் குண்டுகள் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்ட ஒப்பந்தம் 2010-ம்ஆண்டில் கைச்சாத்தான போது அதில் அறுபது நாடுகள் கையெழுத்திட்ட போதிலும் இலங்கையும் அமெரிக்காவும் அதில் கையெழுத்திட்டிருக்கவில்லை.**

# கிளஸ்டர்குண்டு

## பாவனைத்தடை ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திடாதது ஏன்?

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரச படையினர் மேற்கொண்டிருந்த யுத்தத்தின் இறுதித்தருணங்களில் அரசபடையினர் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேசமட்டத்தில் இலங்கை அரசுக்குப் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்ற போதிலும் போரின் இறுதிநாட்களில் தமது படைத்தரப்பினர் ஒரு தமிழ்ப்பொதுமக்களையும் கொல்லவில்லை. தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டுகள் மற்றும் இரசாயனக்குண்டுகள் எவையும் போரின்போது பயன்படுத்தப்படவில்லை. அரச படையினர் சர்வதேச போர் நியமங்களுக்கு அமைவாகவே போரை முன்னெடுத்தார்கள் என்றெல்லாம் அரச தரப்பினரும் படையதிகாரிகளும் எப்படித்தான் உரக்கக்கூறினாலும் அவற்றையெல்லாம் மேற்குலகம் செவியில் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் போரின் இறுதிநாட்களில் அரசபடையினர் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் அனைத்தையுமே சனல்-4 தொலைக்காட்சியும் விக்கிலீக்ஸ் இணையத்தளமும் தெட்டத்தெளிவான முறையில் வெளிக்கொணர்ந்துவிட்டன. அத்துடன் படைத்தரப்பினர் போரின்போது கொத்துக்குண்டுகளையும் இரசாயன(பொஸ்பரஸ்) குண்டுகளையும் பயன்படுத்தினார்கள் என்பதை போர்வலயத்திற்குள் அகப்பட்டிருந்த அத்தனை மக்களும் நன்கறிவார்கள். இந்தநிலையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு அண்மித்த இடமொன்றில் வெடிக்காத நிலையிலிருந்த கொத்துக்குண்டு மீட்கப்பட்டதை ஐ.நா.கண்ணிவெடியகற்றும் நிபுணர் திரு.அலன் பௌல்டன் உறுதிப்படுத்தியிருக்கின்ற விடயமானது இலங்கை அரசுக்கு போர்க்குற்றங்கள் தொடர்பாக மேலுமொரு தலைவலியைக் கொடுத்துள்ளது. இந்தச் சம்பவமானது அரசபடையினர் போர்க்காலங்களில் சர்வதேச நியமங்களிலிருந்து விலகிச்செயற்பட்டுள்ளார்கள் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கின்றது. ஆனால் இதன் பின்னரும் போர்க்காலத்தில் படைத்தரப்பினர் கொத்துக்குண்டுகளைப் பயன்படுத்தவில்லை என்று இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரியவும் இலங்கை கடற்படை அதிகாரிகளும் மறுப்புத் தெரிவித்திருக்கின்றமையானது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் செயலாகவே அமைகிறது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் குறிப்பிட்ட கொத்துக்குண்டு மீட்கப்பட்டதற்கு அண்மித்த இடத்திலேயே சில வாரங்களுக்கு முன்னர் சிறுவர்கள் இரும்புத்துண்டுகள் சேகரித்துக்கொண்டிருந்தபோது அதற்குள் வெடிக்காதநிலையிலிருந்த வெடிபொருள் ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்ததுடன் அவனது சகோதரி படுகாயமடைந்திருந்ததுவும் குறிப்பிடத்தக்கது. இந்தச்சம்பவத்தையடுத்தே குறிப்பிட்ட வெடிக்காத நிலையிலிருந்த குண்டு மீட்கப்பட்டு அது கொத்துக்குண்டுதான் என்பதை ஐ.நா.கண்ணிவெடியகற்றும் நிபுணர் உறுதிப்படுத்தியிருக்கின்றமையானது அப்படியே வெளிப்படுத்தியுள்ளது. இந்தவிடயங்களில் இலங்கை அரச தரப்பினர் என்னதான் துள்ளிக்குதித்து குத்துக்கரணம் அடித்தாலும் ஐ.நா.சபை மசிந்துவிடப்போவதில்லை.

இலங்கையில் ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் சொல்வது ஒன்று செய்வது வேறொன்று. போரின் இறுதிநாட்களில் இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியின் வேண்டுகோளுக்கு அமைவாக இலங்கை அரசு வன்னியுத்தத்தில் தமது படைத்தரப்பினர் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தமாட்டார்கள் என்று அறிவித்திருந்த போதிலும் யுத்தம் முற்றுப்பெறும் நாள்வரையிலும் படைத்தரப்பினர் கனரக ஆயுதங்களை தாராளமாகவே பயன்படுத்தினார்கள் என்பதற்கு வெள்ளாம் முள்ளிவாய்க்காலிலிருந்து இறுதிக் கட்டமாக வெளியேறிய இரண்டு லட்சம் மக்களும் சாட்சிகளாக உள்ளனர்.

போர்க்காலத்தில் கிளஸ்டர் குண்டின் தாக்குதலுக்கு இலக்காகி பாதிக்கப்பட்ட ஒருவரை தாம் நேரில் கண்டதாக மருத்துவப் பணியாளர் ஒருவரை மேற்கோள்காட்டி ஏ.பி.நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது. பாதுகாப்புக் காரணங்களுக்காக மருத்துவப் பணியாளர் தனது பெயரை வெளியிடவில்லை. யுத்த நாள்களில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையைச் சூழ வித்தியாசமான வெடிச்சத்தங்கள் கேட்டன. பாரிய வெடிச்சத்தத்துடன் குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து சிறியகுண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. அந்தச்சந்தர்ப்பத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காயப்பட்டனர். காயங்கள் பலமானதாகவிருந்ததால் அதற்கான காரணிகளை மருத்துவர்களால் கண்டறியமுடியவில்லை. இது கிளஸ்டர் குண்டுகளாக இருக்கலாமென நம்பப்படுகிறது. இந்தச்சம்பவத்தையடுத்தே புதுக்குடியிருப்பு மருத்துவமனை மாத்தளன்பகுதிக்கு இடம்மாற்றப்பட்டது. இதையடுத்து சிலநாட்களின் பின்னர் காலில் காயத்துடன் மருத்துவமனைக்கு ஒருவர் வந்திருந்தார். மருத்துவர்கள் அவரதுகாயத்தை சத்திரசிகிச்சை செய்தவேளையில்தான் கிளஸ்டர் குண்டின் பாகமொன்று வெடிக்காத நிலையில் அவரது காலுக்குள் புதைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

அதை அந்தநிலையிலேயே வைத்து செயலிழக்கச் செய்வது ஆபத்தான விடயமாகக் கருதிய மருத்துவர்கள் அவரின் முழங்காலுக்குக் கீழ்ப்பகுதியை வெட்டி அகற்றிவிட்டனர். அதன்பின்னர்தான் அந்த உலோகத்தாலான குண்டுச் சிதறல் வெளியே எடுக்கப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டது ஐ.நா.வெடிபொருள் நிபுணரிடம் கையளித்திருந்த போதிலும் அது கிளஸ்டர் குண்டுதானா? இல்லையா? என்பதை உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் அந்த வெடிபொருள் நிபுணர் தெரிவித்திருந்தார். மேலும் இந்தவருடம் பெப்ரவரிமாதத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கொத்துக்குண்டுகளின் சிலபாகங்கள் மீட்கப்பட்டதாக ஐ.நா.கண்ணிவெடியகற்றும் நிபுணர்குழுவின் அதிகாரி ஒருவர் தமக்கு தெரிவித்திருந்ததாகவும் அந்தமருத்துவப்பணியாளர் கூறியதாக ஏ.பி.செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது.

கிளஸ்டர்குண்டுகள் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்ட ஒப்பந்தம் 2010-ம்ஆண்டில் கைச்சாத்தான போது அதில் அறுபதுநாடுகள் கையெழுத்திட்ட போதிலும் இலங்கையும் அமெரிக்காவும் அதில் கையெழுத்திட்டிருக்கவில்லை. அதாவது 2009-ம்ஆண்டில் இலங்கையில் நீண்டகாலமாக நடைபெற்றுவந்த யுத்தம் முற்றுப்பெற்றுள்ள நிலையிலும் இனிமேல் ஒரு ஆயுதப்போராட்டம் தோற்றம்பெறுவதற்கான ஏதுவானகாரணிகள் எதுவும் இல்லாத நிலையிலும் கிளஸ்டர் குண்டு பாவனைத் தடையொப்பந்தத்தில் கையெழுத்திடுவதை இலங்கை தவிர்த்திருக்கின்றமையானது அனைத்துலகச் சமூகம் இலங்கை அரசின் மீது கொண்டுள்ள சந்தேகக்கண்ணோட்டத்தை வலுப்படுத்துவதாகவே அமைகிறது.

ஐ.நா.கண்ணிவெடியகற்றும் குழுவினர் வன்னியில் கண்ணிவெடியகற்றும் பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டிருக்கின்ற வேளையில் தொடர்ந்துவரும் நாட்களிலும் இவ்வாறான கொத்துக்குண்டுகள் மேலும் மீட்கப்படும் பட்சத்தில் அது அனைத்துலகச் சமூகமட்டத்தில் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரிசிக்கேசன்

## பம்பல்... (23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த கையோட இந்த பண்பாட்டு டொக்டர் தம்பி - ஒருவழியில என்ர மருமகன் - உள்ளுக்கை இருந்திட்டு வாறதைக் கண்டிட்டு, "மாமா சாப்பிட்டிட்டியளோ?" என்று கேட்டபடி வந்தார். "இருக்கிறதும், எழும்புறதும், மெழுகுமாய், எங்கைதம்பி சாப்பிடக் கிடைச்சது....." எண்டு சொல்லுறதுக்கிடையில பிரதம விருந்தினர்களை வரவேற்க கேற்றடிக்கு ஓட்டமும் நடையுமாய் போய்க் கொண்டிருந்தார்.

நான் சொன்னது அவற்ர காதில விழுந்ததோ தெரியல்லை....

வீட்டை போன உடனை தம்பி எழுதி டொக்டரேற் பட்டம் பெற்ற யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தன். 'உண்ணீர் உண்ணீர்' என்று உபசரியார் வீட்டில் உண்ணாமை கோடிபெறும்..... நல்லவடியாய் எழுதியிருக்குது தம்பி......

சாப்பாட்டுக் கதை சொன்னாப் போலதான் சின்னவிலை நடந்தது ஞாபகம் வருகுது. நான் அந்த நட்சத்திரம் பாருங்கோ... கொஞ்சம் விடாப்பிடிதான்... பதின்மூண்டு, பதினாலு வயதிருக்கும்..... வீட்டில கோபிச்சுக் கொண்டு பின்னேர பஸ் எடுத்து மண்டைதீவுக்குப் போயிட்டன். மாமா வீட்டை தங்கினன்... மத்தியானமும் சாப்பிடயில்லை நல்ல பசி....

கோபிச்சுக் கொண்டு வந்ததெண்டால் மாமா அடிச்சுப் போடுவார். போய்ச் சேர இரவு 10.00 மணி பட்ட பஸ்சில தானே போனது.

பொக்கற்றில போதியளவு காசு இருக்கேல்லை - சாப்பிட்டுட்டுப் போறதுக்கு.

போன உடனை மாமி சாப்பிடச் சொல்லிக் கேட்டா....

'இல்லை மாமி....' நான் சாப்பிட்டுட்டு வந்தனான் எண்டிட்டன்.

பத்து பத்தரைக்குப் பிறகுதான் அவை இரவுச் சாப்பாடு சமைக்கிறவை. உடனை பிடிச்சுக் கொண்டு வந்த மீன் பொரியல் மணம் மணக்க.... பசி டபிள் மடங்காய் போச்சுது.

கொட்டாவி விட, மாமா கேட்டார் மருமோன்.. கொஞ்சமா பிட்டுச் சாப்பிட்டுப் படுங்கோ... எண்டார். எடுத்த உடனை - வேண்டாம் எண்டிட்டன்.... சரியான பசி... இனிக் கேட்டால் சாப்பிடுறதுதான்.... மீன் பொரியல் மணம் வேறை.... பொரிக்கிற 'ஸ்.....ஸ்....' சத்தமும் பசியைக் கூட்டத் தொடங்கிட்டுது. "மருமோன் கொஞ்சமா சாப்பாடு கொண்டு வரட்டோ...." இது மாமி. டப்பெண்டு... வேண்டாம் எண்டுட்டன். பிறகுதான் யோசிச்சன் அவசரப்பட்டிருக்க வேண்டாம் எண்டு....

இனிக் கேட்டால் சாப்பிடுறதுதான்.... கொட்டாவி அடக்க முயற்சி செய்தும் தானாக வந்திட்டுது.

"மருமோன் கொட்டாவி விடுகுது பசிபோல இருக்குது" எண்டு மாமி சொல்ல... "இல்லை....இல்லை அது நித்திரைக் கொட்டாவி" எண்டு மாமா சொல்லிக் கேட்குது.

அண்டைக்கு இரவு முழுக்க தம்றல்... கொட்டாவி தான்:

விடிய வெள்ளாப்போடை ஆறுமணி பஸ்சில வீட்டுக்கு வந்திட்டன். கோபமும் போயிட்டுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# ஹீரோ கொண்டா ஹீரோக்கள்!




இ.அரவிந்தன்,
வேலணை.
**கேள்வி:** மீனுக்குத் தலையையும் வாலையும் காட்டும் விதத்தில் நடந்து தமது காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் ஒருசிலர் பற்றி.....
**பதில்:** அவ்வப்போது வாய்க்கும்; எப்போதும் வாய்க்காது.



வே.தமயந்தி,
மட்டக்களப்பு.
**கேள்வி:** 'ஹீரோ கொண்டாவில்' வளைய வரும் இளைஞர்கள் அத்தனை பேரும் ஹீரோக்கள் தானா பித்தரே?
**பதில்:** அவர்களுள் பல வீரோக்களும் அடக்கம்.

உ.வே.மகேஸ்வரன்,
பரந்தன்.
**கேள்வி:** கன்னிப் பெண்ணையும் நாள்காட்டியை (கலண்டர்)யும் ஒப்பிடுங்கள் பார்க்கலாம்.
**பதில்:** காலம் கடந்தால் இரண்டின் மதிப்பும் குறைந்து போய்விடும். 'காலத்தே பயிர் செய்' என்பது முதுமொழி.



ம.ரவீந்திரன்,
கொழும்பு.
**கேள்வி:** வளர்ந்து வரும் இளைஞனுக்கான உமது புத்திமதி என்ன?
**பதில்:** இருபதில் அழகனாக, முப்பதில் பலவானாக, நாற்பதில் செல்வந்தனாக, ஐம்பதில் அறிவாளியாக வாழ வேண்டும் என்ற இலட்சியத்தோடு செயற்பாட்டால் வாழ்க்கை சிறக்கும்.



அ.ரேவதி,
திருகோணமலை.
**கேள்வி:** பணத்துக்கும் புகழுக்கும் தொடர்பு உண்டா பித்தரே?
**பதில்:** நெருங்கிய தொடர்புண்டு. இப்போதெல்லாம் பணத்தைப் பயன்படுத்திப் புகழையும், புகழைப் பயன்படுத்திப் பணத்தையும் ஈட்டிக் கொள்வதே வழக்கமாகிவிட்டுள்ளது.

மு.வேலாயுதம்,
மட்டக்களப்பு.
**கேள்வி:** உலகிலே இன்று மிகப் பெறுமதி மிக்க புத்தகம் எது பித்தரே.
**பதில்:** சந்தேகமென்ன; அது நிச்சயம் காசோலைப் புத்தகம் தான்.

ப.பார்த்திபன்,
கைதடி.
**கேள்வி:** சிலர் தமது கடிதத் தலைப்பில் தாம் பெற்ற பட்டங்களையும் வகித்த பதவிகளையும் போட்டுக் கொள்கிறார்களே?
**பதில்:** மற்றவர்கள் பார்வையில் கணிப்பில் தெரிகிற மாதிரி தாம் அவ்வளவு தரம் குறைந்தவர்களல்ல என்பதை வெளிக்காட்டுவதற்காகப் போலும்.



வை.கோபாலசிங்கம்,
பூநகரி.
**கேள்வி:** இந்த உலகத்தில் மனிதன் அடைய விரும்புவது எவை பித்தரே?
**பதில்:** அழகு, பணம், அதிகாரம் என்று வாழ்நாள் முழுவதும் தேடி அலைவதில் அவன் நிம்மதியை இழக்கிறான் என்பதே யதார்த்தம்.

ச.கனகசபாபதி,
வவுனியா.
**கேள்வி:** ஒரு நண்பன் பகைவனாக மாறுவதற்கு காரணமென்ன பித்தரே?
**பதில்:** எதை மனதில் வைத்துக்கொண்டு கேட்கிறீர்கள் என்று புரியவில்லை. துன்னலம் கருதாத தூய நட்புக்கு பிரிவே இல்லை. அது சரி கொடுத்த கடனை நண்பனிடம் திருப்பிக் கேட்டீரா?

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 520

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | | ■ |
| ■ | 13 | | 14 | | | ■ | 15 |
| 16 | | | | ■ | 17 | 18 | |
| 19 | | | ■ | 20 | | | |
| 21 | | ■ | 22 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. பாதுகாப்புத் தருவது
02. சந்தி
03. இரு மனங்களைப் பிணைப்பது
04. பெரிய பள்ளம்
05. இது சிறிது காரம் பெரிது
08. தாழ்ப்பம்
10. மலை
11. செருக்கு
12. நனைந்த
13. ஒரு பிரபந்த வகை
14. பிழையல்ல
15. முற்கால ஆயுதம்
16. அயர்ச்சி
18. பிழை
20. அதிகம் ஆனால் பலவல்ல

### இடமிருந்து வலம்

01. ஈழத்துத் திருத்தலங்களில் ஒன்று
06. காயத்தால் ஏற்படுவது
07. மழை
08. வீட்டில் வளர்க்கும் மிருகம்
09. பல வீடுகளில் இது பானுக்கு பக்கபலம்
11. வடிவு
12. கொடை
13. நேர நெருக்கடியுடன் வருவதை இப்படிக் கூறலாம்
16. திண்டாடு
17. கால்
19. அமெரிக்காவின் எதிரியாகவிருந்த ஒருவர்
20. ஆபத்தைக் குறிக்கும் நிறம்
21. நினைவு நாள்
22. அலட்டு/தண்ணீரில் கழுவு.

### சொற்சிலம்பம் போட்டி இல. 520

சொற்சிலம்பம் 520 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதி திகதி 2012 ஆம் ஆண்டு மே 20ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 27ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டம் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி வாரம் அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல: 517 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.சதுப்பு, 02.மணி, 03.துவாரம், 04.வடம், 05.என்றும், 08.முற்றம், 09.கனதி, 10.பதிகம், 12.திகதி, 15.நறார், 16.மக்கு, 17.சாவு, 18.கவடும், 19.தாதி, 20.நவ

**இடமிருந்து வலம்**

01.சமத்துவம், 06.துணி, 07.வட, 08.முன், 09.கரம்பற்று, 11.புதினம், 13.திறம், 14.கதி, 15.நகம், 16.மதி, 17.சாறம், 19.தாவம், 20.நடு, 21.கரும், 22.மௌனம்

### போட்டி இல. 517 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — நூல் ஆனந் றொவேக்கா, துணுக்காய் வீதி, மாங்குளம்.

**2 ஆம் பரிசு** — பா.பாலரஞ்சினி, இல. 1265 நாதன் திட்டம், புன்னைநீராவி, தருமபுரம்.

**3 ஆம் பரிசு** — தி.கனகா, ஊவாக்கலை தோட்டம், மடுல்சீமை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) ஏ.எம். முஸ்தபா,
முனையவளவு வீதி,
ஏறாவூர்-01
(2) செல்வி. பூரணி நாகேந்திரன்,
இல-11-3/1 நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
(3) வ.சண்முகம்,
இல.114, விசுவமடு மேற்கு,
விசுவமடு.
(4) ஷாஜஹான் கலீல்,
இல.61/29, ரூபசிங்கவத்தை,
கண்டி வீதி, திஹாரிய
(5) சின்னையா செல்வராஜ்,
இல.9/5 B10 மஜீத் பிளேஸ்,
அவிசாவெலை வீதி, வெல்லம்பிட்டிய.
(6) செல்வி. இ. அர்ச்சனா,
உதயபுரம்,பெரியகல்லாறு 3,
கல்லாறு.
(7) எஸ். முரளிதரன்,
இல.802/9, புளுமெண்டல் வீதி,
கொழும்பு -15.
(8) கா.சந்திரசேகரம்,
இல.17பி, மன்னார் வீதி,
வவுனியா.
(9) எம்.ஐ.எம். அஷ்ரப்,
இல.489, ஆஸ்பத்திரி வீதி,
சாய்ந்தமருது-07.
(10) செல்வி. சுரேகா குமாரசாமி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்திய அணியின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது 39 ஆவது பிறந்த தினத்தை சண்டிகாரில் மும்பை இந்தியன்ஸ அணி வீரர்களுடன் கொண்டாடியபோது....

# 2 நாள்களில் 3 பேரின் தலைக்கு மாறிய ஒரேஞ் தொப்பி

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளைப் போல இல்லாமல், ஐபிஎல் போட்டிகளில் நவீன கமராக்களின் மூலம் படப்படிப்பு, களத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களிடம் பேட்டி, ஒவ்வொரு ஓட்டத்தினை சேர்க்கும்போதும் நடன மங்கைகளின் ஆட்டம், அதிக சிக்ஸர்களுக்கு பரிசு, சிறந்த பிடிக்கு பரிசு என்று ஐபிஎல் போட்டிகளில் புதுமைகளுக்கு அளவே இல்லை.

ஐபிஎல் தொடர்களில் அதிகபட்ச ஓட்டங்களைச் சேர்க்கும் வீருருக்கும், அதிக விக்கெட்டுகளை வீழ்த்தும் வீரருக்கும் வர்ணத் தொப்பிகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவது வழக்கம். இதன்படி அதிகபட்ச ஓட்டங்களைச் சேர்க்கும் வீரருக்கு ஒரஞ்சு நிற தொப்பியும், அதிக விக்கெட்களை வீழ்த்தும் வீரருக்கு கத்திரிப்பூ நிறத்திலான தொப்பியும் வழங்கப்படுகிறது.

அந்தவகையில் ஐபிஎல் 5 தொடரில் அதிகபட்ச ஓட்டங்களைக் குவிக்கும் துடுப்பாட்ட வீரருக்கு அளிக்கப்படும் ஒரஞ்சு நிற தொப்பி, கடந்த சில தினங்களில் (2 நாள்களில்) 3 பேரின் தலைக்கு மாறியுள்ளது. சேவாக், கிறிஸ் கெயில், ராஹானா ஆகிய மூவரும் தமது திறமையான துடுப்பாட்டத்தின் மூலம் மாறி மாறி ஓட்ட எண்ணிக்கையில் முன்னணியில் உள்ளனர்.



பணக்கார திருவிழா என வர்ணிக்கப்படும் ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ் அணியின் நடன அழகிகள் வீரர்களினதும் ரசிகர்களினதும் கண்களைக் குளிர்மையாக்கும்போது.....

# விளையாட்டுத் துளிகள்

★ ஐசிசி டெஸ்ட் தரப்படுத்தலில் இந்தியாவை பின்னுக்கு தள்ளி 3ஆவது இடத்தை பிடித்தது ஆஸ்திரேலியா. மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில், ஆஸ்திரேலியா 2.0 என்ற கணக்கில் தொடரை வென்றதன் மூலம், 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

★ ஐபிஎல் தொடரின்போது நிதி முறைகேடுகளில் ஈடுபட்டதாக புகார் எழுந்ததால், தென் ஆபிரிக்க கிரிக்கெட் வாரிய தலைமை செயலதிகாரி ஜெரால்டு மஜோலா இடைநீக்கம் செய்யப்பட்டார். இந்த நிலையில், அவர் போனசாக தன் கணக்கில் வரவு வைத்துக் கொண்ட ரூ.1 கோடியே 4 லட்சத்தை வாரியத்துக்கு திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று இந்திய விளையாட்டுத் துறை அமைச்சர் பகிலி பாலுலா கூறியுள்ளார்.

# லண்டன் ஒலிம்பிக்குக்கு ஏவுகணைகளும் தயார்


லண்டனில் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டியின் போது, பாதுகாப்புக்காக மக்கள் வசிக்கும் குடியிருப்புகள் மீது ஏவுகணைகளை நிறுத்த இங்கிலாந்து அரசு முடிவு செய்துள்ளது. இங்கிலாந்து தலைநகர் லண்டனில் வரும் ஜூலையில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. தீவிரவாத அச்சுறுத்தல் உள்ளதால், போட்டி நடக்கும் இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கிழக்கு லண்டன் பகுதியில் 700 குடும்பங்கள் வசிக்கும் பகுதியில் ஏவுகணை நிறுத்த இங்கிலாந்து ராணுவம் முடிவு செய்துள்ளது.

தரையில் இருந்து வானில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் அதிக சக்தி வாய்ந்த ஏவுகணைகள், லெக்சிங்டன் பில்டிங் வாட்டர் டவர் மீது நிறுத்தப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

# நீண்ட இடைவெளிக்கு - யுவராஜ் சிங் துடுப்பாட்டப் பயிற்சி ரசிகர்கள் உற்சாகம்

புனே வாரியர்ஸ், டெக்கான சார்ஜர்ஸ் அணிகள் மோதிய போட்டி அண்மையில் புனேயில் நடைபெற்றது. புற்றுநோய் சிகிச்சை முடிந்து வீட்டில் ஓய்வெடுத்து முடங்கி கிடந்த இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் யுவராஜ் சிங் இப்போட்டியைக் கண்டுகழிக்க வந்திருந்தார். அப்போது புனே வாரியர்ஸ் அணியினர் உடன் யுவராஜ் சிங்கும் கலந்து கொண்டு சிறிது நேரம் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபட்டது ரசிகர்களை உற்சாகப்படுத்தியது.

கடந்த 4 மாதங்களாக கிரிக்கெட் விளையாடாமல் இருந்த யுவராஜ் சிங், சில பந்துகளை சந்தித்து ஆடினார். இதனால் புனே வாரியர்ஸ் அணியினரும் உற்சாகமாக இருந்தனர்.



# 2000 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் ரெய்னா

கடந்த 5 ஐபிஎல் தொடர்களில் சிறப்பாக ஆடி வரும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சுரேஷ் ரெய்னா, ஐபிஎல் தொடர்களில் 2,000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

ஐபிஎல் தொடர்களில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் துணைத் தலைவராக இருப்பவர் சுரேஷ் ரெய்னா. கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்ற ஐபிஎல் தொடர்களில் ஒவ்வொரு தொடரிலும் தலா 400 ஓட்டங்களை கடந்தவர் சுரேஷ் ரெய்னா. ஐபிஎல் தொடர்களில் அதிகபட்ச ஓட்டங்களை குவித்தவர்களின் பட்டியலில் முதலிடத்தில் தொடர்ந்து நீடிக்கிறார்.

இந்த நிலையில் அண்மையில் சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதிய போட்டியில் களமிறங்கிய சுரேஷ் ரெய்னா 34 ஓட்டங்களை எடுத்த போது, ஐபிஎல் தொடர்களில் 2,000 ஓட்டங்களை எடுத்த முதல் வீரர் என்ற சாதனையை படைத்தார். அதன்பிறகு 10 ஓட்டங்களை எடுத்த சுரேஷ் ரெய்னா 44 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

சுரேஷ் ரெய்னாவிற்கு அடுத்தப்படியாக மும்பை இந்தியன்ஸ் வீரர் சச்சின் (1,723 ஓட்டங்கள்) 2ஆவது இடத்திலும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் கப்டன் கில்கிறிஸ்ட் (1603 ஓட்டங்கள்) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழு... வாழவிடு!

## தல அஜித் ஆனந்த விகடனுக்கு அளித்த விசேட நேர்காணல்

கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்துட்டு கருத்து சொல்றது ஈஸி. களத்தில இறங்கி நின்னாதான், அது எவ்வளவு கஷ்டம்னு புரியும். 30 வயசுல நம்மால எல்லாம் முடியும்னு தோணும். இப்போ 40 வயசுக்கு மேல நம்மளை மீறி ஒரு சக்தி இருக்கு... அதுதான் எல்லாத்தையும் தீர்மானிக்கும்னு தோணுது. என்னை விமர்சிக்கிற எல்லாருக்கும் அந்தப் பக்குவம் கிடைக்கணும்னு நான் கடவுளை வேண்டிக்கிறேன்.

எனது நடிப்பு முயற்சியைப் பாராட்ட மனமில்லாதவர்கள், என் தோற்றத்தையும் உடல் அமைப்பையும் கிண்டல் செய்கின்றார்கள்.

நான் 15 ஒபரேன்களுக்குப் பிறகு நடிப்பதே பெரிய விடயம், என்கிறார் அஜித் குமார். சமீபத்தில் அவர் ஆனந்த விகடனுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

மங்காத்தாவில் இருந்து என் படங்களை புழுகிப் பேசிறது இல்லை என்று முடிவு பண்ணிட்டேன். அது பில்லா-2-வுக்கும் பொருந்தும். ஜூன் மாதம் படம் வெளிவருகின்றது. இதுக்கு மேல் இப்போதைக்கு எதுவும் இல்லை.

### மனதை பாதித்த விமர்சனம்

படம் நல்லா இருக்கா இல்லையானு சொல்லாம, சிலர் நான் குண்டா இருக்கேன்னு விமர்சிக்கிறாங்க. 15 ஒபரேன் களுக்குப் பிறகு என் உடல்நிலையே மாறிடுச்சு. நான் ரெண்டு காலையும் ஊன்றி நடக்கிறதே பெரிய விசயம். அதை நினைச்சு நான் சந்தோசப்படுறேன்.

நான் நல்ல டான்ஸரா இல்லாம இருக்கலாம். ஆனா, அதுக்காக முயற்சி பண்றேன். இவ்வளவு சிகிச்சைகளுக்குப் பிறகும் ஹெலிகாப்டரில் இருந்து குதிக்கிறேன், சண்டை போடுறேன். ஆனா, தொடர்ந்து என் பேர்சனல் தோற்றத்தை சிலர் கிண்டல் செய்றது வருத்தமா இருக்கு.

### எதிர்மறை விமர்சனங்கள் குறித்து

என்கிட்டயே நிறையப் பேர் சொல்லியிருக்காங்க பிறந்தா அஜித்குமாராப் பொறக்கணும் என்று. அஜித் குமாருக்கு என்னல்லாம் கஷ்டம் இருக்குஎன்று, அஜித் குமாரா வாழ்ந்து பார்த்தால்தான் தெரியும். சச்சின் டெண்டுல்கர் இப்படி ஆடணும்னு சொல்றது ரொம்ப ஈஸி. ஆனா, கோடிக்கணக்கான ரசிகர்களின் எதிர்பார்ப்புகளைச் சுமந்துக்கிட்டு விளையாடுற சச்சின் டெண்டுல்கருக்குத்தான் அது எவ்வளவு கஷ்டம் என்று தெரியும்.

கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்துட்டு கருத்து சொல்றது ஈஸி. களத்துல இறங்கி நின்னாதான், அது எவ்வளவு கஷ்டம்னு புரியும். 30 வயசுல நம்மால எல்லாம் முடியும்னு தோணும். இப்போ 40 வயசுக்கு மேல நம்மளை மீறி ஒரு சக்தி இருக்கு... அதுதான் எல்லாத்தையும் தீர்மானிக்கும்என்று தோணுது. என்னை விமர்சிக்கிற எல்லாருக்கும் அந்தப் பக்குவம் கிடைக்கணும்என்று நான் கடவுளை வேண்டிக்கிறேன்.

### ரசிகர்களுக்கு


இத்தனை ஆண்டுகளில் ரசிகர்கள் பலம் கூடிக் கொண்டே இருப்பது கடவுள் ஆசீர்வாதம்தான். என் ரசிகர்களுக்கு வெறும் நன்றி சொன்னால், அது முழுமை யாகாது. உண்மையைச் சொல்றேன் தினமும் காலையில் கடவுளை வேண்டும்போது என் ரசிகர்களுக்காகவும் வேண்டிக்கிறேன். நான் இன்னைக்கு சினிமாவில் இருப்பேன். நாளைக்கு இல்லாமலும் போவேன். ஆனா, ஒரு அண்ணனா என் ரசிகர்களுக்கு ஒரு வேண்டுகோள். அட்வைஸ் என்று தப்பா நினைக்கா தீங்க. உங்க தன்மானத்தை யாருக்காகவும் விட்டுக்கொடுக்காதீங்க.

உங்க வேலையை 100 சதவிகிதம் ரசிச்சு செய்யுங்க. நல்லாப் படிங்க. நான் பத்தாவது வரைக்கும்தான் படிச்சேன். வாழ்க்கையில் கஷ்டப்பட்டுத்தான் பல வியங்களைக் கத்துக்கிட்டேன். ஆனா, அந்த ரூட் ரொம்பக் கஷ்டம். படிச்சிருந்தா இவ்வளவு அடிபட்டு வந்திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காதே. அதனால நல்லாப் படிங்க. யாரையும் கண்மூடித்தனமா நம்பாதீங்க. யார் பின்னாடியும் போகாதீங்க. மத்தவன் காலை மிதிச்சு முன்னேறாதீங்க.

சிம்பிளா சொல்றேன்... வாழு... வாழவிடு!

இவ்வாறு ஆனந்தவிகடனுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் தெரிவித்துள்ளார் அஜித்.

ஒவ்வொரு மனுசனும் எப்படி வாழ்ந்தான் என்கிற அடையாளம், அவன் சாவுக்கு கூடுற கூட்டத்தில்தான் தெரியும்னு சொல்வாங்க. என் சாவுக்குக் கூடுற கூட்டம், அஜீத்குமார் யார்னு நிச்சயமா இந்த உலகத்துக்கு எடுத்துக்காட்டும்.






## வாழ்க்கைப் பயணத்தில்...

### பிறப்பு

மே 1, 1971 இல் ஹைதராபாத் நகரில் இரண்டாவது மகனாகப் பிறந்தார். தந்தை (பி.சுப்ரமணியம்) தாய் (மோகினி) அஜித்திற்கு இரண்டு சகோதரர்கள். அனுப் குமார் (நியூயார்க்), அனில் குமார் (சென்னை) மேலும், அஜித்திற்கு இரட்டை சகோதரிகள் இருந்தார்கள். இருவரும் இளம் வயதிலேயே இறந்து விட்டார்கள்.

### இளமைக் காலம்

1986 இல் அசன் மெமோரியல் பள்ளியில் மேல்நிலைப் படிப்பை முடிக்காமலே படிப்பைக் கைவிட்டார். அதன் பிறகு அவர் ஒரு இரண்டு சக்கர ஆட்டோ மெக்கானிக் ஆக வேலை பார்த்தார்.

அவருக்கு ஓட்டுனர் உரிமம் கிடைத்தவுடன் அவரது கவனம் முழுவதும் கார் மற்றும் பைக் பந்தயத்தில்தான் இருந்தது. பின் ஒரு ஆடை ஏற்றுமதி நிறுவனத்தில் பணிபுரிந்தார். இடையிடையே சிறிய பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்களில் நடித்து வந்தார்.

தனது 20 ஆம் வயதில் தெலுங்கு படம் ஒன்றில் நடிக்க வாய்ப்பு வந்தது. படம் முடியாமலே இந்த இயக்குனர் மரணம் அடைய படம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இதன்பின் 1992 ஆம் ஆண்டில் (வயது 21) மீண்டும் குறைந்த பட்ஜெட் தெலுங்கு படமான பிரேம புஸ்தகம் படம் இவருடைய திரைப்பட வாழ்க்கையைத் தொடக்கியது. இதனைத் தொடர்ந்து தமிழில் முதல் முதல் நடித்த படம் அமராவதி.

### உறவு

1999 இல் அமர்க்களம் படத்தில் இணைந்து நடிக்கும்போது அஜித், ஷாலினி இருவருக்கும் காதல் ஏற்பட்டது. இருவர் வீட்டிலும் பச்சைக் கொடி காட்டவே 2000 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். சுமார் 8 வருடம் கழித்து இந்த தம்பதியர்க்கு ஜனவரி 3, 2008 ஆம் ஆண்டு அழகான பெண் குழந்தை (அனுஷ்கா) பிறந்தது.

### கார் பந்தயம்

தனது திரைப்பயணத்தில் காதல், நகைச்சுவை, அதிரடி த்ரில்லர் என பல்வேறு பரிணாமங்களில் பயணித்த அஜித் சிறந்த நடிகருக்கான மூன்று பிலிம்பேர் விருதுகளை வென்றுள்ளார். அவரது தனித்திறமை வெளிப்படுத்தும் வகையில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரிட்டிஷ் ஃபார்முலா கார் பந்தயத்தில் கலந்து கொண்டு இந்தியாவில் மூன்றாவது சிறந்த மோட்டார் கார் இயக்கி என்ற பெருமையையும் தட்டிச் சென்றார்.

### தலைக்கனம் இல்லாத தல

நடிப்பு என்பது என் தொழில், அதனைத் தாண்டி நான் எல்லாரைப் போல ஒரு சாதாரண குடிமகன் என்று சொல்லும் அஜித் தன்னை எதிலும் முன்னிலைப்படுத்தி கொள்வதில்லை. சென்றமுறை தேர்தலில் வாக்களிக்கச் செல்லும்போது கூட மக்களோடு மக்களாக நின்று தான் வாக்களித்தார். இவ்வளவு பெரிய நடிகர் மக்களோடு மக்களாக நிற்கிறாரே என்று ஆச்சரியமாக பேசினார். தற்போது அஜித் நடித்து வரும் பில்லா 2 படம் வெளிவரும் நிலையில் உள்ளது. இந்த பில்லா 2 இன் படப்பிடிப்புக்காக அஜித் விமான நிலையத்தில் பாதுகாப்பு சோதனைக்காக மக்களோடு மக்களாக வரிசையில் நின்று சென்றிருக்கிறார். விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் அஜித்தை அடையாளம் கண்டு அவரை தனியே VIP GATE வழியாக செல்லும்படி கூறியுள்ளனர். இதனை ஏற்க மறுத்த அஜித், பயணிகளுடன் வரிசையில் 40 நிமிடம் காத்து நின்று உள்ளே சென்றார். அஜித்தின் செயலை பார்த்து உடன் இருந்த சக பயணிகள் பாராட்டினர்.

### துணிவு

2010 இல், திரைப்பட துறையினர் மற்றும் அரசியல்வாதிகள் குறிப்பாக அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி கலந்துகொண்ட விழாவில் அஜித் உரை யாற்றும்போது, பொது நிகழ்ச்சிகளுக்கு நடிகர்களை வரச்சொல்லி வற்புறுத்த கூடாது என்று பகிரங்கமாக மேடையில் அறிவித்தார். முதல்வர் இருக்கும் மேடையில் தனக்கு சரி என்றுபட்டதும் தன் கருத்தை சொன்னதே போதும் அஜித்தின் தைரியத்துக்கு எடுத்துக்கட்டாக. இதே மேடையில் அமர்ந்திருந்த ரஜினி கைதட்டி அதனை வரவேற்றமை குறிப்பிடத்தக்கது.

### கூகுளில்...

2011 ஆம் ஆண்டு உலகளவில், கூகுளில் தேடப்பட்ட பத்து படங்களில் அஜித்தின் 50 ஆவது படமான மங்காத்தா ஏழாவது இடத்தை பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அஜித்தின் அடுத்த படம் பில்லா-2 இப்பொழுதே அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

### அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில்..

இப்போது எனக்கு 40 வயசாகிறது. அஜித், இன்னும் 20-வரும் உயிரோட இருப்பேனா என்று கூட தெரியாது. ஒவ்வொரு மனுசனும் எப்படி வாழ்ந்தான் என்கிற அடையாளம், அவன் சாவுக்கு கூடுற கூட்டத்தில்தான் தெரியும் என்று சொல்வாங்க, என் சாவுக்குக் கூடுற கூட்டம், அஜித்குமார் யார்என்று நிச்சயமா இந்த உலகத்துக்கு எடுத்துக் காட்டும், என்று உருக்கமாக கூறியுள்ளார். தெலுங்கு திரையுலகம் மூலம் தனது சினிமா வாழ்க்கையை தொடங்கிய அஜித் தமிழில் அடுத்த வெளியீடாக பிரமாண்டமான செலவுடன் தயாராகும் பில்லா 2 விரைவில் திரைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சீனா மற்றும் ஜப்பான் நாடுகளைத் தொடர்ந்து, தற்போது ரஷ்யாவிலும் மசாஜ் கலாச்சாரம் மிக அதிகமாக அதிகரித்து விட்டது. தற்போது சிறிய உயிரினங்களையும், மசாஜ் செய்வதற்கு பயன்படுத்த தொடங்கியிருக்கின்றனர். அதிலும், ரஷ்யாவில் ஒரு படி மேலே போய், சிறிய அளவிலான நத்தை களை முகத்தில் விட்டு மசாஜ் செய்கின்றனர்.

## 104 வயதுப் பாட்டி பரசூட்டில்.....

வடக்கு சைப்ரஸைச் சேர்ந்த திருமதி பெகி மெக் ஆல்பைன் தன் 104 ஆவது வயதில் 2400 அடி உயரத்தில் பரசூட்டில் பறந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இரு பிள்ளைகள், நான்கு பேரப் பிள்ளைகள் இரண்டு கொள்ளுப் பேரப்பிள்ளைகளைப் உள்ளனர் பெகிக்கு. இவருக்கு மலையேறுவது மிகவும் பிடித்த விடயமாகும். மலையில் ஏறிப்போய் அங்கிருந்து கீழே எறும்புபோலத் தெரியும் மனிதர்களைப் பார்ப்பதில் அவருக்கு மகிழ்ச்சி அதிகம்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு அவர் செய் திருந்த சாதனையை அமெரிக்காவைச் சேர்ந்த 101 வயது பெண்ணான மேரி ஆலன் ஹேடிசன் முறியடித்து விட்டார். எனவே மீண்டும் இப் போது பெகி புதிய சாதனையை படைத்துள்ளார்.

இந்தச் சாதனையை வேறு யாரேனும் முறி யடித்தால் தான் மீண்டும் புதிய சாதனை படைக் கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## கனடாவாசியின் குமுறல் இது

ரொறொண்ரோவில் உள்ள சில கட்டிடங்களில் கிழிந்து கந்தலான நிலையில் தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருப்பது தனக்கு மிகுந்த மன வேதனையை அளித்துள்ளதாக ரொறொண்ரோ நகர வாசி ஒருவர் கூறியுள்ளார். டானியல் டெப்ரீஸ் என்ற நகர வாசி இது குறித்து அவர் கூறுகையில், ரொறொன்ரோவில் தினமும் தான் நடந்து செல்லும் பாதையில் 14 கொலேஜ் தெரு என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தில் கந்தலான நிலையில் கொடி பறந்து கொண்டிருப்பதை பார்ப்பதாகவும் , இது தனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதுடன் நாட்டிற்கே பெருத்த அவமானம் என்றும் கூறியுள்ளார்.

உலகம் முழுதும் உள்ள அனைத்து நாடுகளிலும் எத்தகைய குழப்பங்கள் இருப்பினும் , போரினால் பாதிக்கப்பட்ட நாடுகள் கூட தங்கள் தேசியக் கொடியை மதித்தும் , அங்கீகரிக்கும் வகையிலேயே நடந்து வருகின்றன என்பதையும் நகரவாசி டானியல் சுட்டிக்காட்டியுள்ளார். ஹாக்கி , கால்பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் செலுத்தும் அக்கறையைக் கூட நாட்டின் பெருமையை பறை சாற்றும் தேசியக் கொடிக்கு கனடா, ஒன்றோரோறியோ அரசுகள் அளிக்காமல் இருப்பது வேதனையளிக்கிறது எனவும் தன் குமுறலை ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.

## வசூலில் சாதனை படைத்துள்ள டைட்டானிக்



ஹொலிவுட் இயக்குனர் ஜேம்ஸ் கம ரூனின் 3 டி தொழில்நுட்பத்தில் உருவான டைட்டானிக் திரைப் படம் இந்தியாவில் வசூலில் சாதனை படைத்துள்ளது.

டைட்டானிக் கப்பல் மூழ்கிய 100 ஆவது தினத்தை கொண்டாடும் வகையில் டைட்டானிக் 3டி படம் திரைக்கு வந்தது.

இப்படத்தில் லியோனர்டா டி காப்ரியோ, கேத் வின்ஸ்லெட் ஆகியோர் நடித்துள்ளனர்.

டைட்டானிக் படத்தின் மதிப்பை இந்தியன் பாக்ஸ் ஓபிஸ் நிறுவனம் வெளியிட்டது.

இந் நிறுவனத்தின் இந்திய கிளைக்கு மட்டும் லாபமாக ரூ.18 கோடி கிடைத்துள்ளது. உலகம் முழுவதும் டைட்டானிக் படத்தின் மூலமாக 2.1 பில்லியன் லாபமாக கிடைத்துள்ளது. இதற்கு முன்பு டைட்டானிக் திரைப்படம் 1997 ஆம் ஆண்டு திரைக்கு வந்தபோது ரூ.55 கோடி லாபம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் உலக அளவில் வசூல் சாதனையில் டைட்டானிக் இரண்டாம் இடத்தை தக்க வைத்துள்ளது. ஜேம்ஸ் கமரூனின் இயக்கத்தில் வெளியான அவதார், 2.8 பில்லியன் டொலர்கள் சம்பாதித்து முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, மே 06 ஆம் திகதி வெளியிடப்பட்டது.